# கர்நாடக சங்கீதம்

## ஆசிரியர் வழிகாட்டி

# தரம் 09

**(2018 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்துவதற்கானது)**

அழகியற் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
ஸ்ரீலங்கா
***www.nie.lk***
***info@nie.lk***

**கர்நாடக சங்கீதம்**
தரம் - 09
ஆசிரியர் வழிகாட்டி

முதற் பதிப்பு : 2017

தேசிய கல்வி நிறுவகம்
ISBN

அழகியல் துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீலங்கா
இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல் : info@nie.lk

*பதிப்பு:*

தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலை கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்ட பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது.

பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக்களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவு வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம்பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடை நிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கிய நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களிற்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடுகளையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக்கொண்டு புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது. இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக்கப்பட்ட பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன் பாட்டினை பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள்,புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக்கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய கல்வி முறைமையினால், பூகோள தொழில் சந்தைகளுக்கு தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலாநிதி. திருமதி. ஜெயந்தி குணசேகர
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

# முன்னுரை

# பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப் படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட எந்த ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப் பதற்குமான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்பு களினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டு மெனப் பிரார்த்திக்கின்றேன்.

பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

# அறிமுகம்

வளர்ந்து வரும் நாகரிக வளர்ச்சிக்கேற்ப சமூகத்திலும் பல மாற்றங்களைக் காணக் கூடியதாக இருக்கின்றது. அதற்கிணங்க பாடசாலை கலைத்திட்டத்திலும் மாற்றியமைக்கப்பட வேண்டியது கட்டாயமாகும். அந்த வகையில் தற்கால தேவைகளிற்கமைய பாடசாலை கலைத்திட்டமானது அபிவிருத்தி செய்யப்பட வேண்டியது என்பது கல்வியலாளர்களின் ஒருமித்த கருத்தாகும்.

இசைக்கலையானது நடைமுறையில் உள்ள பாடசாலைக் கலைத்திட்டத்தில் ஒரு பாடமாக இடம் பெறுகின்றது. இசையைக் கற்பதால் மாணவரிடையே உள்ளத்தில் காணப்படும் இரசித்தல் திறன், ஆக்கத்திறன், விமர்சிக்கும் திறன் என்பன வெளிக்கொணரப்படுவதுடன் ஒருவரின் சமநிலை ஆளுமை வளர்ச்சிக்கு இத்திறன்கள் யாவும் விருத்தி செய்யப்படல் அவசியமாகும்.

அன்பு, பக்தி, விட்டுக்கொடுக்கும் மனப்பாங்கு பிறரை மதித்தல் சகோதரத்துவம் பிறநாட்டு இசைகளையும், மக்களின் உணர்வுகளையும் மதிக்கும் பண்பு போன்ற நற்குணங்களைக் கொண்ட பிரஜைகளை உருவாக்குவதில் இசை முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

இரசித்தல் ஆக்கத்திறன், செயன்முறை, அறிமுறை, கலாசாரப் பின்னணி ஆகியவற்றின் கற்றற் பேறு அடைவதற்கான கற்றல் தேர்ச்சிகள் தீர்மானிக்கப்பட்டு அவற்றிற்கமைய இக்கலைத்திட்டத்தின் வடிவமைப்பிற்கமைய 2018 ஆம் ஆண்டு தரம் 9 இற்கான கர்நாடக சங்கீத புதிய கலைத்திட்டம் அறிமுகப்படுத்தப்படுகின்றது.

மாணவர்கள் தேர்ச்சி, தேர்ச்சி மட்டங்களிற்கு ஏற்றவாறு கற்றற்பேற்றை அடைவதற்காக மாணவர்களிடம் உள்ள இயற்கையாக உள்ள திறன்களை உபயோகித்து கற்றல் கற்பித்தல் அணுகுமுறையும் செயற்பாடுகளும் அமையும் முறை, மிகவும் முக்கியமானதாகும்.

**பணிப்பாளர்**
அழகியற் கல்வித்துறை
தேசியகல்வி நிறுவகம்
மஹரகம.

## கலைத்திட்டக் குழு

**ஆலோசனையும் அனுமதியும்** - கல்விசார் அலுவல்கள் சபை

**செயற்றிட்ட இணைப்பாளர்** - செயற்திட்ட அதிகாரி
ஞானஸ்ரீ B. கமகே
விரிவுரையாளர்
அழகியற் கல்வித்துறை, தேசிய கல்வி நிறுவம்

**பாட சிறப்பு ஆலோசனை** - சியாமளாங்கி கருணாகரன்,
விரிவுரையாளர், கிழக்குப் பல்கலைக்கழகம்,
கல்லடி, மட்டக்களப்பு

- ஏ. ஆரூரன்
ஆலோசகர்,
கர்நாடக சங்கீதம், அழகியற் கல்விப் பல்கலைக்கழகம்
கொழும்பு.

**நூலாக்கக் குழு:**

1. திரு. வை. கணேசலிங்கம் - ஆசிரிய ஆலோசகர்
வலயக்கல்வி அலுவலகம், கொழும்பு.
2. திருமதி. வி. நாகேஸ்வரன் - உதவிக் கல்விப்பணிப்பாளர்
வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்.
3. திருமதி. க. ஜெயபாலசிங்கம் - உதவிக் கல்விப்பணிப்பாளர்
வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.
4. திருமதி. க. ஸ்ரீஸ்கந்தராஜா - ஆசிரிய ஆலோசகர்
வலயக்கல்வி அலுவலகம், கொழும்பு.
5. திருமதி. ஜெ. கிருபானந்தமூர்த்தி - ஆசிரியர்
கொ / இந்துக் கல்லூரி, பம்பலப்பிட்டி
6. திருமதி. இ. சண்முகலிங்கம் - உதவிக் கல்விப்பணிப்பாளர்
வலயக்கல்வி அலுவலகம், வவுனியா வடக்கு..
7. திரு. அ. கிருஷ்ணானந்தன் - ஆசிரியர்
யா/ஹாட்லிக் கல்லூரி
பருத்தித்துறை
8. திரு. வ. சண்முகநாதன் - ஆசிரியர்
இ/நிவி/தேலை தமிழ் மகா வித்தியாலயம்
இரத்தினபுரி.

**மொழிச் செம்மையாக்கம்** - திருமதி. ஜெ. கிருபானந்தமூர்த்தி
ஆசிரியை, கொ / இந்துக் கல்லூரி, பம்பலப்பிட்டி

**கணினி வடிவமைப்பு** - திரு. வ. சண்முகநாதன்
ஆசிரியர் இ/நிவி/தேலை தமிழ் மகா வித்தியாலயம்
இரத்தினபுரி.

# ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள்

2018 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள தரம் 9 இற்கான கர்நாடக சங்கீத பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள கற்றல் கற்பித்தல் செயன்முறையை வெற்றிகரமாக நடாத்துவதற்குத் துணைபுரிவதற்காகவே இந்த ஆசிரியர் வழிகாட்டி உங்களிற்கு அறிமுகப்படுத்தப்படுகின்றது. இதனை பயன்படுத்தும் போது பின்வரும் விடயங்கள் குறித்து விசேட கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகின்றது.

- ❖ பாடசாலையின் வருடாந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கமைவாக நேர முகாமை செய்தல்.

- ❖ 5 தேர்ச்சிகளின் கீழ் வரிசைப்படுத்தப்பட்டுள்ள உள்ளடக்கத்திற்கமைவாக 1.0 தொடக்கம் 5.0 வரையிலான செயன்முறை தேர்ச்சிகளின் மட்டங்களுக்காக மாதிரிச் செயற்பாடானது தரப்பட்டுள்ளது. அந்தந்தத் தேர்ச்சி மட்டத்திற்கமைவாக விதந்துரைக்கப்பட்டுள்ள தலைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு திட்டமிட்டுச் செயற்பாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.

- ❖ தாமே ஒரு செயற்பாடுகளைச் செயற்படுத்தும் போது பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவன மெடுப்பது பயனுடையதாகும்.

    - ➢ அழகியல் சார்ந்த அல்லது பாடத்துடன் இணைந்த சுவாராசியமான முன்வைப் பொன்றின் மூலம் களிப்பூட்டத்தக்கவாறு படிக்கும் விடயங்களின் மூலம் மாணவரைப் பாடத்தின் பால் ஈர்த்தல். முன்னறிவை, மீட்டல், ஊக்கமளித்தல் மூலம் பாடச் செயற்பாட்டை அணுகுதல்.
    - ➢ மாணவரது இயல்பான ஆற்றல்களை இனங்கண்டு ஆக்கபூர்வமான கற்றல் கற்பித்தல் முறைகளை மேற்கொண்டு பின்னூட்டலைக் கையாண்டு செயற்பாட்டை இறுதிவரை இட்டுச் செல்லல்.
    - ➢ முன்வைப்புக்கள், மதிப்பீடு, மீளாய்வு, பின்னூட்டல் வேலைகள் ஒப்படைகள் போன்றவற்றை உள்ளடக்கி ஒட்டுமொத்தப் பாடத்தை நிறைவு செய்தல்.
    - ➢ இந்த ஆசிரியர் வழிகாட்டி ஒரு வழிகாட்டல் மாத்திரமே ஆகும். பாடம் சார்ந்த நூல்கள், இணையத்தளங்கள் போன்ற ஊடகங்களை உசாவுதல் மூலம் மாணவர் அறிவூட்டம் பெறுவதால் கற்றல் - கற்பித்தல் செயன்முறையை மேலும் செழுமைப் படுத்திக் கொள்ளலாம்.

- ❖ அறிமுகம் செய்யப்பட்டுள்ள 5 தேர்ச்சிகளும் தனியாளின் ஆளுமை விருத்தியை அடிப்படை யாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டுள்ளமையால் 5 தேர்ச்சிகளுக்குமுரிய விடய உள்ளடக்க முறைமையை வகுப்பறையில் நடைமுறைப்படுத்தல் அவசியமாகும்.

# தவணைகளுக்குரிய செயற்பாட்டு இலக்கங்கள்

| தவணை I | பாட வேளைகள் | தவணை II | பாட வேளைகள் | தவணை III | பாட வேளைகள் |
|---|---|---|---|---|---|
| 1.1.1 | 02 | 1.2.1 | 02 | 1.3.1 | 02 |
| 2.1.1 | 02 | 2.2.1 | 02 | 2.3.1 | 02 |
| 3.1.1 | 03 | 3.1.2 | 02 | 3.2.1 | 04 |
| 3.3.1 | 03 | 3.3.2 | 03 | 3.5.1 | 06 |
| 3.6.1 | 03 | 3.4.1 | 03 | 3.9.1 | 02 |
| 3.8.1 | 02 | 3.7.1 | 04 | 3.10.1 | 02 |
| 3.11.1 | 03 | 3.8.2 | 02 | 4.2.2 | 02 |
| 4.1.1 | 02 | 4.2.1 | 02 | 4.3.3 | 02 |
| 4.2.3 | 02 | 4.3.2 | 02 | 4.6.1 | 03 |
| 4.3.1 | 02 | 4.5.1 | 03 | 5.2.2 | 03 |
| 4.4.1 | 02 | 5.2.1 | 03 | 5.3.2 | 02 |
| 5.1.1 | 03 | 5.3.1 | 02 | | |
| | 29 | | 30 | | 30 |

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| • பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iii |
| • முன்னுரை | iv |
| • பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | v |
| • அறிமுகம் | vi |
| • கலைத்திட்டக்குழு | vii |
| • ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் | xiii |
| • தவணைகளுக்குரிய செயற்பாட்டு இலக்கங்கள் | ix |
| • பொருளடக்கம் | x |
| • பாடத்திட்டம் | xi - xxiv |
| • கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்கான வழிகாட்டல்கள் | 1-100 |

# பாடத்திட்டம்

# அறிமுகம்

நடைமுறையிலுள்ள பாடசாலைக் கலைத்திட்டத்தில் கர்நாடக சங்கீதமும் ஒரு பாடமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இடைநிலை வகுப்புக்களில் இப்பாடத்தைத் தெரிவு செய்து கற்கும் கணிசமான மாணவர்கள் உளர். இரசனையையும், ஆக்கத்திறனையும், ஆற்றுகையையும் வெளிக்கொணரக்கூடிய, கர்நாடக சங்கீத பாடத்தினூடாக நிறைவு செய்யப்படும். சமூகப்பணி குறிப்பிடத்தக்கதாகும். மாணவர் ஒருவரின் ஆளுமை வளரச்சிக்குக் கர்நாடக சங்கீத அறிவு இன்றியமையாததாகும். 2012ஆம் ஆண்டு பாடத்திட்ட மறுசீரமைப்பின் போது பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்தப்பட்டது.

- நடைமுறையிலுள்ள தேர்ச்சியும் தேர்ச்சிமட்டமும்.
- கர்நாடக சங்கீதம் கற்பிக்கின்ற ஆசிரியர்களிடம் பெறப்பட்ட கருத்துக்கள்.
- பரீட்சையில் அவதானிக்கப்பட்ட விடயங்கள்.

நடைமுறையிலுள்ள பாடத்திட்டத்திலுள்ள சில பாடப் பகுதிகளைக் குறித்த பாடவேளைகளில் நிறைவு செய்ய முடியாத குறைபாடு கர்நாடக சங்கீதம் கற்பிக்கின்ற ஆசிரியர்கள், வளவாளர்கள், விரிவுரையாளர்கள் என்போராற் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதற்கமைவாக, சில பாடப்பகுதிகள் நீக்கப்பட்டுள்ளன. இப்பாடத்துக்குரிய ஐந்து தேர்ச்சிகளிலும் இதுவரை இருந்த செயற்பாடுகளிற் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. உதாரணமாக, செய்முறை விடயங்களில் உள்ள சில உருப்படிகளிற்குப் பதிலாகப் புதிதாகச் சில உருப்படிகள் சேர்க்கப்பட்டுள்ளன. அத்துடன் மாணவர்களிற்கு ஸ்வரஞானத்தை ஏற்படுத்துவதற்காக ஸ்வரக் கோர்வைகளை ஆக்கிப்பாடும் பாடப்பகுதி ஆக்கத்திறன் விடயத்திற் புதிதாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

அறிமுறை தொடர்பான தேர்ச்சியுடன் இதுவரை காலமும் உள்ளடக்கப்பட்டிருந்த வாக்கேயகாரர் சரித்திரம் என்ற பகுதி கலாசாரப் பின்னணி என்ற தேர்ச்சிக்கே பொருத்தமாக அமைவதால் அத்தேர்ச்சியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. தரம் 6 - 9 வரையான வகுப்புக்களில் கர்நாடக சங்கீதத்திற் கற்றுக்கொண்ட விடயங்களை மாணவர்கள் தரம் 10, 11 இலும் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது அவசியமாகும்.

இணைப்பாடவிதானச் செயற்பாடுகளூடாகக் கர்நாடக சங்கீத பாடத்தினைக் கற்றுக்கொள்ள ஊக்கமளித்தல் விரும்பத்தக்கதாக அமைவதோடு எதிர்பார்க்கப்படும் பாட அடைவினை மாணவர் பெற்றுக் கொள்வதற்கும் இப்பாடத்திட்டம் உதவும் என நம்புகிறோம்.

## தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலானகல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கரு திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

# அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

**1. தொடர்பாடல் தேர்ச்சிகள்**

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்

சித்திர அறிவு : கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்

தகவல் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.



**2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்**

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

**3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்**

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையம்

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**4. வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போசிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்
அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்
பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

**5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

**6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்



**7. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

# குறிக்கோள்கள்

1. கர்நாடக சங்கீதம் தொடர்பான அறிவு, திறன், மனப்பாங்குகளை விருத்தி செய்வார்.
2. சுற்றுச் சூழலோடு தொடர்புபட்ட இசையை நயக்கும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வார்.
3. படைப்பாக்கத் திறனை விருத்தி செய்வார்.
4. கலைகளையும், கலைஞர்களையும் மதிக்கும் உளப்பாங்கை வெளிப்படுத்துவார்.
5. அழகியல் தொடர்பான படைப்புக்களை விமர்ச்சிக்கும் திறனைப் பெறுவார்.
6. சிறந்த இசைக் கலைஞராக விளங்குவதற்கான சமநிலை ஆளுமைப் பண்புகளை வளர்த்துக் கொள்வார்.

# தேசிய இலக்குகளுக்கும் பாடத்திட்ட குறிக்கோள்களுக்குமிடையிலான தொடர்புகள்

| தேசிய இலக்குகள் | குறிக்கோள்கள் |
|---|---|
| 1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும். | 1. கர்நாடக சங்கீதம் தொடர்பான அறிவு, திறன், மனப்பாங்குகளை விருத்தி செய்வார்.<br>2. சுற்றுச் சூழலோடு தொடர்புபட்ட இசையை நயக்கும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வார்.<br>4. கலைகளையும், கலைஞர்களையும் மதிக்கும் உளப்பாங்கை வெளிப்படுத்துவார்.<br>5. அழகியல் தொடர்பான படைப்புக்களை விமர்சிக்கும் திறனைப் பெறுவார். |
| 2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும். | 2. சுற்றுச் சூழலோடு தொடர்புபட்ட இசையை நயக்கும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வார்.<br>5. அழகியல் தொடர்பான படைப்புக்களை விமர்சிக்கும் திறனைப் பெறுவார். |
| 3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும். | 2. சுற்றுச் சூழலோடு தொடர்புபட்ட இசையை நயக்கும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வார்.<br>4. கலைகளையும்,கலைஞர்களையும் மதிக்கும் உளப்பாங்கை வெளிப்படுத்துவார்.<br>5. அழகியல் தொடர்பான படைப்புக்களை விமர்சிக்கும் திறனைப் பெறுவார். |
| 4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல். | 4. கலைகளையும், கலைஞர்களையும் மதிக்கும் உளப்பாங்கை வெளிப்படுத்துவார். |
| 5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல். | 1. கர்நாடக சங்கீதம் தொடர்பான அறிவு, திறன், மனப்பாங்குகளை விருத்தி செய்வார்.<br>2. சுற்றுச் சூழலோடு தொடர்புபட்ட இசையை நயக்கும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வார்.<br>4. கலைகளையும், கலைஞர்களையும் மதிக்கும் உளப்பாங்கை வெளிப்படுத்துவார்.<br>5. அழகியல் தொடர்பான படைப்புக்களை விமர்சிக்கும் திறனைப் பெறுவார். |

| | |
|---|---|
| 6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல். | 1. கர்நாடக சங்கீதம் தொடர்பான அறிவு, திறன், மனப்பாங்குகளை விருத்தி செய்வார்.<br>2. சுற்றுச் சூழலோடு தொடர்புபட்ட இசையை நயக்கும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வார்.<br>3. படைப்பாக்கத் திறனை விருத்தி செய்வார். |
| 7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல். | 1. கர்நாடக சங்கீதம் தொடர்பான அறிவு, திறன், மனப்பாங்குகளை விருத்தி செய்வார்.<br>4. கலைகளையும், கலைஞர்களையும் மதிக்கும் உளப்பாங்கை வெளிப்படுத்துவார்.<br>5. அழகியல் தொடர்பான படைப்புக்களை விமர்சிக்கும் திறனைப் பெறுவார். |
| 8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல். | 2. சுற்றுச் சூழலோடு தொடர்புபட்ட இசையை நயக்கும் ஆற்றலைப் பெற்றுக் கொள்வார்.<br>4. கலைகளையும், கலைஞர்களையும் மதிக்கும் உளப்பாங்கை வெளிப்படுத்துவார்.<br>5. அழகியல் தொடர்பான படைப்புக்களை விமர்சிக்கும் திறனைப் பெறுவார். |

## 6.0 தேர்ச்சி, தேர்ச்சிமட்டம், விடய உள்ளடக்கம், கற்றற் பேறுகள், பாடவேளைகள் பற்றிய விபரம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 1.0 வாழ்க்கையோடு தொடர்புடைய இசையை இரசித்து விமர்சிப்பார். | 1.1 இசை நாடகப் பாடல்களை இரசிப்பார். | • இசை நாடகப்பாடல்கள்<br>- சத்தியவான் சாவித்திரி<br>- அரிச்சந்திர மயானகாண்டம் | • இசை நாடகப்பாடல்களை இனங்காண்பார்<br>• இசை நாடகப் பாடல்களின் இசை, மெட்டு, நடை போன்ற அம்சங்களை அவதானித்து இரசனையை வெளிப்படுத்துவார் | 02 |
| | 1.2 கர்நாடக சங்கீத சாஸ்திரிய இசையை இரசிப்பார். | • கர்நாடக சங்கீத சாஸ்திரிய இசைப்பாடல்கள்<br>- ஸ்வரஜதி<br>- கீர்த்தனை | • ஸ்வரஜதி, கீர்த்தனை முதலிய சாஸ்திரிய இசை உருப்படிகளைக் கேட்டு இரசனையை வெளிப்படுத்துவார்<br>• ஸ்வரஜதி, கீர்த்தனை அங்க அமைப்பை இனங்காண்பார் | 02 |
| | 1.3 கிராமிய நடனம் சார்ந்த இசையை இரசிப்பார். | • கிராமிய நடன இசை<br>- கும்மி<br>- கோலாட்டம்<br>- காவடி<br>- கரகம் | • கிராமிய நடனம் சார்ந்த இசையைக்கேட்டு இரசனையை வெளிப்படுத்துவார்.<br>• வெவ்வேறு கிராமிய நடன இசையை இனங்காண்பார் | 02 |
| 2.0 இசை தொடர்பான ஆக்கங்களை வெளிக்கொணர்வார். | 2.1 நாட்டார் பாடல்களை ஆக்கம் செய்து, மெட்டமைத்துப் பாடுவார். | • நாட்டார் பாடல்கள்<br>- விவசாயப் பாடல்<br>- அரிவு வெட்டுப் பாடல்<br>- நாற்று நடுகைப் பாடல்<br>- மலைநாட்டுப் பாடல்<br>- கொழுந்துப் பாடல்<br>- இவ்வகைப்பாடல்களைப் புதிதாக ஆக்கம் செய்து பாடுதல் | • சிறிய நாட்டார் பாடல்களை இயற்றி மெட்டமைத்துப் பாடுவார்<br>• இலகுவான கிராமிய மெட்டு, சுலபமான தாளத்தில் பாடுவார்<br>• கற்பனைத்திறன், ஆக்கத்திறன் என்பவற்றைப் பாடல்களின் மூலம் வெளிப்படுத்துவார். | 02 |

•

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 2.2 இசைக் கருவிகளின் மாதிரி உருக்களைத் தயாரிப்பார். | • இசைக் கருவிகளின் மாதிரியுரு<br>- தம்புரா<br>- புல்லாங்குழல்<br>- வயலின்<br>- மிருதங்கம் | • றெஜிபோம், மரம் போன்ற பொருட்களைக் கொண்டு இசைக்கருவிகளின் மாதிரி உருக்களைத் தயாரிப்பார்.<br>• இசைக்கருவிகளின் மாதிரி உருக்களைத் தயாரித்துக் காட்சிப்படுத்துவார். | 02 |
| | 2.3 சிறிய ஸ்வரசஞ்சாரங்களை சங்கராபரண இராகத்தில் ஆக்கம் செய்து பாடுவார். | • ஸ்வர சஞ்சாரங்களை ஆக்கம் செய்தல்.<br>- சங்கராபரண இராக ஸட்ஜ, ரிஷப, காந்தார, மத்திம குறில், நெடில் ஸ்வரங்களைக் கொண்டு ஏகதாளத்தில் ஸ்வர சஞ்சாரங்களை ஆக்கம் செய்து பாடுதல். | • சங்கராபரண இராக ஸட்ஜ, ரிஷப, காந்தார, மத்திம ஸ்வரங்களை குறில், நெடில் ஸ்வரங்களாகக் கொண்டு, ஏகதாளத்தில் ஸ்வர சஞ்சாரங்களை ஆக்குவார்.<br>• சங்கராபரண இராக ஸட்ஜ, ரிஷப, காந்தார, மத்திம ஸ்வரங்களை குறில், நெடில் ஸ்வரங்களாகக் கொண்டு ஏகதாளத்தில் ஸ்வர சஞ்சாரங்களை ஸ்வரஸ்தான சுத்தமாகப் பாடுவார்.<br>• ஸ்வரஞானம், கற்பனைத்திறன், ஆக்கத்திறன் என்பவற்றை வெளிப்படுத்துவார். | 02 |
| 3.0 இசை உருப்படிகளைச் சுருதி இராக தாளத்துடன் பாடுவார். | 3.1 அலங்காரங்களைச் சுருதி, இராக தாளத்துடன் மூன்று காலங்களிலும் பாடுவார். | • அலங்காரம்<br>- ஜம்பை தாளம்<br>- திரிபுடை தாளம் | • ஜம்பைதாள, திரிபுடைதாள அலங்காரங்களைச் சுருதி, இராக தாளத்துடன் பாடுவார்.<br>• இவ்வலங்காரங்களை ஸ்வரஸ்தான சுத்தத்துடன் மூன்று காலங்களிலும் பாடுவார் | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 3.2 தாட்டு வரிசைகளைச் சுருதி, இராக, தாளத் துடன் பாடுவார். | • தாட்டு வரிசைகள்<br>- தாட்டுவரிசை 01<br>- தாட்டுவரிசை 02 | • முதலாம், இரண்டாம் தாட்டு வரிசைகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார். | 04 |
| | 3.3 கீதத்தைச் சுருதி, இராக தாளத்துடன் பாடுவார். | • கீதம்<br>–"வாசரவணனே''- ஹரிகாம்போதி<br>–"சாமி நாதா''- சுத்தசாவேரி | • "வாசரவணனே'',"சாமி நாதா'' எனும் கீதங்களைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார். | 06 |
| | 3.4 ஜதிஸ்வரத்தைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார். | • ஜதீஸ்வரம்<br>- "ஸா,ரி காபா''- பிலஹரி | • "ஸா, ரி கா பா'' எனும் பிலஹரி இராக ஜதிஸ்வரத்தைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார். | 03 |
| | 3.5 ஸ்வரஜதியைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார். | • ஸ்வரஜதி<br>–"சம்போமஹாதேவா''- கமாஸ் | • "சம்போமஹாதேவா''எனும் கமாஸ் இராக ஸ்வரஜதியைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார். | 06 |
| | 3.6 திவ்யநாமகீர்த்தனையைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார். | • திவ்யநாம கீர்த்தனை<br>– "ஸ்ரீ ராம'' - ஸஹானா | • "ஸ்ரீ ராம'' எனும் ஸஹானா இராக திவ்யநாமகீர்த்தயைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார். | 03 |
| | 3.7 கீர்த்தனையைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார். | • மத்திமகால கீர்த்தனை<br>– "தேவ தேவ''<br>- மாயாமாளவகௌளை | • "தேவ தேவ'' எனும் மாயா மாளவகௌளை இராக கீர்த்தனையைச் சுருதி, இராக தாளத்துடன் பாடுவார் | 04 |
| | 3.8 தேவாரங்களைப் பண் முறைக்கேற்பச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார். | • தேவாரம்<br>–"ஒடுங்கும் பிணி''<br>- பழந்தக்க இராகம்<br>–"தாயினும் நல்ல''<br>- புற நீர்மை | • "ஒடுங்கும் பிணி'',"தாயினும் நல்ல''எனும் தேவாரங்களைப் பண்முறைக்கமைய சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 3.9 திருவாசகத்தைச் சுருதி, இராகத்துடன் சுத்தாங்க மாகப் பாடுவார். | • திருவாசகம் <br> – "அம்மையே அப்பா" <br> - முல்லைப்பண் | • "அம்மையே அப்பா" எனும் திருவாசகத்தை முல்லைப் பண்ணில் சுத்தாங்கமாகப் பாடுவார். | 02 |
| | 3.10 திருப்புகழை உரிய சந்தத்துடன் ஏற்ற இராக தாளத்தில் பாடுவார். | • திருப்புகழ் <br> – "காலனிடத்தணுகாதே" <br> - விரும்பிய இராகம் | • "காலனிடத்தணுகாதே" எனும் திருப்புகழைச் சந்த அமைப்பிற் கேற்பச் சுருதி, இராக, தாளத் துடன் பாடுவார். | 02 |
| | 3.11 காவடிச்சிந்தை உரிய இசைமெட்டில் தாளத்துடன் பாடுவார். | • காவடிச்சிந்து <br> – "சந்தனத்தையே" | • "சந்தனத்தையே" எனும் காவடிச்சிந்தை உரிய மெட்டு, தாளத்துடன் பாடுவார். | 03 |
| 4.0 இசை பற்றிய அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார். | 4.1 சப்த தாளங்களையும் அவற்றின் அங்க அடையாளங்களையும் விளக்குவார். | • சப்த தாளமும் அங்க அடையாளங்களும். | • சப்ததாளங்களையும் அவற்றின் அங்க அடையாளங்களையும் விளக்குவார் <br> • சப்ததாளங்களை செய்கை முறையாகப் போட்டுக் காட்டுவார் | 02 |
| | 4.2 உருப்படிகளின் இலட்ணங்களை விளக்குவார். | • உருப்படிகளின் இலட்சணம் <br> • ஜதிஸ்வரம் <br> • ஸ்வரஜதி <br> • கீர்த்தனை | • ஜதீஸ்வரம், ஸ்வரஜதி, கீர்த்தனைஆகிய உருப்படிகளின் இலட்சணங்கள்,உருப்படிகள், இயற்றியவர் என்பவற்றைக் குறிப்பிட்டு விளக்குவார் | 06 |
| | 4.3 கர்நாடக இசையிலுள்ள இராகங்களின் இலட்சணங்களை விளக்குவார். | • இராக இலட்சணம் <br> • மாயாமாளவகௌளை <br> • சங்கராபரணம் <br> • மோஹனம் | • மாயாமாளவகௌளை, சங்கராபரணம், மோஹனம் ஆகிய இராகங்களின் இலட்சணங்களை விளக்குவார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 4.4 ஜனக இராகங்களை விளக்குவார். | • ஜனக இராகம் பற்றிய விளக்கம் | • இவ்விராகத்தில் அமைந்த உருப்படிகளை இனங்காண்பார்.<br>• ஜனக இராகம் பற்றிய விளக்கத்தை விபரிப்பார் ஜனக இராக உதாரணங்களைக் குறிப்பிடுவார் | 02 |
| | 4.5 ஜன்னிய இராகங்களை விளக்குவார். | • ஜன்னிய இராகம் பற்றிய விளக்கம் | • ஜன்னிய இராகம் பற்றிய விளக்கத்தை விபரிப்பார்<br>• ஜன்னிய இராக உதாரணங்களைக் குறிப்பிடுவார் | 03 |
| | 4.6 இசைக்கருவியின் அமைப்பும் பயன்பாடும் பற்றி விளக்குவார். | • இசைக்கருவி<br>- தம்புரா | • தம்புரா வாத்தியத்தின் அமைப்புப் பற்றி விளக்குவார்<br>• தம்புரா வாத்தியத்தின் படத்தை வரைந்து பாகங்களைக் குறிப்பிடுவார் இவ்வாத்தியத்தின் சுருதி கூட்டும் முறை பற்றி விளக்குவார் | 03 |
| 5.0 இசையை அடிப் படையாகக்கொண்டு சமூக கலாச்சாரப் பாரம்பரியப் பண்புகளை வெளிப்படுத்துவார். | 5.1 ஆலயங்களும் இசையும் பற்றி விளக்குவார் | • ஆலயங்களும் இசையும் | • ஆலயங்களும்இசையும் பற்றிய கலாசாரப்பாரம்பரியங்களை விளக்குவார்.<br>• தெய்வங்களையும் இசைக்கருவி களையும் பற்றிக் குறிப்பிடுவார்.<br>• ஆலயத்தில் இசைக்கப்படும் இசைக்கருவிகள், பண்கள், தோத்திரப்பாடல்கள் பற்றிக் குறிப்பிடுவார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 5.2 வெவ்வேறு விழாக்களோடு தொடர்புடைய பாடல்களின் கலாசாரப் பின்னணி பற்றி ஆராய்வார். | • வெவ்வேறு விழாக்களோடு தொடர்புடைய பாடல்கள்<br>•கும்மி<br>•கோலாட்டம்<br>•கொம்பு முறி<br>• ஊஞ்சல் | • பல்வேறுபட்ட விழாக்களில் ஆடப்படும் கும்மி, கோலாட்டம், கொம்புமுறி, ஊஞ்சல் போன்ற பாடல்களின் கலாசாரப் பின்னணி யைக் குறிப்பிடுவார். | 06 |
| | 5.3 கர்நாடக இசைக்குத் தொண்டாற்றிய வாக்கேயக்காரர்களின் வாழ்க்கை வரலாற்றையும் இசைத் தொண்டையும் விளக்குவார் | • கர்நாடக இசை வாக்கேயகாரர்கள்<br>•புரந்தரதாஸர்<br>•பாபநாசம்சிவன்<br>- வாழ்க்கைக்காலம்<br>- பெற்றோர் பெயர்<br>- வாழ்க்கை வரலாறு<br>- சிறப்புப்பெயர்<br>- முத்திரை<br>- இசைப்பணி (இயற்றிய உருப்படிகள், நூல்கள், பட்டங்கள்). | • இசைக்கலைக்குப் பெரும்பங் காற்றிய புரந்தரதாஸர், பாபநாசம்சிவன் ஆகியோரின் வாழ்க்கை வரலாற்றையும் அவர்களின் இசைப் பணிகளையும் விபரிப்பார். | 04 |
| | | | | 89 |

# கற்றல் - கற்பித்தல் செயன்முறைக்கான அறிவுறுத்தல்கள்

**தேர்ச்சி:** 1.0 வாழ்க்கையோடு தொடர்புடைய இசையை இரசித்து விமர்சிப்பார்.

**தேர்ச்சி மட்டம்:** 1.1 இசை நாடகப் பாடல்களை இரசிப்பார்

**செயற்பாடு :** 1.1.1 சத்தியவான் சாவித்திரி, அரிச்சந்திர மயானகாண்டம் ஆகிய இசை நாடகப் பாடல்களை இரசிப்போம்

**பாடவேளை:** 02

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- ஒளி / ஒலிப்பதிவு நாடா
- ஒளி / ஒலிப்பதிவுக் கருவி
- செயற்பத்திரம்

**கற்றற்பேறுகள்:**

- இசை நாடகத்தினை வரைவிலக்கணப்படுத்துவார்.
- இசை நாடகக் கலைஞர்களின் சிறப்பான பண்புகளைக் குறிப்பிடுவார்.
- இசை நாடகப்பாடல்களின் இசை உணர்வினை வெளிப்படுத்துவார்.
- இசை நாடகப் பாடல்களைப் பாடும் முறையினை விளக்குவார்.
- இசை நாடகத்திற்குரிய பக்கவாத்தியங்களைக் குறிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

படி 1.1.1.1

- மாணவரோடு இசை நாடகம் பற்றி கலந்துரையாடுங்கள்.
- சத்தியவான் சாவித்திரி, அரிச்சந்திர மயானகாண்டம் ஆகிய இசை நாடகப்பாடல்களை ஒலிக்கச்செய்து செவிமடுக்கச் செய்யுங்கள்.
- மாணவர் இரசித்த இசை நாடகப்பாடல்களைப் பற்றி, பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
  - ஒரு கதையைப் பாட்டுக்கள் மூலம் விளக்கும் நாடக வகையே இசை நாடகமாகும்.
  - இசை நாடகப்பாடல், கலைஞர்களின் நடிப்பாற்றல், குரல் வளம், பாடுந்திறன் பற்றிக் கலந்துரையாடுதல்.
  - நாடகப்பாத்திரத்தின் உணர்வு வெளிப்பாடு, அதற்கேற்ப அமைந்திருக்கும் பாடல்களின் இசை.
  - பாடல்களினூடாக வெளிப்படும் கதைப்பாடல்களின் உச்சரிப்புத் தெளிவு.
  - முக்கியமான பாடல் வரிகள் இருதடவை பாடப்படுவது
  - இசை நாடகத்திற்குரிய பக்கவாத்தியங்கள்
  - இசை நாடகப்பாடல்களைப் பாடிய இசைக்கலைஞர்கள்.

படி 1.1.1.2

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து நாடகப்பாடல்களை ஒலிக்கச்செய்து இரசிக்கச் செய்யுங்கள்.
- ஒவ்வொரு மாணவரும் செயற்படும் விதத்தினை அவதானித்து குழுக்களை

நிவர்த்தி செய்யுங்கள்.

படி 1.1.1.3
- மாணவர்கள் இரசித்தவற்றைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரு குழு சமர்ப்பிக்கும்போது ஏனைய குழுக்கள் அதனை அவதானித்து கருத்துக்களைத் தெரிவிக்க இடமளியுங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- இசை நாடகம் என்றால் என்ன? என்பதை தெளிவுபடுத்துவார்.
- இசை நாடகக் கலைஞர்களின் சிறப்பான பண்புகளைக் கூறுவார்.
- இசை நாடகப்பாடல்கள் பாடும் முறையினை விளக்குவார்.
- இசை நாடகத்திற்கு பயன்படுத்தும் பக்கவாத்தியங்களைக் குறிப்பிடுவார்.
- இசை நாடகப்பாடல்களின் இசை உணர்வினை வெளிப்படுத்துவார்.

**செயற்பத்திரம்:**

ஒலிப்பரப்பு செய்யப்படும் இசை நாடகப்பாடல்களுக்குப் பின்வரும் விடயம் தொடர்பாக இரசனையை வெளிப்படுத்துக

- இசையுணர்வு
- பாடும் முறை
- பக்கவாத்தியங்கள்
- பாடுந்திறன்
- குரல்வளம்

**தேர்ச்சி:** 1.0 வாழ்க்கையோடு தொடர்புடைய இசையை இரசித்து விமர்சிப்பார்.

**தேர்ச்சி மட்டம்:** 1.2 கர்நாடக சங்கீத சாஸ்திரிய இசையை இரசிப்பார்.

**செயற்பாடு :** 1.2.1 சாஸ்திரிய உருப்படிகளில் ஸ்வரஜதி, கீர்த்தனை என்பவற்றை இரசித்து விமர்சிப்போம்.

**பாடவேளை:** 02

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- சுருதிப்பெட்டி
- ஸ்வரஜதி, கீர்த்தனை எழுதப்பட்ட அட்டைகள்
- ஸ்வரஜதி, கீர்த்தனை அடங்கிய ஒலிப்பதிவு நாடா
- ஒலிப்பதிவுக் கருவி
- செயற்பத்திரம்

**கற்றற்பேறுகள்:**

- ஸ்வரஜதி, கீர்த்தனை என்பவற்றின் அங்க அமைப்பைக் கூறுவார்.
- இவை சாஸ்திரிய இசை உருப்படிகள் எனக் குறிப்பிடுவார்.
- குறித்த உருப்படிகளைப் பாடும் முறையினை விளக்குவார்.
- இவ் உருப்படிகளைக் கேட்டு இரசிப்பார்
- இரசித்தவற்றை விமர்சிப்பார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

படி 1.2.1.1
- ஸ்வரஜதி, கீர்த்தனை எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி அதன் இராகம், தாளம், அமைப்பு என்பவற்றை விளக்குங்கள்.
- குறிப்பிட்ட உருப்படிகளைப் பாடியோ, ஒலிப்பதிவுக்கருவியில் ஒலிக்கச் செய்தோ மாணவரைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- இவ் உருப்படிகளின் இசையை இரசித்துக் கலந்துரையாடுங்கள்.
- மாணவர் செவிமடுத்த விடயங்களில் இவ் உருப்படிகளின் அமைப்பு முறை, பாடும் முறை, அணிசேர் வாத்தியங்கள், தாளம், இராகம், ஆரோகண, அவரோகணம் என்பவை பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- இவற்றுள் கீர்த்தனைகளின் இசை எளிமையானதாகவும், கவர்ச்சிகரமானதாகவும் சாகித்தியத்தில் பெரும்பாலும் கடவுள் துதியாகவும் அமைந்துள்ளமை பற்றிக் கூறுங்கள்.

படி 1.2.1.2
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் சரியான முறையில் செயற்படுகிறார்களா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

படி 1.2.1.3

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துக் கருத்துக்கூற இடமளியுங்கள்.
- மாணவர்களின் பேறுகளைத் தொகுத்து மீளவலியுறுத்துங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- ஸ்வரஜதி, கீர்த்தனை என்பவற்றின் அமைப்பு முறைகளை விளக்குவார்.
- இவ்வுருப்படிகளைக் கேட்டு இரசிப்பார்.
- இவ்வுருப்படிகள் பாடும் முறைகளைக் குறிப்பிடுவார்.
- ஸ்வரஜதி, கீர்த்தனை ஆகிய உருப்படிகளை இனம்காண்பார்.
- இவ்வகையான வேறு உருப்படிகளையும் இனம் காண்பார்.

**செயற்பத்திரம்:**

ஒலிப்பதிவுக் கருவியில் கேட்ட அல்லது ஆசிரியர் பாடிக்காட்டிக் கேட்டு, இரசித்த ஸ்வரஜதி கீர்த்தனை என்பவற்றின் அடிப்படையில் கீழ்வரும் விடயங்களை உள்ளடக்கி விமர்சிக்குக

- உருப்படிகளின் இராகம், தாளம், இயற்றியவர், ஆரோகணம், அவரோகணம்
- உருப்படிகளின் அங்க அமைப்பு முறை
- உருப்படிகளைப் பாடும் முறை
- உருப்படிகளின் சாகித்திய அமைப்பு
- மொழிநடை
- உருப்படிகளை இரசித்தலினால் ஏற்படும் உணர்வு

**தேர்ச்சி:** 1.0 வாழ்க்கையோடு தொடர்புடைய இசையை இரசித்து விமர்சிப்பார்.

**தேர்ச்சி மட்டம்:** 1.3 கிராமிய நடனம் சார்ந்த இசையை இரசிப்பார்.

**செயற்பாடு :** 1.3.1 கும்மி, கோலாட்டம், காவடி, கரகம் என்பவற்றின் இசையை இரசிப்போம்.

**பாடவேளை:** 02

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- கும்மி, கோலாட்டம், காவடி, கரகம் ஆகியவற்றின் ஒலிகள் அடங்கிய ஒலிப்பதிவு நாடா, படம்.
- ஒலிப்பதிவுக் கருவி.
- செயற்பத்திரம்.

**கற்றற்பேறுகள்:**

- கும்மி, கோலாட்டம், காவடி, கரகம் ஆகிய நடனங்களைப் படத்தின் மூலமாக இனம்காண்பார்.
- அந்நடனங்களை இனம்கண்டு, பெயர்களைக் குறிப்பிடுவார்.
- குறித்த நடன இசையின் ஒலியை நேரடியாகவோ, ஒலிப்பதிவு நாடாவிலோ கேட்டு இரசிப்பார்.
- குறிப்பிட்ட பாடல்கள் பாடும் முறையினை விபரிப்பார்
- இப்பாடல்களின் உணர்வை வெளிப்படுத்துவார்.
- இப்பாடல்களின் கிராமிய இசை சார்ந்த நடனங்களை ஏற்றுக்கொள்வார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

படி 1.3.1.1

- மாணவர்களோடு கிராமிய நடனம் சார்ந்த இசை தொடர்பாக கும்மி, கோலாட்டம், காவடி, கரகம் போன்ற பாடல்களைக் கலந்துரையாடி மாணவர்களின் முன்னறிவை மட்டிடுங்கள்.
  - கும்மிப்பாடல் கைகொட்டி ஆடப்படும் நடனம் சார்ந்த இசை எனக் கூறுங்கள்.
  - கோலாட்டப்பாடல் கோல்களைத் தட்டி ஆடப்படும் நடனம் சார்ந்த இசை எனக்கூறுங்கள்.
  - காவடிப்பாடல் காவடி ஆடும் போது பாடப்படும் நடனம் சார்ந்த இசை எனக்கூறுங்கள்.
  - கரகப்பாடல் கரகம் ஆடும் போது பாடப்படும் நடனம் சார்ந்த இசை எனக்கூறுங்கள்.
- ஒளி / ஒலி நாடாவில் கும்மி, கோலாட்டம், காவடி, கரகம் ஆகிய நடனங்களைப் போட்டுக்காட்டி இக்கிராமிய நடனம் சார்ந்த இசையை செவிமடுக்கச் செய்யுங்கள்.
- நடனத்தின் போது பாடல்களின் அமைப்பு, இசை, பாடுந்திறன், சொற்றெளிவு என்பவற்றை அவதானிக்கச் செய்யுங்கள்.

- இப்பாடல்களுக்கு வாசிக்கப்பட்ட அணிசேர் வாத்தியங்கள் பற்றி அவதானிக்கச் செய்யுங்கள்.
- இப்பாடல்களின் கருத்தை அவதானிக்கச் செய்யுங்கள்.

படி 1.3.1.2
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் சரியான முறையில் செயற்படுகிறார்களா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

படி 1.3.1.3
- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்கள் அதனை அவதானித்துக் கருத்துக்கூற இடமளியுங்கள்.
- மாணவர்களின் பேறுகளைத் தொகுத்து மீளவலியுறுத்துங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**
- கும்மி, கோலாட்டம், காவடி, கரகம் ஆகிய பாடல்களை இனங்கண்டு வேறுபடுத்துவார்.
- இப்பாடல்கள் பாடும் முறையைப் பின்பற்றுவார்.
- இப்பாடல்களின் உணர்வை வெளிப்படுத்துவார்.
- இப்பாடல்களின் மூலம் வெளிப்படும் கிராமிய நடனங்களையும் கண்டுகளிப்பார்.

**செயற்பத்திரம்:**

கும்மி, கோலாட்டம், காவடி, கரகம் ஆகிய பாடல்கள் அடங்கிய ஒலி அல்லது ஒளிப்பதிவுக் கருவியை ஒலிக்கச்செய்து, மாணவர் இரசித்த விடயங்கள் தொடர்பாக இரசிக்கத் தூண்டுதல்
- கிராமியம் சார்ந்த இசை
- பாடல்களை வேறுபடுத்துவார்
- இப்பாடல்களின் உணர்வு
- பாடல்களின் அமைப்பு
- பாடும் முறை

**தேர்ச்சி:** **2.0** இசை தொடர்பான ஆக்கங்களை வெளிக்கொணர்வார்.

**தேர்ச்சி மட்டம்:** **2.1** நாட்டார் பாடல்களை ஆக்கம் செய்து மெட்டமைத்துப் பாடுவார்

**செயற்பாடு :** **2.1.1** நாட்டார் பாடல்களை ஆக்கம் செய்து மெட்டமைத்துப் பாடுவோம்.

**பாடவேளை:** **02**

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- சுருதிப்பெட்டி
- ஒலிப்பதிவுக்கருவி, ஒலிப்பதிவு நாடா

**கற்றற்பேறுகள்:**

- நாட்டார் பாடல்களை ஆக்கம் செய்வார்.
- நாட்டார் பாடலுக்குரிய மெட்டில் பாடுவார்
- உரிய சந்தத்துடன் பாடுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

படி 2.1.1.1
- ஏற்கனவே கற்ற நாட்டார் பாடல்களை ஒலிப்பதிவு நாடாவில் ஒலிக்கச் செய்தோ பாடிக்காட்டியோ நாட்டார் பாடல்களை அறிமுகம் செயயுங்கள்.
- நாட்டார் பாடல் வகைகளை குறிப்பிடுங்கள்.
  - விவசாயப்பாடல்
  - அரிவி வெட்டுப் பாடல்
  - நாற்று நடுகைப்பாடல்
  - மலை நாட்டுப்பாடல்

படி 2.1.1.2
- மேற்குறிப்பிட்ட தலைப்புக்களில் பாடல்களை ஆக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- உரிய மெட்டுக்களில் அமைத்துப்பாட வழிகாட்டுங்கள்.

படி 2.1.1.3
- ஆக்கம் செய்த பாடல்களைப் பாடிக்காட்டச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆக்கிய பாடல்களின் இசையமைப்பில் உள்ள வழுக்களை நிவர்த்தி செய்யுங்கள்.
- சுருதி தாளம் வழுவிப் பாடிய மாணவர்களுக்கு மேலதிகப் பயிற்சிகளை வழங்குங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- நாட்டார் பாடல்களை ஆக்கம் செய்வார்.
- நாட்டார் பாடல் மெட்டுக்களில் ஆக்கம் செய்த பாடல்களைப் பாடுவார்.
- உரிய சந்தத்துடன் பாடுவார்.

**தேர்ச்சி:** **2.0** இசை தொடர்பான ஆக்கங்களை வெளிக்கொணர்வார்.

**தேர்ச்சி மட்டம்:** **2.2** இசைக்கருவிகளின் மாதிரி உருக்களைத் தயாரிப்பார்

**செயற்பாடு :** **2.2.1** தம்புரா, புல்லாங்குழல், வயலின், மிருதங்கம் ஆகிய இசைக்கருவிகளின் மாதிரி உருக்களை அமைப்போம்

**பாடவேளை:** **02**

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- இசைக் கருவிகள்/ இசைக்கருவிகளின் படங்கள்
- களிமண், றெஜிபோம், கம்பிகள், காட்போட், மட்டைகள், குழாய்கள்

**கற்றற்பேறுகள்:**

- இசைக்கருவிகளின் மாதிரி உருக்களை ஆக்குவார்.
- இசைக்கருவிகளின் வேறுபாட்டினை மாதிரி உருவின் மூலம் தெளிவுபடுத்துவார்
- மாதிரி உருக்களை அமைக்கும் திறனை வெளிப்படுத்துவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

படி 2.2.1.1

- இசைக்கருவிகளை அல்லது இசைக்கருவிகளின் படங்களைக் காட்சிப்படுத்தி, தம்புரா, புல்லாங்குழல், வயலின், மிருதங்கம் ஆகிய இசைக்கருவிகளின் அமைப்பு, பாகங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- இசைக்கருவிகளின் மாதிரி உருக்களை அமைக்கும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
  - மாதிரி உரு அமைப்பதற்கு தேவையான பொருட்கள்
  - இசைக்கருவிகளின் பாகங்களின் அளவிற்கேற்பவே மாதிரி உருவிலும் பாகங்கள் அமைய வேண்டும்
  - மாதிரி உருவில் இசை எழுப்பப்பட வேண்டும் என்ற அவசியமில்லை

படி 2.2.1.2

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- சகல மாணவர்களும் செயற்படுகிறார்களா என்பதை உறுதி செய்து முழுமைப்படுத்திக் கொள்ளுங்கள்.

படி 2.2.1.3

- ஒவ்வொரு குழுவும் தத்தம் ஆக்கங்களை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்கள் அவற்றை அவதானித்துத் தமது கருத்துக்களைக் கூற இடமளியுங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- மாதிரி உரு தயாரிப்பதற்குத் தேவையான பொருட்களைக் கூறுவார்.
- தம்புரா, புல்லாங்குழல், வயலின், மிருதங்கம் ஆகிய மாதிரி உருக்களை அமைப்பார்.
- மாதிரி உருக்களில் இசையெழுப்ப முடியாது என்பதை ஏற்றுக் கொள்வார்.

**தேர்ச்சி:** **2.0** இசை தொடர்பான ஆக்கங்களை வெளிக்கொணர்வார்.

**தேர்ச்சி மட்டம்:** **2.3** சிறிய ஸ்வர சஞ்சாரங்களை சங்கராபரண இராகத்தில் ஆக்கம் செய்து பாடுவார்.

**செயற்பாடு :** **2.3.1** சங்கராபரண இராக ஸ்வரஸ்தானத்தில் ஸட்ஜ, ரிஷப, காந்தார, மத்திம குறில், நெடில் ஸ்வரங்களைக்கொண்டு ஏகதாளத்தில் ஸ்வர சஞ்சாரங்களை ஆக்கம் செய்து பாடுவோம்

**பாடவேளை:** **02**

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- சுருதிப்பெட்டி அல்லது ஹார்மோனியம்
- ஸ்வர சஞ்சாரங்கள் எழுதப்பட்ட அட்டை

**கற்றற்பேறுகள்:**

- மாணவர்கள் சங்கராபரண இராகத்தில் ஸ்வர சஞ்சாரங்களை ஆக்கம் செய்து பாடிப் பயிற்சி பெறுவதன் மூலம் ஆக்கத்திறனையும் பாடுந்திறனையும் பெறுவார்.
- ஸ்வரஞான அறிவைப் பெறுவார்.
- கற்பனைத் திறனைப் பெறுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

படி 2.3.1.1
- ஏற்கனவே கற்ற சங்கராபரண இராகப் பாடல்களைக் கேட்டு அவற்றின் ஸ்வரப்பகுதியைச் சேர்ந்துபாடுங்கள்.
- சங்கராபரண இராக ஸ்வர ஆரோஹண அவரோஹணத்தைச் சுருதியுடன் ஹார்மோனியத்தில் வாசித்துக்காட்டுங்கள்.
- ஸ்வர சஞ்சாரம் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்துங்கள்.

படி 2.3.1.2
- சங்கராபரண இராக குறில், நெடில் ஸ்வர சஞ்சாரங்களைச் சதுஸ்ர ஜாதி ஏகதாளத்தில் பாடிக்காட்டுங்கள்.

படி 2.3.1.3
- மாணவர்களைக் குழுக்களாகவும் தனியாகவும் சதுஸ்ர ஜாதி ஏகதாளத்தில் ஸ்வர சஞ்சாரங்களை ஆக்கம் செய்து சுருதியுடன் பாடச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஸ்வரஸ்தானம் வழுவிப்பாடும் மாணவர்களுக்கு மேலதிகப் பயிற்சியை வழங்குங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- மாணவர்கள் சங்கராபரண இராகத்தின் ஆரோஹண அவரோஹணத்தைப் பாடிக்காட்டுவார்.
- சங்கராபரண இராக ஸ்வரஸ்தாணங்களைப் பாடிக் காட்டுவார்
- ஏகதாளத்தில் குறில், நெடில் ஸ்வரங்களில் சஞ்சாரங்களை ஆக்கம் செய்து பாடுவார்.

**ஸ்வர சஞ்சார ஆக்கம் (உதாரணம்)**

**இராகம் :** சங்கராபரணம்

**தாளம் :** ஏகம்

ஆ: ஸரிகமபதநிஸ் } 29வது மேளகர்த்தா

அ: ஸ்நிதபமகரிஸ } இராகம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஸா ; | // | ரீ ; | // | கா ; | // | மா ; | // |
| ஸா ஸா | // | ரீ ரீ | // | கா கா | // | மா மா | // |
| ஸஸஸஸ | // | ரிரிரீ | // | ககா | // | மமமா | // |
| ஸாஸஸ | // | ரீரிரி | // | காகக | // | மாமம | // |

**தேர்ச்சி:** 3.0 இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம்:** 3.1 அலங்காரங்களைச் சுருதி, இராக தாளத்துடன் மூன்று காலங்களிலும் பாடுவார்.

**செயற்பாடு :** 3.1.1 ஜம்பைதாள அலங்காரத்தைச் சுருதி, இராக, தாளத்துடன் மூன்று காலங்களிலும் பாடுவோம்.

**பாடவேளை:** 03

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- சுருதிப்பெட்டி அல்லது ஹார்மோனியம்
- அலங்காரம் எழுதப்பட்ட அட்டை
- செயற்பத்திரம்

**கற்றற்பேறுகள்:**

- ஜம்பைதாள அலங்காரத்தின் அங்கங்களைக் கூறுவார்.
- ஜம்பைதாள அலங்காரத்தின் அங்கங்களின் குறியீடுகளைக் குறிப்பிடுவார்.
- ஜம்பைதாள அலங்காரத்தின் ஜாதி, மொத்த அட்சரம் என்பவற்றைக் கூறுவார்.
- அனுத்ருதம் என்னும் அங்கத்தையுடைய தாளம், ஜம்பைதாளம் என்பதைக் குறிப்பிடுவார்.
- ஜம்பைதாளத்தினைக் போட்டுக்காட்டுவார்
- ஜம்பைதாள அலங்காரத்தைச் சுருதி, இராக, தாள, ஸ்வரஸ்தான சுத்தத்துடன் மூன்று காலங்களிலும் பாடுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

படி 3.1.1.1

- மாணவர் ஏற்கனவே கற்ற அலங்காரங்கள் பற்றிக் கலந்துரையாடி மீட்டல் செய்யுங்கள்.
- ஜம்பைதாள அலங்காரம் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி இராகம், அங்க அடையாளம், ஜாதி, மொத்த அட்சரம் என்பவற்றைக் குறிப்பிடுங்கள்.
- அனுத்ருதம் என்னும் அங்கத்தையுடைய தாளம், ஜம்பைதாளம் மாத்திரமே என்பதைக் குறிப்பிடுங்கள்.
- மிஸ்ரஜாதி ஜம்பைதாளத்தினைப் போட்டுக்காட்டி, மாணவரை தாளம் போடுவதற்கு வழிபடுத்துங்கள்.
- சுருதிப்பெட்டியைப் பயன்படுத்தி அலங்காரத்தைப் பாடிக்காட்டி அல்லது ஹார்மோனியத்தில் வாசித்துக்காட்டி மாணவரைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- அவ் அலங்காரத்தை ஒவ்வொருஆவர்த்தனமாகக் கற்பியுங்கள்.
- மாணவருடன் சேர்ந்து சுருதி, இராக, தாளத்துடன் மூன்று காலங்களிலும் பாடிப் பயிற்சி செய்யுங்கள்.

படி 3.1.1.2

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் பாடிப் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதிப் படுத்திக் கொள்ளுங்கள்.

படி 3.3.1.3

- ஒவ்வொரு குழுவும் ஜம்பைதாள அலங்காரங்களைப் பாடச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஏனைய குழுக்களும் அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- சுருதி, இராகம், தாளம், ஸ்வரஸ்தானம் விலகிப்பாடிய மாணவர்களுக்கு மேலதிக பயிற்சி வழங்குங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- ஜம்பைதாள அலங்காரத்தின் அங்கங்கள் லகு, அனுத்ருதம், த்ருதம் எனக் கூறுவார்.
- மிஸ்ர ஜாதி ஜம்பைதாளத்தின் அங்கக் குறியீடுகள் $1_7$ U O என்பதைக் குறிப்பிடுவார்.
- ஜம்பைதாள அலங்காரம் மிஸ்ர ஜாதியில் அமைந்துள்ளது எனவும், மொத்த அட்சரம் 10 என்பதனையும் விளக்குவார்.
- மிஸ்ர ஜாதி ஜம்பைதாள அலங்காரம் திரியாங்கங்களைக் கொண்டுள்ளதெனக் குறிப்பிடுவார்.
- மிஸ்ர ஜாதி ஜம்பைதாள அலங்காரத்தைச் சுருதி, இராக, தாள, ஸ்வரஸ்தான சுத்தத்துடன் மூன்று காலங்களிலும் பாடுவார்.

**செயற்பத்திரம்**

- மிஸ்ர ஜாதி ஜம்பைதாள அலங்காரத்தைச் சுருதி, இராக, தாள, ஸ்வரஸ்தான சுத்தத்துடன் மூன்று காலங்களிலும் பாடுக

## அலங்காரம்

இராகம் :- மாயாமாளவகௌளை ஆ - ஸ ரி க ம ப த நி ஸ் } 15வது மேளகர்த்தா
தாளம் :- மிஸ்ரஜாதி ஜம்பைதாளம் அ - ஸ் நி த ப ம க ரி ஸ } இராகம்

| $1_7$ | | U | | O | |
|---|---|---|---|---|---|
| ஸரிகஸரிஸரி | \| | க | \| | மா | \|\| |
| ரிகமரிகரிக | \| | ம | \| | பா | \|\| |
| கமபகமகம | \| | ப | \| | தா | \|\| |
| மபதமபமப | \| | த | \| | நீ | \|\| |
| பதநிபதபத | \| | நி | \| | ஸ்ா | \|\| |
| ஸ்நிதஸ்நிஸ்நி | \| | த | \| | பா | \|\| |
| நிதபநிதநித | \| | ப | \| | மா | \|\| |
| தபமதபதப | \| | ம | \| | கா | \|\| |
| பமகபமபம | \| | க | \| | ரீ | \|\| |
| மகரிமகமக | \| | ரி | \| | ஸ்ா | \|\| |

**தேர்ச்சி:** **3.0** இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம்:** **3.1** அலங்காரங்களைச் சுருதி, இராக, தாளத்துடன் மூன்று காலங்களிலும் பாடுவார்.

**செயற்பாடு :** **3.1.2** திரிபுடைதாள அலங்காரத்தைச் சுருதி, இராக, தாளத்துடன் மூன்று காலங்களிலும் பாடுவோம்.

**பாடவேளை:** **03**

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- சுருதிப்பெட்டி அல்லது ஹார்மோனியம்
- திரிபுடைதாள அலங்காரம் எழுதப்பட்ட அட்டை
- செயற்பத்திரம்

**கற்றற்பேறுகள்:**

- திரிபுடைதாள அலங்காரத்தின் அங்கங்களைக் கூறுவார்.
- திரிபுடைதாள அலங்காரத்தின் அங்கங்களின் குறியீடுகளைக் குறிப்பிடுவார்.
- திரிபுடைதாள அலங்காரத்தின் ஜாதி, மொத்த அட்சரம் என்பவற்றைக் கூறுவார்.
- ஜம்பைதாளத்தினைக் போட்டுக்காட்டுவார்.
- திரிபுடைதாள அலங்காரத்தைச் சுருதி, இராக, தாள, ஸ்வரஸ்தான சுத்தத்துடன் மூன்று காலங்களிலும் பாடுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

படி 3.1.2.1

- மாணவர் ஏற்கனவே கற்ற அலங்காரம் பற்றிக் கலந்துரையாடி மீட்டல் செய்யுங்கள்.
- திரிபுடைதாள அலங்காரம் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி இராகம், அங்க அடையாளம், ஜாதி, மொத்த அட்சரம் என்பவற்றைக் குறிப்பிடுங்கள்.
- திஸ்ரஜாதி திரிபுடைதாளத்தினைப் போட்டுக்காட்டி, மாணவரை தாளம் போடுவதற்கு வழிபடுத்துங்கள்.
- சுருதிப்பெட்டியைப் பயன்படுத்தி அலங்காரத்தைப் பாடிக்காட்டி அல்லது ஹார்மோனியத்தில் வாசித்துக்காட்டி மாணவரைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- அவ் அலங்காரத்தை ஒவ்வொரு ஆவர்த்தனமாகக் கற்பியுங்கள்.
- மாணவருடன் சேர்ந்து சுருதி, இராக, தாளத்துடன் மூன்று காலங்களிலும் பாடிப் பயிற்சி செய்வியுங்கள்.

படி 3.1.2.3

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்படுவதை அவதானியுங்கள்.

படி 3.1.2.3

- ஒவ்வொரு குழுவும் பாடச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- ஏனைய குழுக்கள் தமது கருத்தினைக் கூற இடமளியுங்கள்.
- சுருதி, இராக, தாள, ஸ்வரஸ்தானம் விலகிப்பாடிய மாணவர்களுக்கு மேலதிகப் பயிற்சிகளை வழங்குங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- திரிபுடைதாள அலங்காரத்தின் அங்கங்கள் லகு, த்ருதம், த்ருதம் எனக் கூறுவார்.
- திஸ்ர ஜாதி திரிபுடைதாளத்தின் அங்கக் குறியீடுகள் $1_3 \mathrm{O}\,\mathrm{O}$ என்பதைக் குறிப்பிடுவார்.
- திரிபுடைதாள அலங்காரம் திஸ்ர ஜாதியில் அமைந்துள்ளது எனவும், மொத்த அட்சரம் 07 என்பதனையும் விளக்குவார்.
- திஸ்ர ஜாதி திரிபுடைதாள அலங்காரத்தில் 10 ஆவர்த்தனங்கள் உண்டென்பதைக் குறிப்பிடுவார்.
- திஸ்ர ஜாதி திரிபுடைதாள அலங்காரத்தைச் சுருதி, இராக, தாள, ஸ்வரஸ்தான சுத்தத்துடன் மூன்று காலங்களிலும் பாடுவார்.

**செயற்பத்திரம்**

- திஸ்ர ஜாதி திரிபுடைதாள அலங்காரத்தைச் சுருதி, இராக, தாள, ஸ்வரஸ்தான சுத்தத்துடன் மூன்று காலங்களிலும் பாடுக

.

## அலங்காரம்

இராகம் :- மாயாமாளவகௌளை ஆ - ஸ ரி க ம ப த நி ஸ் } 15வது மேளகர்த்தா
தாளம் :- திஸ்ரஜாதி திரிபுடைதாளம் அ - ஸ் நி த ப ம க ரி ஸ } இராகம்

| $1_4$ | | O | | O | |
|---|---|---|---|---|---|
| ஸரிக | \| | ஸரி | \| | கம | \|\| |
| ரிகம | \| | ரிக | \| | மப | \|\| |
| கமப | \| | கம | \| | பத | \|\| |
| மதப | \| | மப | \| | தநி | \|\| |
| பதநி | \| | பத | \| | நிஸ் | \|\| |
| ஸ்நித | \| | ஸ்நி | \| | தப | \|\| |
| நிதப | \| | நித | \| | பம | \|\| |
| தபம | \| | தப | \| | மக | \|\| |
| பமக | \| | பம | \| | கரி | \|\| |
| மகரி | \| | மக | \| | ரிஸ | \|\| |

**தேர்ச்சி:** **3.0** இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம்:** **3.2** தாட்டுவரிசைகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு :** **3.2.1** 1ஆவது, 2ஆவது தாட்டுவரிசைகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவோம்.

**பாடவேளை:** **03**

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- சுருதிப்பெட்டி அல்லது ஹார்மோனியம்
- 1ஆவது, 2ஆவது தாட்டுவரிசைகள் எழுதப்பட்ட அட்டை
- செயற்பத்திரம்

**கற்றற்பேறுகள்:**

- தாட்டுவரிசைகள் அப்பியாசகான வரிசைகளில் ஒன்று என்பதைக் கூறுவார்.
- தாட்டுவரிசைகள் மாயாமாளவகௌளை இராகத்தில் ஆதி தாளத்தில் அமைந்துள்ளது எனக் கூறுவார்.
- தாட்டுவரிசைகளை இயற்றியவர் புரந்தரதாஸர் ஆவார் எனக் கூறுவார்.
- தாட்டுவரிசைகளைப் பயில்வதால் குரல், வளம் பெறுகிறது என்பதை உணர்ந்து கொள்வார்.
- தாட்டுவரிசைகளைச் சுருதி, இராக, தாளத்துடன் ஸ்வரஸ்தாள சுத்தத்துடன் பாடுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

படி 3.2.1.1

- தாட்டுவரிசைகள் அப்பியாசகான உருப்படி என்பதைக் கூறுங்கள்.
- தாட்டுவரிசைகள் மாயாமாளவகௌளை இராகத்தில் ஆதி தாளத்தில் புரந்தரதாஸரால் இயற்றப்பட்டுள்ளது என்பதை விளக்குங்கள்.
- தாட்டுவரிசைகளைப் பயில்வதால் குரல், வளம் பெறுகிறது என்பதைக் கூறுங்கள்.
- 1ஆவது, 2ஆவது தாட்டுவரிசைகள் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்திப் பாடிக்காட்டுங்கள்.
- 1ஆவது தாட்டுவரிசையைப் பகுதி பகுதியாகக் கற்பியுங்கள்.
- 1ஆவது தாட்டுவரிசையைத் தாளத்துடன் கற்பியுங்கள்.
- ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பல தடவைகள் பயிற்சியில் ஈடுபடுங்கள்.
- 2ஆவது தாட்டுவரிசையைப் பகுதி பகுதியாகக் கற்பியுங்கள்.
- 2ஆவது தாட்டுவரிசையைத் தாளத்துடன் கற்பியுங்கள்.
- ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பல தடவைகள் பயிற்சியில் ஈடுபடுங்கள்.
- 1ஆவது, 2ஆவது தாட்டுவரிசைகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பல தடவைகள் பாடிப் பயிற்சி செய்வியுங்கள்.

படி 3.2.1.2
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்படுவதை அவதானியுங்கள்.

படி 3.2.1.2
- ஒவ்வொரு குழுவும் தாட்டுவரிசைகளைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்கள் தமது கருத்திணைக் கூறச் சந்தர்ப்பம் அளியுங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- தாட்டுவரிசைகள் அப்பியாசகான உருப்படிகளில் ஒன்று என்பதைக் கூறுவார்.
- தாட்டுவரிசைகள் அமைந்துள்ள இராகம் மாயாமாளவகௌளை எனவும், தாளம் ஆதி எனவும் குறிப்பிடுவார்.
- தாட்டுவரிசைகளை இயற்றியவர் புரந்தரதாஸர் எனக் குறிப்பிடுவார்.
- தாட்டுவரிசைகளைச் சுருதி, இராக, தாளத்துடன் ஸ்வரஸதாள சுத்தத்துடன் பாடுவார்.

**செயற்பத்திரம்:**

- 1ஆவது தாட்டுவரிசையைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுக.
- 2ஆவது தாட்டுவரிசையைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுக.

## தாட்டு வரிசை –1

இராகம் :- மாயாமாளவகௌளை ஆ - ஸரிகமபதநிஸ்
தாளம் :- திஸ்ரஜாதி திரிபுடைதாளம் அ - ஸ்நிதபமகரிஸ
} 15வத மேளகர்த்தாவின் ஜன்யம்

| $1_4$ | O | O |
|---|---|---|
| ஸமகரி | ஸரி | கம |
| ரிபமக | ரிக | மப |
| கதபம | கம | பத |
| மநிதப | மப | தநி |
| பஸ்நித | பத | நிஸ் |
| ஸ்பதநி | ஸ்நி | தப |
| நிமபத | நித | பம |
| தகமப | தப | மக |
| பரிகம | பம | கரி |
| மஸரிக | மக | ரிஸ |

## தாட்டு வரிசை –2

இராகம் :- மாயாமாளவகௌளை ஆ - ஸ ரி க ம ப த நி ஸ்
தாளம் :- ஆதி அ - ஸ் நி த ப ம க ரி ஸ
} 15வது மேளகர்த்தா இராகம்

| $1_4$ | O | O | $1_4$ | O | O |
|---|---|---|---|---|---|
| ஸமகம | ரிக | ஸரி | ஸஸரிரி | கக | மம |
| ரிபமப | கம | ரிக | ரிரிகக | மம | பப |
| கதபத | மப | கம | கககமம | பப | தத |
| மநிதநி | பத | மப | மமபப | தத | நிநி |
| பஸ்நிஸ் | தநி | பத | பபதத | நிநி | ஸ்ஸ் |
| ஸ்பதப | நித | ஸ்நி | ஸ்ஸ்நிநி | தத | பப |
| நிமபம | தப | நித | நிநிதத | பப | மம |
| தகமக | பம | தப | ததபப | மம | கக |
| பரிகரி | மக | பம | பபமம | கக | ரிரி |
| பஸரிஸ | கரி | மக | மமமகக | ரிரி | ஸஸ |

**தேர்ச்சி:** 3.0 இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம்:** 3.3 கீதத்தைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு :** 3.3.1 ‘‘வாசரவணனே’’ என்ற சஞ்சாரி கீதத்தைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவோம்.

**பாடவேளை:** 03

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- சுருதிப்பெட்டி
- ‘‘வாசரவணனே’’ கீதம் எழுதப்பட்ட அட்டை
- ஒலிப்பதிவுக் கருவி
- இக்கீதம் ஒலிப்பதிவு செய்த ஒலிப்பதிவு நாடா
- செயற்பத்திரம்

**கற்றற்பேறுகள்:**

- அப்பியாசகான உருப்படிகளில் அலங்காரங்களுக்குப் பின் கற்பிக்கப்பட வேண்டிய உருப்படி கீதம் என்பதைக் கூறுவார்.
- முதன்முதலில் ஸ்வர சாகித்திய ரூபமாகக் கற்கும் அப்பியாசகான உருப்படிவகை கீதம் என்பதை விளங்கிக் கொள்வார்.
- கீதம் அங்க வித்தியாசம் இல்லாத உருப்படி என்பதைக் கூறுவார்.
- இச் சஞ்சாரி கீதத்தின் சாகித்தியம் முருகப் பெருமானைக் குறித்துப் பாடப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிடுவார்.
- இக்கீதத்தின் இராகம், தாளம், ஆரோகண, அவரோகணம் என்பவற்றைக் குறிப்பிடுவார்
- இக்கீதமானது பக்தி உணர்வை வெளிப்படுத்துகிறது என்பதைக் கூறுவார்.
- ஹரிகாம்போதி இராகத்தின் ஆரோகண, அவரோகணத்தை ஸ்வரஸ்தான சுத்தமாகப் பாடுவார்.
- ‘‘வாசரவணனே’’ எனும் சஞ்சாரி கீதத்தினைச் சுருதி, இராக, தாளத்துடன் இரண்டு காலங்களிலும் பாடுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

படி 3..3.1.1

- மாணவர் ஏற்கனவே கற்றுக்கொண்ட சஞ்சாரி கீதம் பற்றிக் கேட்டறியுங்கள்.
- ‘‘வாசரவணனே’’ சஞ்சாரி கீதம் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப் படுத்திப் பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடிப் பயிற்சியினை ஆரம்பியுங்கள்.
  - அப்பியாசகான உருப்படி வகைகளில் அலங்காரத்திற்குப் பின் கற்பிக்கப்படும் உருப்படி கீதம் எனக் குறிப்பிடுங்கள்.
  - சாகித்திய ரூபமாகப் பாடப்படும் முதல் உருப்படி கீதம் என விளக்குங்கள்.

- ‘‘வாசரவணனே’’ எனும் சஞ்சாரி கீதம் ஹரிகாம்போதி இராகத்தில் ஆதிதாளத்தில் அமைந்துள்ளது எனக்கூறுங்கள்.

- ‘‘வாசரவணனே’’ என்ற சஞ்சாரி கீதத்தினை ஆசிரியர் பாடிக்காட்டியோ, ஒலிப் பதிவுக்கருவியில் ஒலிக்கச் செய்தோ மாணவரை அவதானிக்கச் செய்யுங்கள்.
- ஹரிகாம்போதி இராகத்தின் ஆரோஹண அவரோஹணத்தைப் பாடிக் காட்டி மாணவரைப் பாடச்செய்யுங்கள்.
- கீதத்தைப் பகுதிபகுதியாக ஸ்வர சாஹித்தியமாகக் கற்பியுங்கள்.
- கீதத்தைத் தாளத்துடன் கற்பியுங்கள்.
- மாணவருடன் சேர்ந்து பல தடவைகள் கீதத்தைச் சுருதி, இராக, தாளத்துடன் இரண்டு காலங்களிலும் பாடிப்பயிற்சி செய்வியுங்கள்.

படி 3..3.1.2

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்படுவதை அவதானியுங்கள்.

படி 3.3.1.3

- ஒவ்வொரு குழுவும் கீதத்தைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனையோரும் அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- சுருதி, இராக, தாளம், ஸ்வரஸ்தானம் விலகிப்பாடிய மாணவர்களுக்கு மேலதிக பயிற்சி வழங்குங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- ‘‘வாசரவணனே’’ என்னும் சஞ்சாரி கீதம் அப்பியாசகான உருப்படிகளில் ஒன்று எனக் கூறுவார்.
- முதன்முதலில் ஸ்வர சாகித்திய ரூபமாகக் கற்கும் அப்பியாசகான உருப்படிவகை கீதம் என்பதை விளக்குவார்.
- ‘‘வாசரவணனே’’ எனும் சஞ்சாரி கீதம் ஹரிகாம்போதி இராகத்தில் ஆதி தாளத்தில் அமைந்துள்ளது எனக்கூறுவார்.
- கீதம் அங்க வித்தியாசம் இல்லாத உருப்படி என்பதைக் கூறுவார்.
- இச் சஞ்சாரி கீதத்தின் சாகித்தியம் முருகப் பெருமானைக் குறித்துப் பாடப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிடுவார்.
- ஹரிகாம்போதி இராகத்தின் ஆரோஹணம், அவரோஹணம் ஸரிகமபதநிஸ், ஸ்நிதபமகரிஸ எனக்கூறிப் பாடிக்காட்டுவார்.
- இக்கீதமானது பக்தி உணர்வை வெளிப்படுத்துகிறது என்பதைக் கூறுவார்.
- ‘‘வாசரவணனே’’ எனும் சஞ்சாரி கீதத்தினைச் சுருதி, இராக, தாளத்துடன் இரண்டு காலங்களிலும் பாடுவார்.

**தேர்ச்சி:** **3.0** இசை உருப்படிகளை சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார்.

**செயற்பத்திரம்:**

- ''வாசரவணனே'' எனும் சஞ்சாரி கீதத்தின் இராகம், தாளம் என்பவற்றைக் கூறுக.
- ''வாசரவணனே'' எனும் சஞ்சாரி கீதத்தைச் சுருதி, இராக, தாளத்துடன் இரண்டு காலங்களிலும் பாடுக.

## கீதம் (வாசரவணனே)

இராகம் : ஹரிகாம்போதி

தாளம் : ஆதி

இயற்றியவர் : பொன்னையாபிள்ளை

ஆ: ஸரிகமபதநிஸ்
அ: ஸ்நிதபமகரிஸ
} 28வது மேளகர்த்தா இராகம்

| $1_4$ | | O | | O | |
|---|---|---|---|---|---|
| மா கரி | \| | க ம | \| | பா | \|\| |
| வா சர | | வ ண | | னே | |
| தம பத | \| | நீ | \| | ஸ்நிதப | \|\| |
| வர மருள் | | வே | | லா. . . | |
| தா நி ப | \| | த நி | \| | ஸ்ா | \|\| |
| தா த மிழ் | | ழி சை | | யே | |
| நி த நி ரி | \| | ஸ்ா | \| | நிஸ்ரிக் | \|\| |
| தாள் தொ ழு | | தே | | நி . தம் | |
| ம் க் ம் ரி | \| | க் ஸ் | \| | ரி நி | \|\| |
| நசை யொ டு | | கு ற | | ம கள் | |
| ஸ்த நி ப | \| | த நி | \| | ஸ்ா | \|\| |
| நகை ம கிழ் | | மு ரு | | கா | |
| ப ஸ் நீ | \| | த ப | \| | த நி | \|\| |
| இசைந் து | | ப ல | | மொழி | |
| ஸ் நி த ப | \| | நி த த ப | \| | மகரிஸ | \|\| |
| இயம் பி னேன் | | கே . . ள் | | நீ . . . | |

**தேர்ச்சி:** 3.0 இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம்:** 3.3 கீதத்தைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு :** 3.3.2 ''சாமி நாதா'' என்ற சஞ்சாரி கீதத்தைச் சுருதி இராக தாளத்துடன் இரண்டு காலங்களிலும் பாடுவோம்.

**பாடவேளை:** 03

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- சுருதிப்பெட்டி
- ''சாமி நாதா'' கீதம் எழுதப்பட்ட அட்டை
- ஒலிப்பதிவுக் கருவி
- இக்கீதம் ஒலிப்பதிவு செய்த ஒலிப்பதிவு நாடா

**கற்றற்பேறுகள்:**

- அப்பியாசகான உருப்படிகளில் அலங்காரங்களுக்குப் பின் கற்பிக்கப்பட வேண்டிய உருப்படி கீதம் என்பதைக் கூறுவார்.
- முதன்முதலில் ஸ்வர சாகித்திய ரூபமாகக் கற்கும் அப்பியாசகான உருப்படிவகை கீதம் என்பதை விளங்கிக் கொள்வார்.
- கீதம் அங்க வித்தியாசம் இல்லாத உருப்படி என்பதைக் கூறுவார்.
- இச் சஞ்சாரி கீதத்தின் சாகித்தியம் முருகப் பெருமானைக் குறித்துப் பாடப்பட்டுள்ளது என்பதைக் குறிப்பிடுவார்.
- இக்கீதத்தின் இராகம், தாளம், ஆரோகண, அவரோகணம் இயற்றியோர் பெயரைக் குறிப்பிடுவார்
- சுத்தசாவேரி இராகத்தின் ஆரோகண அவரோகணத்தை ஸ்வரஸ்தான சுத்தத்துடன் பாடுவார்.
- ''சாமி நாதா'' எனும் சஞ்சாரி கீதத்தினை சுருதி, இராக, தாளத்தோடு இரண்டு காலங்களிலும் பாடுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

படி 3.3.2.1

- ஏற்கனவே கற்ற அப்பியாசகான உருப்படிகள் பற்றிக் கலந்துரையாடி முதன்முதலில் ஸ்வர சாகித்திய ரூபமாகப் பாடப்படும் உருப்படி கீதம் என்பதைக் கூறுங்கள்.
- இச் சஞ்சாரி கீதத்தினைப் பாடியோ ஒலிப்பதிவுக்கருவியில் ஒலிக்கச் செய்தோ மாணவரை அவதானிக்கச் செய்யுங்கள்.
- ''சாமி நாதா'' என்ற சஞ்சாரிகீதம் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப் படுத்தி இராகம், தாளம், ஆரோஹண அவரோஹணம் இயற்றியவர் பெயர் என்பவற்றைக் கூறுங்கள்.
- இச் சஞ்சாரி கீதத்தினை ஸ்வர சாகித்தியமாகப் பகுதி பகுதியாகக் கற்பியுங்கள்.

- ஸ்வர சாகித்தியமாக தாளத்தோடு கற்பியுங்கள்.
- ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து சுருதி, இராக, தாளத்தோடு பாடுங்கள்.

படி 3.3.2.2

- மாணவர்களைக் குழுக்களாப் பிரித்துச் செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்படுவதை அவதானியுங்கள்.

படி 3.3.2.3

- ஒவ்வொரு குழுவும் கீதத்தைப் பாடச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- ஏனைய குழுக்கள் தமது கருத்தினைக் கூற இடமளியுங்கள்.
- சுருதி, இராகம், தாளம், ஸ்வரஸ்தானம் விலகிப்பாடிய மாணவர்களுக்கு மேலதிகப் பயிற்சிகளை வழங்குங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- ''சாமி நாதா'' என்னும் கீதம் அப்பியாசகான உருப்படிகளில் ஒன்று எனக் கூறுவார்.
- சாகித்தியத்துடன் கற்கும் முதல் உருப்படி கீதம் என்பதை விளக்குவார்.
- ''சாமி நாதா'' என்னும் கீதம் சுத்தசாவேரி இராகத்தில் சதுஸ்ரஜாதி ரூபகதாளத்தில் அமைந்துள்ளது எனக் கூறுவார்.
- பக்தி உணர்வை வெளிப்படுத்துவது கீதம் என்பதைக் குறிப்பிடுவார்.
- சுத்தசாவேரி இராகத்தின் ஆரோகண, அவரோஹணம் ஸரிமபதஸ், ஸ்தபமரிஸ எனக் கூறிப் பாடிக்காட்டுவார்.
- ''சாமி நாதா'' என்னும் கீதத்தைச் சுருதி, இராக, தாளத்துடன் இரண்டு காலங்களிலும் பாடுவார்.

**செயற்பத்திரம்:**

- ''சாமி நாதா'' என்னும் கீதத்தின் இராகம், தாளத்தைக் கூறுக.
- ''சாமி நாதா'' என்னும் கீதத்தைச் சுருதி, இராக, தாளத்துடன் இரண்டு காலங்களிலும் பாடுக.

# கீதம் (சாமி நாதா)

இராகம் : சுத்தசாவேரி

தாளம் : ரூபகம்

இயற்றியவர் : பொன்னையாபிள்ளை

ஆ: ஸரிமபதஸ்
அ: ஸ்தபமரிஸ
29வது மேளகர்த்தா இராகம்

| ○ | $1_4$ | ○ | $1_4$ |
|---|---|---|---|
| பா | ம ரீ ஸ | தத | ஸா ஸா |
| சா | மி நாதா | அருள் | வா யே |
| தத | ரி ஸ ரீ | ஸரி | த ஸ ரி ம |
| திரு | வ டி யே | ச ர | ணம் ச ர ணம் |
| பப | மரி பம | ரிஸ | ரிமபத |
| சர | வணபவ | சிவ | குமரனே |
| தப | மபதா | பம | ப த ஸ்ஸ் |
| ஆறு | முகனே | கரு | மு கில்நிகர் |
| ஸ்த | ஸா ரீ | ம்ரி | ஸ் தபத |
| திரு | மாலோன் | மரு | க முருக |
| ஸ்த | ரிஸ்ரித | ஸ்ப | தம பத |
| கும | ரபுலவ | குற | மகள்மகிழ் |
| ஸ்ரி | ம் ரீ ரி | ம்ரி | ம்ரிஸ்த |
| கண | வவேலை | கத | றிடவடி |
| ரீ | ஸ் த ப ம | பம | ரிஸரிம |
| வே | லைவாங்கும் | கை | யாசரணம் |

**தேர்ச்சி:** 3.0 இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம்:** 3.4 ஜதிஸ்வரத்தை சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு :** 3.4.1 “ஸா,ரிகாபா” எனும் ஜதிஸ்வரத்தைச் சுருதி, இராக, தாளத்தோடு பாடுவோம்.

**பாடவேளை:** 03

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- சுருதிப்பெட்டி
- ஜதிஸ்வரம் எழுதப்பட்ட அட்டை
- செயற்பத்திரம்

**கற்றற்பேறுகள்:**

- ஜதிஸ்வரம் அப்பியாசகான உருப்படிகளில் ஒன்று எனக் கூறுவார்.
- ஜதிஸ்வரத்தின் அமைப்பு, அதன் தன்மை பற்றி விளக்குவார்.
- ஜதிக்கோர்வைகளை ஆதாரமாகக் கொண்ட உருப்படி வகை என்பதைக் குறிப்பிடுவார்.
- ஜதிஸ்வரம் நாட்டிய நிகழ்ச்சியில் இரண்டாவது நிகழ்ச்சியாக இடம்பெறும் என்பதைக் கூறுவார்.
- ஜதிஸ்வரத்தின் ஸ்வரரூபமாகப் பாடப்படுகிறது என்பதைக் கூறுவார்.
- ஜதிஸ்வரத்தை இயற்றியவர் பெயரைக் குறிப்பிடுவார்.
- ஜதிஸ்வரத்தை சுருதி, இராக தாளத்துடன் பாடுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

படி 3.4.1.1
- ஜதிஸ்வரத்தை ஆசிரியர் பாடிக்காட்டி மாணவரைச் செவிமடுக்கச்செய்யுங்கள்.
- ஜதிஸ்வரம் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி, இராகம், தாளம், இயற்றியவர் பெயரைக் குறிப்பிடுங்கள்.
- ஜதிஸ்வரம் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்கங்களைக் கொண்டது என விளக்குங்கள்.
- இது நாட்டியத்திற்காக இயற்றப்பட்ட உருப்படி வகை என்றும் நாட்டிய நிகழ்ச்சியில் இரண்டாவது நிகழ்ச்சியாக இடம்பெறும் என்பதைக் குறிப்பிடுங்கள்.
- ஜதிஸ்வரம் ஜதிக் கோர்வைகளை ஆதாரமாகக் கொண்ட உருப்படி வகை என்பதைக் குறிப்பிடுங்கள்.
- ஜதிஸ்வரம் ஸ்வர ரூபமாகப் பாடப்படுகிறது என்பதை விளக்குங்கள்.
- ஜதிஸ்வரம் இயற்றியவர்களில் பொன்னையாப்பிள்ளை, ஸ்வாதித்திருநாள் மகாராஜா ஆகியோரைக் குறிப்பிடுங்கள்.
- ஜதிஸ்வரத்தைப் பகுதி பகுதியாகக் கற்பியுங்கள்.

- ஜதிஸ்வரத்தைப் பகுதி பகுதியாகத் தாளத்துடன் கற்பியுங்கள்.
- ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பல தடவைகள் சுருதி, இராக, தாளத்துடன் பாடிப் பயிற்சி செய்யுங்கள்.

படி 3.4.1.2
- மாணவர்களைக் குழுக்களாக்கிச் செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்படுவதை அவதானியுங்கள்.

படி 3.4.1.3
- மாணவர் தனியாகவோ, குழுவாகவோ ஜதிஸ்வரத்தைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இவ்வாறு பாடுதலை, ஏனையோரும் அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- பாடுகையில் ஏற்படும் இடர்ப்பாடுகளை நீக்கி முழுமைப்படுத்தி, மீளவலியுறுத்துங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- ஜதிஸ்வரம் அப்பியாசகான உருப்படி வகை என்பதைக் குறிப்பிடுவார்.
- ஜதிஸ்வரம் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்கங்களைக் கொண்டது எனக் கூறுவார்.
- ஜதிக்கோர்வைகளை ஆதாரமாகக் கொண்ட உருப்படி வகை என்பதைக் குறிப்பிடுவார்.
- ஜதிஸ்வரம் நாட்டிய நிகழ்ச்சியில் இரண்டாவது நிகழ்ச்சியாக இடம்பெறும் என்பதைக் கூறுவார்.
- ''ஸா, ரி காபா'' என்ற ஜதிஸ்வரம் அமைந்துள்ள இராகம் பிலஹரி எனவும் தாளம் ஆதி எனவும் குறிப்பிடுவார்.
- ''ஸா, ரி காபா'' என்ற ஜதிஸ்வரத்தை சுருதி, இராக தாளத்துடன் பாடுவார்.

**செயற்பத்திரம்:**
- ''ஸா, ரி காபா'' என்ற ஜதிஸ்வரம் அமைந்துள்ள இராகம் தாளம் என்பவற்றைக் கூறுக.
- ''ஸா, ரி காபா'' என்ற ஜதிஸ்வரத்தை சுருதி, இராக தாளத்துடன் பாடுக.

## ஜதிஸ்வரம் (ஸா, ரிகாபா)

இராகம் : பிலஹரி
தாளம் : ஆதி

ஆ: ஸரிகபதஸ்
அ: ஸ்நிதபமகரிஸ
29வது மேளகர்த்தா இராகம்

1₄ ○ ○

பல்லவி

ஸா, ரி கா பா தாஸ்ா நீதா | பா தப மகரிஸ | ரிஸ நித ஸா || (ஸா, ரி)

அனுபல்லவி

ஸா, ரி காபா மா, க பாதா | ரீ, ஸ் நீ தா | பா, ம கா ரீ || (ஸா, ரி)

சரணம்

01. கபதரி ஸ்ஸ்ஸா க்க்கா ரிரிரீ | பபபா மககா | ரிஸஸா ரிஸ நித || (ஸா, ரி)

02. ஸா, ரி காகாகா ; ; ரிக | பா, ப பாபா | பா ; ; தப ||
ஸ்ா, ஸ் ஸ்ாஸ்ா க்ரிஸ்நி நிதபா | பத பம கக ரீ | கப மக ரிஸ ரிக || (ஸா, ரி)

03. பபபா ரிரிரீ கப மக கா ; | கப மக மக ரிஸ | ரிக ரிஸ ஸா ; ||
ரிஸ நித ஸா ; மக ரிகபா ; | தப தரி ஸ்ா ; | ரிஸ் நித பமகரி || (ஸா, ரி)

04. பா ; மக ரிக தா ; மகரிக | பா ; மக ரிக | பா பா பா ; ||
க்ா ; ரிஸ்நித ரீ ; ரிஸ்நித | ஸ்ா ; ரிஸ் நித | ஸ்ா ஸ்ா ஸ்ா ; ||
க்ா ; ரிஸ் ரிரிரீ ; ரீஸ்நி | தா தா தா ; | பா மக கா கா ; ||
கா ; ஸரி கதபா ; ரிஸ்ரிக | ஸ்ா ; க்ரிஸ்நி | தப மக ரிஸ ரிக || (ஸா, ரி)

**தேர்ச்சி:** 3.0 இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம்:** 3.5 ஸ்வரஜதியை சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு :** 3.5.1 ''சம்போ மஹாதேவா'' என்ற ஸ்வரஜதியைச் சுருதி, இராக, தாளத்தோடு பாடுவோம்.

**பாடவேளை:** 04

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- சுருதிப்பெட்டி.
- ஸ்வரஜதி எழுதப்பட்ட அட்டை.
- செயற்பத்திரம்.

**கற்றற்பேறுகள்:**
- ஸ்வரஜதி அப்பியாசகான உருப்படி வகையைச் சேர்ந்தது எனவும், ஜதிஸ்வரத்தைக் கற்றப்பின் கற்பிக்கப்படும் உருப்படி எனவும் விளங்கிக்கொள்வார்.
- ஸ்வரஜதிக்கு பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்க வித்தியாசங்கள் உண்டு எனவும், ஒன்றிற்கு மேற்பட்ட சரணங்கள் கொண்ட உருப்படி எனவும் குறிப்பிடுவார்.
- ஸ்வரஜதி ஸாகித்திய ரூபமாகப் பாடப்படுகிறது என்பதைக் கூறுவார்.
- ஸ்வரஜதியின் ஸாகித்தியம் பக்தி, காதல், வீரம் முதலிய உணர்ச்சிகளை வெளிப்படுத்துவதாக உணர்ந்து கொள்வார்
- ''சம்போ மஹாதேவா'' என்ற பாடல் அமைந்துள்ள இராகம், தாளம், இயற்றியவர் பெயர் என்பவற்றைக் குறிப்பிடுவார்
- ''சம்போ மஹாதேவா'' என்ற ஸ்வரஜதியைச் சுருதி இராக தாளத்துடன் பாடுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

படி 3.5.1.1

- ஸ்வரஜதி என்னும் உருப்படி அப்பியாசகான உருப்படி வகையைச் சேர்ந்தது எனக்கூறுங்கள்.
- ஜதிஸ்வரம் என்ற உருப்படியைக் கற்றபின் கற்பிக்கப்படும் உருப்படி ஸ்வரஜதி என்பதைக் கூறுங்கள்.
- ஸ்வரஜதி பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்கங்களைக் கொண்டது எனவும் ஒன்றுக்கு மேற்பட்ட சரணங்கள் உண்டெனவும் கூறுங்கள்.
- ஸ்வரஜதி ஸாகித்திய ரூபமாகப் பாடப்பபடுகிறது என்பதை விளக்குங்கள்.
- ஸ்வரஜதியின் ஸாகித்தியம் பக்தி, காதல், வீரம் முதலிய உணர்வுகளை வெளிப்படுத்துவன என்பதைக் குறிப்பிடுங்கள்.
- ஜதிஸ்வரம் ஜதிக்கோர்வைகளை ஆதாரமாகக் கொண்ட உருப்படி வகை என்பதைக் குறிப்பிடுங்கள்.

- ''சம்போ மஹாதேவா'' என்ற ஸ்வரஜதி எழுதப்பட்ட பாடலட்டையைக் காட்சிப்படுத்தி, குறிப்பிட்ட ஸ்வரஜதியின் இராகம் - கமாஸ், தாளம் - ஆதி, இயற்றியவர் T.V பிச்சையப்பா என்பதையும் விளக்குங்கள்.
- ''சம்போ மஹாதேவா'' என்ற ஸ்வரஜதியைச் ஸ்வர ஸாகித்தியமாகப் பகுதி பகுதியாகக் கற்பியுங்கள்.
- ஸ்வரஜதியை தாளத்துடன் கற்பியுங்கள்.
- இவவுருப்படியினை ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து தாளத்துடன் பாடுங்கள்.
- ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பல தடவைகள் சுருதி, இராக, தாளத்துடன் பாடிப் பயிற்சி செய்வியுங்கள்.

படி 3.4.1.2

- மாணவர்களைக் குழுக்களாக்கிச் செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்படுவதை அவதானியுங்கள்.

படி 3.4.1.3

- மாணவர் தனியாகவோ, குழுவாகவோ ஸ்வரஜதியைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இவ்வாறு பாடுதலை, ஏனையோரும் அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- சுருதி, இராக, தாளம் விலகப்பாடிய மாணவர்களுக்கு மேலதிகப் பயிற்சிகளை வழங்குங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- ஸ்வரஜதியின் அங்கங்களைக் கூறுவார்.
- ஸ்வரஜதி பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்கங்களைக் கொண்டது எனக் கூறுவார்.
- ஸ்வரஜதி ஸாகித்திய ரூபமாகப் பாடப்படும் உருப்படி எனக் குறிப்பிடுவார்.
- ''சம்போ மஹாதேவா'' என்ற ஸ்வரஜதி கமாஸ் இராகம், ஆதி தாளத்தில் அமைந்துள்ளதெனக் கூறுவார்
- ''சம்போ மஹாதேவா'' என்ற ஸ்வரஜதியை இயற்றியவர் T.V பிச்சையப்பா எனக் குறிப்பிடுவார்.
- ''சம்போ மஹாதேவா'' என்ற ஸ்வரஜதியைச் சுருதி, இராக தாளத்துடன் பாடுவார்.

**செயற்பத்திரம்:**

- ''சம்போ மஹாதேவா'' என்ற ஸ்வரஜதி அமைந்துள்ள இராகம் தாளம் என்பவற்றைக் கூறுக.
- ''சம்போ மஹாதேவா'' என்ற ஸ்வரஜதியை சுருதி, இராக தாளத்துடன் பாடுக.

# ஸ்வரஜதி (சம்போ மகா தேவா)

இராகம் : கமாஸ்　　　　ஆ: ஸமகமபதநிஸ் ⎫ 28வது மேளகர்த்தாவின்
தாளம் : ஆதி　　　　அ: ஸ்நிதபமகரிஸ ⎭ ஜன்யம்

## பல்லவி

1 ஸ்ா , நீ , தா பா ; மா கா | மா ; ; கா | மா பா தா நீ ||
சம் . போ . ம ஹா . . தே வா . . சா ம் ப சி வ

2 ஸ்ா , நீ த மப நி தப த மாக | மா ; ; கா | மா பா தா நீ ||
சம் . போ . ம . ஹா . . தே . . வா . . சா ம் ப சி வ

## அனுபல்லவி

ஸ்ா ; தநீ ; பமா , நிதா , ப | மா , கமா , த | மா , ப தா நீ ||
சங் . கரா . சதா . சிவா . ம னம் . கனிந் . த ருள் . த ர வா

## சரணம்

01. ஸ்ஸ்ரி நிஸ்ாநித பபதம பாமக | ஸஸா ம காமா | பமா பா த நீ ||
அகில சரா சர பசுபதி யாகிய ப ரம் பொருளே பரம் ஜோ தி யே

02. நீஸ் தா நி ப த பமா நி தா ; | பம ப மா க மா | கா ம பா த நீ ||
பூம னோ க ர னே மகே ஸ் ரா . மது ரை மீ னா ட்சி சொக் க நா த னே

03. தா த ஸ் நி தா பா, த மக மா | ஸா , மா க மா | பத நித நீ ; ||
நீ லோ த ப ல மா . து மரு வும் த்யா .கே ச னே சுந் தர னே .
ஸ்ாரி நீ , நிநி ஸ்தா , மபத நி | ஸ்ா , த நீ , ப | தமா பாத நீ ||
நித்ய னே. நிம லனே . அரனே . நீ . ல கண் . ட மஹா தேவ னே

04. ஸ்ா ; ; நிஸ் நி தா பத மா க | மா ; ; மக | ம நிதநி தபத நி ||
நீ . . பார் வ தி பர மேஸ் வ ரா . . கை லா. . ச வா. .சா
ஸ்ஸ்ம்க் ஸ்ாஸ்ா நிஸ் நி தநீநீ | நி ஸ்ா நி த நீ த | பா த ம பா த நி ||
உனதரு ளாலே உனை மறவாமல் நினைந்து நினைந்து கண்ணீர் சொரிந்து
ஸ்ாரிஸ் ரிஸ்நீ நீஸ் நிஸ்நிதா | மா கமா த ப த | நீ ப த நீ த நி ||
கா னர சமுடன் தாளலயமுடன் உன் பகழ் பா . டி உன்னடி சேர வே
ஸ்ாரிஸ்ா , நிஸ் நீ , த நீ ; | ஸ்ாரிஸ் ரீ ஸ் நி | ஸ்ாநித மப த நி ||
ரா ஜனே . நட ரா . ஜனே . நல்லை ந கர் தா சன்முறைகேட்ட ருள்

**தேர்ச்சி:** 3.0 இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம்:** 3.6 திவ்ய நாமக் கீர்த்தனையைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு :** 3.6.1 ''ஸ்ரீ ராமா'' என்ற திவ்ய நாமக் கீர்த்தனையைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவோம்.

**பாடவேளை:** 03

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- சுருதிப்பெட்டி
- ''ஸ்ரீ ராமா'' என்ற திவ்ய நாமக் கீர்த்தனை எழுதப்பட்ட அட்டை
- ஒலிப்பதிவுக் கருவி
- இக்கீதம் பதிவு செய்யப்பட்ட ஒலிப்பதிவு நாடா

**கற்றற்பேறுகள்:**

- ''ஸ்ரீ ராமா'' எனத் தொடங்கும் ஸஹானா இராக திவ்ய நாமக் கீர்த்தனையைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார்.
- திவ்ய நாமக் கீர்த்தனையை இயற்றியவர் ஸ்ரீ தியாகராஜர் எனக் கூறுவார்.
- ''ஸ்ரீ ராமா'' என்ற திவ்ய நாமக் கீர்த்தனையைக் கூறுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

படி 3.6.1.1

- ''ஸ்ரீ ராமா'' என்ற திவ்ய நாமக்கீர்த்தனையைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடியோ, ஒலிப்பதிவுக்கருவியில் ஒலிக்கச் செய்தோ மாணவரை அவதானிக்கச் செய்யுங்கள்.
- ''ஸ்ரீ ராமா'' என்ற திவ்ய நாமக்கீர்த்தனை எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி இராகம், தாளம், இயற்றியவர் என்பவற்றைக் கூறுங்கள்.
- ''ஸ்ரீ ராமா'' என்ற திவ்ய நாமக் கீர்த்தனை பல்லவி, சரணங்களைக் கொண்டது எனக் கூறுங்கள்.
- திவ்ய நாமக் கீர்த்தனையைச் இயற்றியவர் ஸ்ரீ தியாகராஜர் எனக் குறிப்பிடுங்கள்.
- பகுதி பகுதியாகக் கற்பியுங்கள்.
- தாளத்தோடு பாட வழிப்படுத்துங்கள்.
- ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து சுருதி, இராக, தாளத்தோடு பல தடவைகள் பாடுங்கள்.

படி 3.6.1.2

- மாணவர்களைத் தனியாகவோ, குழுக்களாகவோ ''ஸ்ரீ ராமா'' என்ற திவ்ய நாமக் கீர்த்தனையைப் பாடிப் பயிற்சி செய்யச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர்கள் பயிற்சி செய்கிறார்களா என்பதை உறுதி செய்யுங்கள்.

- சுருதி, தாளம், ஸ்வரஸ்தானம் விலகிப் பாடிய மாணவர்களுக்கு மேலதிக பயிற்சிகளை வழங்குங்கள்.

படி 3.6.1.3

- செயற்பாட்டின் பேறுகளை சமர்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனையோரும் அவதானித்துக் கருத்துக் கூற இடமளியுங்கள்.
- தனியாகவோ, குழுவாகவோ திவ்ய நாமக் கீர்த்தனையைப் பாடச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

1. ''ஸ்ரீ ராமா'' என்ற திவ்ய நாமக் கீர்த்தனையின் இராகம், தாளம், இயற்றியவர் விபரம் கூறுவார்.
2. ''ஸ்ரீ ராமா'' எனற் திவ்ய நாமக் கீர்த்தனையைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார்.

## திவ்யநாம கீர்த்தனை (ஸ்ரீ ராமா)

இராகம் : ஸஹானா
தாளம் : ஆதி
இயற்றியவர் : தியாகராஜஸ்வாமிகள்

ஆ: ஸரிகமபமதாநிஸ்
அ: ஸ்நிதபமகாமரீகரிஸ
} 28வது மேளகர்த்தாவின் ஜன்யம்

$1_4$ O O

பல்லவி

ரீ ரீ ; கா மா பா, த ப மா ; | கா மக ரீ க ரி | ஸ நீ ஸா ; ||
ஸ்ரீ ரா . மா ஸ்ரீ ரா . மா . . ஸ்ரீ ம . னோ . . ஹ ர் மா . (ஸ்ரீ)

சரணம்

01. தா நீ ஸ்ா ; தா நீ ஸ்ா ; | தா நி த பா , ம | ரீ க ம பா ; ||
ஏ ல ரா . நீ த ய . இ ந் தை ன . ரா . த யா . (ஸ்ரீ)

(மற்றைய சரணங்களை இதே போல பாடவும்)

02. சாலதா ஸதயா ஸ்வாமிதா ளதயா || (ஸ்ரீ)

03. இப்புடே லேதட இகனுப் ரோதுவட || (ஸ்ரீ)

04. எப்புடோ கடகட யிகத யாளுவட || (ஸ்ரீ)

05. இங்கயீ மர்மமா இதிநீகு தர்மமா || (ஸ்ரீ)

06. பங்கஜ வதனமா பாகுக ஜுடுமா || (ஸ்ரீ)

07. ஏஜன்ம பாபமோ எவ்வரி சாபமோ || (ஸ்ரீ)

**தேர்ச்சி:** **3.0** இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம்:** **3.7** கீர்த்தனையைச் சுருதி இராக தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு :** **3.7.1** “தேவ தேவ” என்ற மாயாமாளவகௌளை இராக கீர்த்தனையைச் சுருதி இராக தாளத்துடன் பாடுவோம்.

**பாடவேளை:** **04**

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- சுருதிப்பெட்டி , ஒலிப்பதிவு கருவி.
- பாடல் எழுதப்பட்ட அட்டை ஒலிப்பதிவு நாடா.
- செயற்பத்திரம்.

**கற்றற்பேறுகள்:**

- “தேவ தேவ” என்னும் மாயாமாளவகௌளை இராக கீர்த்தனையைச் சுருதி இராக தாளத்துடன் பாடுவார்.
- இக்கீர்த்தனையை இயற்றியவர் சுவாதித்திருநாள் மகாராசா என அறிவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

படி 3.7.1.1
- ஆசிரியர் கீர்த்தனையை ஒலிப்பதிவுக்கருவியில் போட்டுக்காட்டுதல் அல்லது பாடிக்காட்டுங்கள்.
- பாடல் அட்டையைக் காட்சிப்படுத்தி இராகம் தாளம் இயற்றியவர் விபரம் கூறுங்கள்.
- கீர்த்தனை பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய அங்கங்களைக் கொண்டது எனக்குறிப்பிடுங்கள்.
- கீர்த்தனையைப் பகுதி பகுதியாகக் கற்பியுங்கள்.
- தாளத்துடன் பகுதி பகுதியாகக் கற்பியுங்கள்.
- ஆசிரியரும் மாணவர்களும் சேர்ந்து பல தடவைகள் சுருதி தாளத்துடன் பயிற்சி செய்யுங்கள்.

3.7.1.2
- மாணவர்களைக் குழுக்களாகப்பிரித்துச் செயற்பத்திரம் வழங்குங்கள்.
- செயற்பாட்டில் ஈடுபடுவதை அவதானியுங்கள்.

3.7.1.3
- செயற்பாட்டின் பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- கருத்துக்கூற இடமளியுங்கள்.
- சுருதி தாளம் விலகிப்பாடிய மாணவர்களுக்கு மேலதிக பயிற்சி வழங்குங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- தேவ தேவ என்ற கீர்த்தனையின் இராகம் தாளம் இயற்றியவர் விபரம் கூறுவார்.
- சுருதி தாளத்துடன் பாடிக்காட்டுவார்.

**செயற்பத்திரம்:** **3.7.1.2**

- சகல குழுக்களுக்கும் செயற்பத்திரத்தினை வழங்குதல்.
- தேவ தேவ என்ற கீர்த்தனையைச் சுருதி தாளத்துடன் பாடுக.
- இக்கீர்த்தனையின் இராகம் தாளம் இயற்றியவர் விபரம் குறிப்பிடுக.

## மத்திமகாலக்கீர்த்தனை (தேவ தேவ)

இராகம் : மாயாமாளவகௌளை — ஆ: ஸரிகமபதநிஸ் } 15வது மேளகர்த்தா
தாளம் : ரூபகம் — அ: ஸ்நிதபமகரிஸ } இராகம்
இயற்றியவர் : ஸ்வாதித்திருநாள் மகாராஜா

பல்லவி

01 ஸா ; ரீ கா ; மா || பாபா ப பமக மாபா ||
தே . வ தே . வ க ல யா. . . மிதே
; பா தா ; பாமா || ம கமப ப ம கம கரிஸநி ||
. சர ணாம் . பு ஜ ஸே . . . வ . . . ன. ம் .

02 ஸா ; ரீ கா ; மா || ப ம பா ப பமக மாபா ||
தே . வ தே . வ க . ல யா . . . மிதே
; தநி தாபா பா ப ம || ம கமத ப ம கம கரிஸநி ||
. சர ணாம் பு ஜ . ஸே . . . வ . னம் . . . .

03 ஸா ; ரீ கா ; மா || ப த மப க மபத நீஸ்ா ||
தே . வ தே . வ க . ல . யா . . . மிதே
ஸ்ாஸ்ரி ஸ்நி தா பாமா || க மதப ப ம கம கரிஸநி ||
சரணா . . ம் புஜ ஸே . . . வ . னம் . . . .

04 ஸா ; ரீ கா ; மா || த த பம க மபத நீஸ்ா ||
தே . வ தே . வ க . ல . யா . . . மிதே
ஸ்நி க்ரிஸ்நி தா பாதா || நி ஸ்நித தப மக மகரிஸ ||
சர ணா ம் பு ஜ ஸே . . . வ . னம் . . . .

அனுபல்லவி

01 ,ப தா பா ; மாபா || ப ப ம க மாபா ; ; ||
பு வ ன . த்ரய நா . . ய க . . .

02 , தநி த பா ; பமதப || ப பம க மாபா ; ; ||
. புவ ன . . த்ரய . நா . . ய க . . .

03 , தநி த பா ; பமதப || ப பம கமாபா ; ; ||
. புவ ன . . த்ரய . நா . . ய க . . .
க மபா பா ம ப த ப தா || ப தநிததா நீ ஸ்ா ; ||
பூ . . ரி க . ரு . ண யா . . . ம ம .

;    ஸ்ா    ஸ்ா ஸ்நி க்ரிஸ்ா    || ஸ்நிதா    நீ ; ஸ்ா ;    ||
.    ப    வ தா. . . ப    ம . .    கி . லம் .
ஸ்ா ;    ஸ்நிதா பாமா    || ம கமத    ப ம க மகரிஸா ||
வா .    ரா . . ய .    ரா . . .    ம . கா . . ந்த

;    ஸ்ா    ஸ்ா ஸ்நி க்ரிஸ்ா    || ஸ்நிதா    நீ ; ஸ்ா ;    ||
.    ப    வ தா. . . ப    ம . .    கி . லம் .
ஸ் ரிக்ம்    க் ரிஸ்நி தபதநி    || ரி ஸ்நித ப ம    க மக ரிஸநி    ||
வா . . .    ரா . . . ய . . .    ரா . . . ம . கா . . ந்த .

(தேவ தேவ)

சரணம்

01 ; பா    ம க ப ம க ரிஸநி || ஸா ரீ    கா ; மா ;    ||
. ஜா    த . ரு . . . ப .    நி ப    சே . ல .

;    கம    , பா ; தாப    || ம ப மா    ; ம கபம க ரி    ||
.    ஜந்    . மார் . ஜித    ம . மா    . கி . . . ல .

02 க மபத மப க மகரிஸநி    || ஸா ரீ    பா ம க மா ;    ||
ஜா . . . த . ரு . . . ப .    நி ப    சே . . ல .

;    கம    , பா ; தாப    || ம ப மா    ; ம கபம க ரி    ||
.    ஜந்    . மார் . ஜித    ம . மா    . கி . . . ல .

; ஸ ரி    , கமா கரி ஸா    || ரீஸா    ஸா ரி க ரிஸஸா    ||
. பா .    . தக ஸஞ் .    ச .    ய . மீ . . ஹ

;    ஸா    ரீ க ரி கா ;    || ம க ம ப    ம க ரி ரி ஸா ;    ||
.    வா    . ர . ய .    க . ரு .    ண . . . யா .

திதி ஜாளி விதளன    தீந பந்தோ    மாமவ
ஷ்ருத விபுத சாலஸ்ரீ    பதமநாப ஷௌரே

**தேர்ச்சி:** 3.1 இசை உருப்படிகளைச் சுருதி இராக, தாளத்துடன் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம்:** 3.8 தேவாரங்களைப் பண்முறைக்கு ஏற்ப சுருதி இராக, தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு :** 3.8.1 ''ஒடுங்கும் பிணி'' என்ற தேவாரத்தினைப் பண்முறைக்குகேற்ப பாடுவோம்.

**பாடவேளை:** 02

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- சுருதிப்பெட்டி.
- கைத்தாளம்.
- தேவாரம் எழுதப்பட்ட அட்டை.

**கற்றற்பேறுகள்:**

- தேவாரம் அமைந்துள்ள பண் பழந்தக்கராகம் என்பதைக்கூறுவார்.
- தேவாரம் பாடப்பட்ட தலம்.
- தேவாரத்தைச் சமய நிகழ்வுகளில் பண்முறைக்கேற்பப் பாடுவார்.
பக்தியை வெளிப்படுத்துவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

படி 3.8.1.1

- மாணவர்கள் கற்றுக்கொண்ட தேவாரங்களை நினைவுபடுத்திக் கலந்துரையாடுங்கள்.
- எடுத்துக்கொண்ட தேவாரத்தைப் பண்முறைக்கேற்ப பாடிக்காட்டுங்கள்.
- பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
- தேவாரத்தின் பண் - பழந்தக்கராகம்
- இராகம் - ஆரபி
- தாளம் - ஆதி
- தலம் - திருத்தூங்கானைமாடம்
- அருளியவர் - சம்பந்தர்

என்பவற்றை மாணவர் அறியச்செய்யுங்கள்.
- "ஒடுங்கும்பிணி" என்ற தேவாரத்தினைப் பொருள் உணர்ந்து உச்சரிப்புத் தெளிவுடன் சொல்வதற்கு வழிப்படுத்துங்கள்.
- தேவாரத்தினைக் காட்சிப்படுத்தி அதனைப்பகுதி பகுதியாகப்பாட, மாணவர் தொடர்ந்து பாடுவதற்கு இடமளியுங்கள்.
- மாணவருடன் சேர்ந்து பண்முறைக்கேற்பத் தாளத்துடன் தேவாரத்தினை முழுமையாகப்பாடுங்கள்.

படி 3.8.1.2
- மாணவர்களைக் குழுக்களாக்கி செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் பயிற்சி பெறுவதை உறுதி செய்யுங்கள். குழுக்குழுவாக அவதானியுங்கள்.

படி 3.8.1.3
- குழுக்களின் கருத்துப்பரிமாற்றத்திற்கு இடமளியுங்கள்.
- மாணவர்களின் குறைகளை இனங்கண்டு முழுமைப்படுத்துங்கள்.
- சுருதி தாளம் விலகிப்பாடிய மாணவர்களுக்கு மேலதிகப்பயிற்சிகளை வழங்குங்கள்.
- ஆசிரியரும் மாணவரும் சேர்ந்து பாடிப்பயிற்சி செய்யுங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- "ஒடுங்கும்பிணி" என்ற தேவாரத்தின் பண்ணைக் கூறுவார்.
- "ஒடுங்கும்பிணி" என்ற தேவாரத்தின் இராகம், தாளம் தலம் அருளியவர் ஆகியவற்றைக் குறிப்பிடுவார்.
- "ஒடுங்கும்பிணி" பண்முறைக்கேற்ப தேவாரத்தினைப்பாடுவார்.

## தேவாரம் (ஒடுங்கும் பிணி)

இராகம் : ஆரபி

பண் : பழந்தக்கராகம்

தாளம் : ஆதி

தலம் : திருத்தூங்கானைமாடம்

அருளியவர் : திருஞானசம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

ஒடுங்கும் பிணிபிறவி கேடென்றிவை
யுடைத்தாய் வாழ்க்கை யொழியத் தவம்
அடங்கு மிடங் கருதி நின்றீரெல்லா
மடிக ளடிநிழற்கீ ழாளாம் வண்ணம்
கிடங்கும் மதிலுஞ்சி லாவியெங்குங்
கெழுமனைக டோறும் றையின்னொலி
தொடங்குங் கடந்தைத்த டங்கோயில்சேர்
தூங்கானை மாடந் தொழுமின்களே

திருச்சிற்றம்பலம்

**தேர்ச்சி:** 3.0 இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம்:** 3.8 தேவாரங்களைப் பண்முறைக்கேற்பச் சுருதி, இராக, தாளத்துடன் பண்முறைக்கேற்ப பாடுவார்.

**செயற்பாடு :** 3.8.2 ''தாயினும் நல்ல '' என்ற தேவாரத்தைப் பண்முறைக்கேற்ப பாடுவோம்.

**பாடவேளை:** 02

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- சுருதிப்பெட்டி.
- தேவாரம் எழுதப்பட்ட அட்டை.

**கற்றற்பேறுகள்:**

- தேவாரம் அமைந்துள்ள பண் புறநீர்மை என்பதைக் கூறுவார்.
- தேவாரம் பாடப்பட்ட தலம் திருக்கோணேச்சரம் எனக்கூறுவார்.
- இத்தேவாரம் அமைந்த இராகம் பூபாளம் எனக்கூறுவார்.
- தேவாரத்தைச் சமய நிகழ்வுகளில் பண்முறைக்கேற்ப பாடுவார்.
- பக்தி உணர்வை வெளிப்படுத்துவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

படி 3.8.2.1

- மாணவர்கள் கற்றுக்கொண்ட தேவாரங்களை நினைவுபடுத்திக் கலந்துரையாடுங்கள்.
- எடுத்துக்கொண்ட தேவாரத்தை பண்முறைக்கேற்ப பாடிக்காட்டுங்கள்.
- பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
- தேவாரத்தின் பண் - புறநீர்மை
  இராகம் - பூபாளம்
  தாளம் - ஆதி
  தலம் - திருக்கோணேச்சரம்
  என்பவற்றை மாணவர் அறியச்செய்தல்.
- ''தாயினும் நல்ல'' என்ற தேவாரத்தைப் பொருள் உணர்ந்து உச்சரிப்புத் தெளிவுடன் சொல்வதற்கு வழிப்படுத்துங்கள்.
- தேவாரத்தினைக் காட்சிப்படுத்தி அதனைப்பகுதி பகுதியாகப் பாட மாணவர் தொடர்ந்து பாடுவதற்கு இடமளியுங்கள்.
- மாணவருடன் சேர்ந்து பண்முறைக்கேற்ப தாளத்துடன் தேவாரத்தினை முழுமையாகப்பாடுங்கள்.

படி 3.8.2.2
- மாணவர்களைச் சிறு சிறு குழுக்களாக்கி செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் சரியாகப் பயிற்சி பெறுவதை உறுதி செய்யுங்கள்.
- குழுகுழுவாக அவதானியுங்கள்.

படி 3.4.1.3
- குழுக்களின் கருத்துக்களை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர்களின் குறைகளை இனங்கண்டு முழுமைப்படுத்துங்கள்.
- சுருதி தாளம் விலகிப்பாடிய மாணவர்களுக்கு மேலதிகப் பயிற்சிகளை வழங்குங்கள்.
- ஆசிரியருடன் சேர்ந்து மாணவருக்குப் பயிற்சி செய்வியுங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- ''தாயினும் நல்ல '' என்னும் தேவாரத்தின் பண்ணைக் கூறுவார்.
- ''பொன்னார் மேனியனே'' தேவாரத்தின் இராகம், தாளம், தலம் அருளியவர் ஆகியவற்றைக் குறிப்பிடுவார்.
- பண்முறைக்கேற்ப தேவாரத்தினைப் பாடுவார்

## தேவாரம் (தாயினும் நல்ல)

இராகம் : பூபாளம் பண் : புறநீர்மை
தாளம் : ஆதி தலம் : திருக்கோணேஸ்வரம்
அருளியவர் : திருஞானசம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

தாயினும் நல்ல தலைவரென்றடியார்
தம்மடி போற்றிசைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவி நின்றகலா
மான்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியும் தொழிலர் பா நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமாமலை அமர்ந்தாரே

திருச்சிற்றம்பலம்

**தேர்ச்சி:** 3.0 இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம்:** 3.9 திருவாசகத்தைச் சுருதி இராகத்துடன் சுத்தாங்கமாகப் பாடுவார்.

**செயற்பாடு :** 3.9.1 அம்மையே அப்பா என்னும் முல்லைப் பண்ணில் அமைந்த திருவாசகத்தைப் பாடிப்பழகுவோம்.

**பாடவேளை:** 02

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- சுருதிப்பெட்டி.
- திருவாசகம் எழுதப்பட்ட அட்டை.
- செயற்பாட்டுப்பத்திரம்.

**கற்றற்பேறுகள்:**

- பஞ்சபுராணத்தில் தேவாரத்திற்கு அடுத்ததாகப் பாடப்படுவது திருவாசகம் எனக்கூறுவார்.
- திருவாசகத்தை இயற்றியவர் மாணிக்கவாசகர் என்பதைக் கூறுவார்.
- திருவாசகம் எட்டாம் திருமுறையில் அமைந்துள்ளது எனக்கூறுவார்.
- மோகன இராகத்தில் சுத்தாங்கமாகப்பாடுவார்.
- பக்தி உணர்வைப் பெறுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

படி 3.9.1.1

- பஞ்சபுராணங்கள் பாடும் முறையினைக் கலந்துரையாடித் திருவாசகம் என்னும் பதிகம் தேவாரத்திற்குப் பின் சுத்தாங்கமாகப் பாடப்படும் என்பதைக் கூறிப் பாடிக்காட்டுங்கள்.
- பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
- திருவாசகத்தை அருளியவர் பண் இராகம் திருமுறை என்பவற்றைக் குறிப்பிடுங்கள்.
- திருவாசகத்தைப் பொருள் உணர்ந்து உச்சரிப்புத் தெளிவுடன் பாட வழிப்படுத்துங்கள்.
- மோகன இராகத்தில் உச்சரிப்புத் தெளிவுடன் சொல்வதற்கு வழிப்படுத்துங்கள்.
- திருவாசகம் எழுதிய அட்டையைக்காட்சிப்படுத்தி பகுதிபகுதியாக மாணவருடன் சேர்ந்து பாடுங்கள்.
- மோகன இராகத்தில் சுத்தாங்கமாகப் பாடுங்கள்.

படி 3.9.1.2

- மாணவர்களை குழுக்களாகப்பிரித்து செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்படுவதை அவதானியுங்கள்.

படி 3.9.1.3

- ஒவ்வொரு குழுவையும் தங்களது செயற்பாட்டை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் அவதானித்து விடயங்களைக் கூறச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- சுருதி விலகிப்பாடிய மாணர்களுடன் சேர்ந்து மீண்டும் மீண்டும் பயிற்சி செய்யுங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- திருவாசகத்தை அருளியவர் யார் என்பதைக் கூறுவார்.
- திருவாசகம் பாடப்படும் இராகத்தினைக்கூறுவார்.
- திருவாசகம் எத்தனையாம் திருமுறையில் அடங்கியுள்ளது என்பதைக் கூறுவார்.
  மோகன இராகத்தில் சுத்தாங்கமாகப் பாடுவார்.

## திருவாசகம் (அம்மையே அப்பா)

பண் : முல்லை
இராகம் : மோஹனம்
அருளியவர் : மாணிக்கவாசகர் சுவாமிகள்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

**தேர்ச்சி:** 3.0 இசை உருப்படிகளைச் சுருதி, இராக, தாளத்துடன் பாடுவார்.

**தேர்ச்சி மட்டம்:** 3.10 திருப்புகழை உரிய சந்தத்துடன் ஏற்ற இராக, தாளத்தில் பாடுவார்

**செயற்பாடு :** 3.10.1 ''காலனிடத்தனுகாதே'' என்ற திருப்புகழை உரிய சந்தத்துடன் இராக தாளத்துடன் பாடுவாம்.

**பாடவேளை:** 02

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- சுருதிப்பெட்டி.
- திருப்புகழ் எழுதப்பட்ட அட்டை.
- செயற்பத்திரம்.

**கற்றற்பேறுகள்:**

- ''காலனிடத்தனுகாதே'' எனும் திருப்புகழை சுருதி இராக தாளத்துடன் உரிய சந்தத்தில் பாடுவார்.
- திருப்புகழை அருளிச்செய்தவர் அருணகிரிநாதர் என்பதைக் கூறுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

படி 3.10.1.1

- மாணவர்களிடம் திருப்புகழ் பாடல்கள் பற்றிக் கலந்துரையாடி முன்னறிவை மீட்டுக் கொள்ளுங்கள்.
- திருப்புகழ் சிலவற்றை மீட்டுக்கொள்ளுங்கள்.
- ''காலனிடத்தனுகாதே'' எனும் திருப்புகழ் எழுதிய அட்டையைக் காட்சிப்படுத்தி பாடலைப் பாடிக்காட்டி மாணவரை செவிமடுக்கச்செய்யுங்கள்.
- திருப்புகழைப் பகுதி பகுதியாகக் கற்பியுங்கள்.
- தாளத்துடன் திருப்புகழைக் கற்பியுங்கள்.
- மாணவர்களுடன் சேர்ந்து பல தடவைகள் பாடிப்பயிற்சி வழங்குங்கள்.

படி 3.10.1.2

- மாணவர்களைக் குழுக்களாக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செய்வதை அவதானியுங்கள்.

படி 3.10.1.3

- ஒவ்வொரு குழுவும் தமது செயற்பாட்டைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் அவதானித்த விடயங்களையும் கூறச்சந்தர்ப்பம் அளியுங்கள்.
- சுருதி தாளம் விலகிப் பாடிய மாணவர்களுக்கு மேலதிக பயிற்சி வழங்குங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- "காலனிடத்தனுகாதே" எனும் திருப்புகழின் இராக ஆரோகண அவரோகணம் தாளம் அருளியவர், சந்தம் என்பவற்றைக் குறிப்பிடுவார்.
- இத்திருப்புகழை சுருதி இராகம், தாளச் சந்தத்துடன் பாடுவார்.

## திருப்புகழ் (காலனிடத்தனுகாதே)

இராகம் : மோஹனம்
தாளம் : கண்டசாபு
அருளியவர் : அருணகிரிநாதர்

ஆ: ஸரிகபதஸ்
அ: ஸ்தபகரிஸ
} 28 இன் ஜன்யம்

| | | | |
|---|---|---|---|
| தான தனத் | தானத் தான | தான தன | தன தான |
| காலனிடத் | தனுகாதே | காசினியிற் | பிறவாதே |
| சீல அகத்திய | ஞான | தேனமுதைத் | தருவாயே |
| மாலயனுக் | கரியானே | மாதவரைப் | பிரியானே |
| நாலுமறைப் | பொருளானே | நாககிரிப் | பெருமாளே |

**தேர்ச்சி** 3.0 இசை உருப்படிகளைச் சுருதி, இராக தாளத்துடன் பாடுவார்

**தேர்ச்சி மட்டம்:** 3.11 காவடிச்சிந்தை உரிய இசைமெட்டில் தாளத்துடன் பாடுவார்.

**செயற்பாடு :** 3.11.1 ''சந்தனத்தையே'' எனும் காவடிச்சிந்தை உரிய இசைமெட்டில் இராக தாளத்துடன் பாடுவோம்.

**பாடவேளை:** 03

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- சுருதிப்பெட்டி.
- ஒலிப்பதிவுக்கருவி.
- பாடல் எழுதப்பட்ட அட்டை.
- காவடிச்சிந்து அடங்கிய இறுவெட்டுக்கள்.
- செயற்பத்திரம்.

**கற்றற்பேறுகள்:**

- காவடிச்சிந்து என்னும் இசை உருப்படி நாட்டுப் பாடல் வகையைச் சேர்ந்ததெனக் கூறுவார்.
- இப்பாடல் அமைந்த நடையை அனுசரித்துப் பாடுவார்.
- காவடி ஆடும்போது இப்பாடல் வகை பாடப்படும் என்பதைக் கூறுவார்.
- ''சந்தனத்தையே'' எனும் காவடிச்சிந்தை உரிய நடையில் பாடுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

படி 3.11.1.1
- காவடிச்சிந்து இசைப்பாடல் வகைகள் சிலவற்றை பாடிக்காட்டியோ அல்லது ஒலிப்பதிவுக் கருவிகளில் போட்டுக் காட்டியோ செவிமடுக்கச்செய்யுங்கள்.
- காவடிச்சிந்துக்களை பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- "சந்தனத்தையே'' பாடலை மாணவர்களுக்கு பாடிக்காட்டுங்கள்.
- பகுதி பகுதியாக மாணவர்களுக்குப் பாடிப்பழக்குங்கள்.
- ஆசிரியரும் சேர்ந்து பல தடவைகள் பாடிப்பயிற்சி செய்யுங்கள்.

படி 3.11.1.2
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்படுவதை அவதானியுங்கள்.

படி 3.11.1.3
- ஒவ்வொரு குழுவையும் பாடச்சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- சுருதி, இராகம் தாள நடை விலகிப்பாடிய மாணவர்களுக்கு மேலதிகப் பயிற்சிகளை வழங்குங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- ''சந்தனத்தையே'' எனும் காவடிச்சிந்து இசைப் பாடலைச் சுருதி இராக தாளத்துடன் பாடுவார்.
- இப்பாடலைப் பாடியவர் நடை என்பவற்றைக் கூறுவார்.

## காவடிச் சிந்து (சந்தனத்தையே அரைத்து)

தாளம் : ரூபகம்

ஸ்வரஸ்தானங்கள் - சதுஸ்ருதி ரிஷபம், சாதாரண காந்தாரம், சுத்த மத்தியமம், சதுஸ்ருதி தைவதம், கைசிகி நிஷாதம்

| | | | |
|---|---|---|---|
| பஸ்ஸ்ஸ் | ஸ்ஸ்ஸ்ரி | பஸ்நித | பபபம |
| சந்தனத்தையே | அரைத்து | குங்குமத்தை | யேகுழைத்து |
| பதநித | பமகரி | ஸாகரி | ; ஸஸ |
| சண்முகத்தின் | மாமுகத்தில் | சாற்றினேன் | அந்த |
| ரிமகம | ரிமகம | கமபம | கரிஸநி |
| சுந்தரத் | திருவுருவை | எந்தன்மனத் | தன்னில்வைத்து |
| ஸபபம | கரிஸரி | ஸஸஸா | ; ரீ |
| சொந்தமாக | அனுதினம் | போற்றினேன் | நான் |
| ஸஸஸா | ; ஸா | ஸஸஸா | ; ; |
| போற்றினேன் | நான் | போற்றினேன் | ……….. |
| பஸ்ஸா | பஸ்ஸா | பஸ்நித | பபபா |
| கந்தையா | முருகையா | வேலையா | சுப்பையா |
| பததநி | பததநி | பததநி | பபபா |
| கந்தையா | முருகையா | வேலையா | சுப்பையா |
| பதபம | மககரி | ஸரிரிக | ரிஸஸா |
| கந்தையா | முருகையா | வேலையா | சுப்பையா |

கந்தரலங்காரமதை சொந்த அனுபூதியிலே
மந்திரமாய் எண்ணியதைப் பாடினேன் - எந்தன்
சிந்தைதனிலேயடக்கி எந்த நேரமும் துதித்து
கந்தனை அநுதினமும் பூஜித்தேன் - நான்
பூஜித்தேன் நான் பூஜ்த்தேன்

பன்னிரண்டு கண்களையும் என்னிரண்டு கண்களினால்
பார்த்து முகம் சேர்த்து நின்று பாவித்தேன் - அந்த
சூரனை வதைத்த அந்த சுப்ரமணிய வேலவனை
நேரிலே நினைத்து புகழ் பாடினேன் நான்
பாடினேன் - நான் பாடினேன்

**தேர்ச்சி:** 4.0 இசை பற்றிய அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்

**தேர்ச்சி மட்டம்:** 4.1 சப்த தாளங்களையும் அங்க அடையாளங்களையும் விளக்குவார்

**செயற்பாடு :** 4.1.1 கர்நாடக இசையின் அடிப்படை அம்சங்களில், ‘‘சப்த தாளங்களையும் அங்க அடையாளங்களையும்’’ பற்றி விளக்குவோம்.

**பாடவேளை:** 02

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- சப்த தாள விளக்க அட்டவணை.
- செயற்பத்திரம்.

**கற்றற்பேறுகள்: 4.1.1.1**

- சப்த தாளங்களையும் அங்க அடையாளங்களும் எழுதப்பட்ட அட்டவணையைக் காட்சிப்படுத்தி மாணவர்களுடன் கலந்துரையாடுதல்.
- கர்நாடக சங்கீதத்தில் காணப்படும் ஏழு தாளங்களும் “சப்த தாளங்கள்” என அழைக்கப்படுகிறது என்பதைத் தெளிவுபடுத்தல்.
- சப்த தாளங்கள் ஏழு எனக்கூறுதல்.
- திரியாங்கங்களையும் எடுத்துக்கொள்ளும் தாளம் ஜம்பை தாளம் எனக்கூறுதல்.
- ஒரேயொரு அங்கத்தை உடைய தாளம் ஏகதாளம் எனத் தெளிவுபடுத்துதல்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

படி 4.1.1.2
- மாணவர்களின் தொகைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாக்கி செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- மாணவர்கள் செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்களா என்பதை உறுதி செய்யுங்கள்.
- மாணவர்களைத் தனித்தனியே அவதானியுங்கள்.

படி 4.1.1.3
- மாணவர்கள் செய்து முடித்த செயற்பாடுகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனையோர் அதனை அவதானித்துத் தத்தமது கருத்துக்களைக் கூறுவதற்கு இடமளியுங்கள்.
- மாணவர்களின் கருத்துக்களை தொகுக்கும் வண்ணம் கலந்துரையாடுங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- சப்த தாளங்களையும் அங்க அடையாளங்களையும் குறிப்பிடுவார்.
- த்ரியாங்கங்களையும் எடுத்துக்கொள்ளும் தாளத்தைக் கூறுவார்.
- அடதாளத்தின் முதலாவது லகுவை நீக்கினால் வரும் தாளத்தைக் கூறுவார்.

**செயற்பத்திரம்:**

- சப்த தாளங்களையும் அங்க அடையாளங்களையும் அட்டவணைப்படுத்துக.

## சப்த தாளங்களும் அங்க அடையாளங்களும்

சப்த தாளங்கள் ஏழு வகைப்படும். அவை முறையே துருவம், மட்டியம், ருபகம், ஜம்பை, திரிபுடை, அட, ஏகம் என்பனவாகும். அவற்றின் விபரம் பின்வருமாறு

| இல | தாளத்தின் பெயர் | அங்க அடையாளம் |
|---|---|---|
| 1 | துருவம் | \|O \| \| |
| 2 | மட்டியம் | \| O \| |
| 3 | ரூபகம் | O\| |
| 4 | ஜம்பை | \| UO |
| 5 | திரிபுடை | \| OO |
| 6 | அட | \| \|OO |
| 7 | ஏகம் | \| |

**தேர்ச்சி :** 4.0 இசை பற்றிய அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்:** 4.2 உருப்படிகளின் இலட்சணங்களை விளக்குவார்.

**செயற்பாடு :** 4.2.1 ஜதிஸ்வரம் என்ற உருப்படியின் இலட்சணத்தை அறிந்து கொள்வோம்.

**பாடவேளை:** 02

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- ஜதிஸ்வரம் பாடப்பட்ட ஒலிப்பதிவு நாடா.
- பாடல் அட்டை, ஒலிப்பதிவுக் கருவி.
- சுருதிப் பெட்டி.
- செயற்பத்திரம்.

**கற்றற்பேறுகள்:**

- ஜதிஸ்வரம் என்ற பெயர் வந்த காரணத்தை அறிவார்.
- ஜதிஸ்வரத்தின் இலட்சணத்தை அறிவார்.
- ஜதிஸ்வரத்தை இயற்றியவர் பெயர் கூறுவார்.
- ஜதிஸ்வரத்திற்கு உதாரணங்கள் கூறுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

படி 4.2.1.1
- ஜதிஸ்வரம் ஒன்றை ஒலிப்பதிவு கருவியில் இசைக்கச் செய்து அல்லது பாடிக்காட்டி அவதானிக்கச் செய்யுங்கள்.
- ஜதிஸ்வரம் எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி அமைப்பினை விளக்குங்கள்.
- ஜதிஸ்வரம் என்ற பெயர் வந்த காரணத்தைக் கூறுங்கள்.
- நாட்டியக்கச்சேரியில் ஜதிஸ்வரத்தின் பங்கைக் கூறுங்கள்.
- ஜதிஸ்வரத்தை இயற்றியவர்கள் விபரம் கூறுங்கள்.
- ஜதிஸ்வரத்திற்கு உதாரணங்கள் கூறுங்கள்.

படி 4.2.1.2
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்கி செயற்பாட்டில் ஈடுபடுகின்றார்களா என்பதை உறுதிப்படுத்துங்கள்.
- செயற்பாடுகளை அவதானியுங்கள்.

படி 4.2.1.3
- செயற்பாட்டின் பேறுகளைச் சமர்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- கருத்துக்கூற இடமளியுங்கள்.
- ஜதிஸ்வரத்தின் இலட்சணத்தை மீளவலியுறுத்துங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- ஜதிஸ்வரத்தின் அமைப்பை விளக்குவார்.
- ஜதிஸ்வரம் எனும் பெயர் ஏற்படக் காரணத்தைக் கூறுவார்.
- பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்க வித்தியாசங்களை உடைய உருப்படி என்பதைக் கூறுவார்.
- ஜதிஸ்வரம் இயற்றியவர்கள் பெயர்களைக் குறிப்பிடுவார்.
- ஜதிஸ்வரத்திற்கு உதாரணம் கூறுவார்.

**செயற்பத்திரம்:**

- ஜதிஸ்வரத்தின் இலட்சணத்தை எழுதுக.
- ஜதிஸ்வரத்தை இயற்றிய வாக்கேயகாரர்கள் இருவர் பெயர்களைத் தருக.
- ஜதிஸ்வரத்திற்கு உதாரணம் இரண்டு தருக.

## ஜதிஸ்வரம்

ஜதிக்கோர்வைகளைக் கொண்ட மெட்டுக்களால் அமைக்கப்பட்டமையால் இவ்வுருப்படி ஜதிஸ்வரம் எனப்படுகிறது. ஜதிஸ்வரம் தாதுவின் அமைப்பில் ஸ்வரஜதியை ஒத்திருக்கும். இதற்குச் சாஹித்தியம் கிடையாது. ஸ்வர ரூபமாகப் பாடப்படுவதால் ஸ்வரபல்லவி என்றும் அழைக்கப்படும்.

ஜதிஸ்வரத்திற்குப் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்க வித்தியாசங்களுண்டு. சில ஜதிஸ்வரங்கள் அனுபல்லவி இல்லாமலும் இருக்கும்.

ஜதிஸ்வரங்களில் 03 - 05 வரை சரணங்கள் இருக்கும். சரணங்கள் ஒவ்வொன்றும் வித்தியாசமான தாதுக்களில் அமைந்திருக்கும்.

சில ஜதிஸ்வரங்கள் இராகமாலிகையாகவும் அமைந்துள்ளன.

ஜதிஸ்வரங்கள் சில சௌககாலத்திலும் சில மத்திமகாலத்திலும் அமைந்துள்ளன. ஜதிஸ்வரங்களைக் கற்பதனால் மாணர்களின் ஸ்வர லய ஞானம் விருத்தியடைகின்றது. அழகியஸ்வரக் கோர்வைக ளினால் மனோதர்ம திறமை விருத்தியடைகின்றது. பாடுபவர்களோடு இசைக்கருவிகளைக் கற்கும் அனைவரும் இப்பயனைப் பெறுவர்.

ஜதிஸ்வரத்தை இயற்றிய வாக்கேயக்காரர்கள்

- சுவாதித்திருநாள் மகாராஜா
- தஞ்சை கே. பொன்னையாப்பிள்ளை

ஜதிஸ்வரங்களுக்கு உதாரணம்

| | | |
|---|---|---|
| ஸ்ா , ரிகாபா | - | பிலஹரி |
| ஸ்ா , நீதாபா | - | கல்யாணி |
| ஸ்ா ; ரீஸ்தா | - | ஸாவேரி |
| ஸ்ா ; ஸ்நிதபாம | - | சரஸ்வதி |

**தேர்ச்சி:** 4.0 இசை பற்றிய அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்:** 4.2 உருப்படிகளின் இலட்சணங்களை விளக்குவார்.

**செயற்பாடு :** 4.2.2 ஸ்வரஜதி என்ற உருப்படியின் இலட்சணத்தை அறிந்துக் கொள்வோம்.

**பாடவேளை:** 02

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- ஸ்வரஜதி பாடப்பட்ட ஒலிப்பதிவு நாடா.
- ஸ்வரஜதி பற்றிய விளக்க அட்டை.
- ஒலிப்பதிவுக்கருவி.
- சுருதிப்பெட்டி.
- செயற்பத்திரம்.

**கற்றற்பேறுகள்:**

- ஸ்வரஜதி என்ற உருப்படியின் இலட்சணத்தை அறிவார்.
- ஸ்வரஜதிகளை இயற்றியோர் பெயர்களைக் குறிப்பிடுவார்.
- ஸ்வரஜதிக்கு உதாரணங்களைக் கூறுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

படி 4.2.2.1

- ஸ்வரஜதி ஒன்றை ஒலிப்பதிவுக் கருவியில் இசைக்கச் செய்தல் அல்லது பாடிக்காட்டி அவதானிக்கச் செய்யுங்கள்.
- ஸ்வரஜதி எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப்படுத்தி அமைப்பினை விளக்குங்கள்.
- பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்க வித்தியாசங்களை உடைய உருப்படி என்பதைக் கூறுங்கள்.
- ஒன்றுக்கு மேற்பட்ட சரணங்களைக் கொண்ட உருப்படிகளில் இதுவும் ஒன்று எனக் கூறுங்கள்.
- சரணங்கள் வித்தியாசமான தாதுக்களில் அமைந்திருக்கும் எனக் கூறுங்கள்.
- அப்பியாசகானத்தைச் சேர்ந்த உருப்படியாயினும் சியாமாசாஸ்திரிகளின் ஸ்வரஜதிகள் சபாகானத்திற்கும் ஏற்றவை எனக் குறிப்பிடுங்கள்.
- ஸ்வரஜதியை ஆக்கிய சில வாக்கேயகாரர்கள் பெயர்களைக் கூறுங்கள்.
- ஸ்வரஜதிக்கு உதாரணம் கூறுங்கள்.

படி 4.2.2.2

- சகல மாணவர்களுக்கும் செயற்பத்திரங்களை வழங்குங்கள்.
- மாணவர்கள் செயற்பாட்டில் ஈடுபடுதலை உறுதிப்படுத்துங்கள்.

படி 4.2.2.3

- மாணவர் தம் கருத்துக்களைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- கருத்து கூற இடமளியுங்கள்.
- மாணவரின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம், மீளவலியுறுத்திக் கலந்துரையாடுங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்**

- ஸ்வரஜதியின் அமைப்பை விளக்குவார்.
- பல்லவி அனுபல்லவி சரணம் என்ற அங்கவித்தியாம் உள்ள உருப்படி எனக் கூறுவார்.
- ஸ்வரஜதியை இயற்றியோர் விபரம் கூறுவார்.
- ஸ்வரஜதிக்கு உதாரணம் கூறுவார்.

**செயற்பத்திரம்:**

- ஸ்வரஜதியின் இலட்சணத்தை விளக்கி எழுதுக.
- ஸ்வரஜதியை இயற்றிய வாக்கேயகாரர் இருவர் பெயர்களைத் தருக.
- ஸ்வரஜதிக்கு இரண்டு உதாரணங்கள் தருக.

## ஸ்வரஜதி

அப்பியாசகானத்தைச் சேர்ந்த உருப்படிகளில் இதுவும் ஒன்றாகும். இதற்கு பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அங்க வித்தியாசங்கள் உண்டு. பல சரணங்களை உடைய உருப்படிகளில் இதுவும் ஒன்று. சரணங்கள் வித்தியாசமான தாதுக்களில் அமைந்திருக்கும். அனுபல்லவி இல்லாத ஸ்வரஜதிகளும் உண்டு. சாகித்தியம் பகவத் ஸ்தோத்திரமாகவோ, சிருங்கார விஷயமாகவாவது, வீரர்களைப் பற்றியாவது, சங்கீத வித்துவான்களை ஆதரித்த பிரபுக்களைப் பற்றியதாகவோ இருக்கும். ஸ்வரஜதியில் சாகித்தியம் மட்டும் பாடப்படும். ஸ்வரஜதிகள் பொதுவாக அப்பியாச கானத்தைச் சேர்ந்த உருப்படிகளான போதிலும் சியாமாசாஸ்திரிகளின் தோடி, பைரவி, யதுகுல காம்போதி இராகங்களில் அமைந்துள்ள ஸ்வரஜதிகள் சபாகானத்திற்கும் உகந்தவை. நாட்டியத்திற்காக ஏற்பட்ட ஸ்வரஜதிகளில் ஆங்காங்கு ஜதிகள் காணப்படும். இதற்கு உதாரணம் “ ஏமாய லாடிரா” என்னும் ஹுஷேனி இராக ஸ்வரஜதி.

### ஸ்வரஜதிக்கு உதாரணங்கள்

- ராவேமேமகுவ - ஆனந்தபைரவி
- சாம்பசிவாயனவே - கமாஸ்
- பன்னக சயனனெ - காம்போதி
- காமாட்ஷி - பைரவி
- ராவேஹிமகிரி - தோடி

### ஸ்வரஜதிகளை இயற்றிய சில வாக்கேயகாரர்கள்

- சியாமாசாஸ்திரிகள்
- சோபனாத்ரி
- ஸ்வாதித்திருநாள்
- சின்னி கிருஷ்ணதாஸர்
- பொன்னையாப்பிள்ளை
- மெரட்டூர் வெங்கடராம சாஸ்திரிகள்
- வாலாஜாபேட்டை கிருஷ்ணஸ்வாமிபிள்ளை

**தேர்ச்சி:** 4.0 இசை பற்றிய அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்:** 4.2 உருப்படிகளின் இலட்சணங்களை விளக்குவார்.

**தேர்ச்சி:** 4.0 இசை பற்றிய அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்:** 4.2 உருப்படிகளின் இலட்சணங்களை விளக்குவார்.

**செயற்பாடு :** 4.2.3 "கீர்த்தனை" என்ற உருப்படியின் இலட்சணத்தை அறிந்து கொள்வோம்.

**பாடவேளை:** 02

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- கீர்த்தனை பாடப்பட்ட ஒலிப்பதிவு நாடா, பாடல் அட்டை, ஒலிப்பதிவுக்கருவி, சுருதிப்பெட்டி, செயற்பத்திரம்.

**கற்றற்பேறுகள்:**
- கீர்த்தனையின் இலட்சணத்தை அறிவார்.
- கீர்த்தனைகளை இயற்றிய வாக்கேயகாரர்கள் பற்றி அறிவார்.
- கீர்த்தனைகளுக்கு உதாரணம் கூறுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

படி 4.2.3.1
- கீர்த்தனை ஒன்றை ஒலிப்பதிவுக்கருவியில் இசைக்கச் செய்து அல்லது பாடிக்காட்டி அவதானிக்கச் செய்யுங்கள்.
- கீர்த்தனை எழுதப்பட்ட அட்டையைக் காட்சிப் படுத்தி அமைப்பை விளக்குங்கள்.
- அங்க வித்தியாசங்கள் பற்றிக் கூறுங்கள்.
- கீர்த்தனைகளுக்கு உதாரணம் கூறுங்கள்.
- கீர்த்தனைகளை இயற்றிய வாக்கேயகாரர்கள் பற்றிக் கூறுங்கள்.
- சபாகானத்தைச் சேர்ந்த உருப்படிவகை எனக் குறிப்பிடுங்கள்.

படி 4.2.3.2
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரங்களை வழங்குங்கள்.
- செயற்பாட்டில் ஈடுபடுவதை அவதானியுங்கள்.
- கீர்த்தனையின் இலட்சணத்தை மீள வலியுறுத்துங்கள்.

படி 4.2.3.3
- ஒவ்வொரு குழுவும் பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களும் அவதானித்துக் கருத்துக்கூற இடமளியுங்கள்.
- மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளுங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- கீர்த்தனையின் இலட்சணத்தை விளக்குவார்
- பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அங்க வித்தியாசங்களை உடைய உருப்படி என்பதைக் கூறுவார்.
- கீர்த்தனையை இயற்றிய வாக்கேயகாரர்கள் பெயர்களைக் கூறுவார்.
- கீர்த்தனைக்கு உதாரணங்களைக் கூறுவார்.

**செயற்பத்திரம்:**

- கீர்த்தனையின் அமைப்பைத் தருக.
- கீர்த்தனைகளை இயற்றிய வாக்கேயகாரர்கள் இருவர் பெயரைத் தருக.
- கீர்த்தனைகளுக்கு உதாரணம் தருக.

## கீர்த்தனை

கீர்த்தனை இறை இசைப் பகுதியைச் (வைதீக கானத்தைச்) சார்ந்தது. சாகித்தியம் இறைவன் அல்லது இறைவியைப் புகழ்வதாகவோ அல்லது அவர்களிடம் மன்னிப்பு வேண்டுவதாகவோ பக்தி நிரம்பியதாகவோ இருக்கும். புராண நிகழ்ச்சிகளைப் பற்றியும் பக்தர்களின் உணர்ச்சிகளைத் தெரிவிப்பதாகவும் இருக்கலாம். எனவே கீர்த்தனைகளில் ஸ்வரப்பகுதியை (தாதுவை) விட சொற் பகுதியே (மாதுவே) முக்கியமானது என்று கருதப்படுகின்றது.

கீர்த்தனைக்குப் பிறகுதான் கிருதி என்ற இசைவடிவம் தோன்றியது. கீர்த்தனைக்கு பல்லவி, அனு பல்லவி, சரணம் என்ற அங்க வித்தியாசங்கள் உண்டு. சில கீர்த்தனைகள் அனுபல்லவி இல்லாமலும் இயற்றப்பட்டுள்ளன. பல சரணங்களைக் கொண்ட கீர்த்தனைகளும் உண்டு. இந்த சரணங்கள் எல்லாம் ஒரே வகையான ஸ்வரப்பகுதியைக் கொண்டிருக்கும். சில சமயங்களில் பல்லவிக்கு உரிய ஸ்வரப்பகுதியே சரணத்திற்கும் பயன்படுத்தப்படுகின்றது. சாதாரண இசையறிவு உள்ளவர்களும் கீர்த்தனைகளைப் பாட முடியும். ஏனெனில் அவை எளிமையான, பிரபல்யமான இராகங்களில் அமைக்கப்பட்டவையாகவும் பலர் சேர்ந்து பாடுவதற்கு ஏற்றதாகவும் இருக்கும்.

### கீர்த்தனைகளை இயற்றிய வாக்கேயகாரர்கள்

- முத்துத்தாண்டவர்
- கோபால கிருஷ்ணபாரதியார்
- பாபநாசம் சிவன்
- பெரியசாமி தூரன்
- அருணாச்சலக்கவிராயர்
- புரந்தரதாஸர்

### கீர்த்தனைகளிற்கு உதாரணங்கள் சில

கற்பகமே - மத்தியமாவதி
சபாபதிக்கு - ஆபோகி
மயில்வாகனா - மோகனம்
உள்ளமிரங்கி - பந்துவராளி

**தேர்ச்சி:** 4.0 இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்:** 4.3 கர்நாடக இசையிலுள்ள இராகங்களின் இலட்சணங்களை விளக்குவார்.

**செயற்பாடு :** 4.3.2 மாயாமாளவகௌளை இராகத்தின் இலட்சணத்தை விளக்குவோம்.

**பாடவேளை:** 02

**தரவிருத்தி உள்ளீடு:**
- சுருதிப்பெட்டி அல்லது ஹார்மோனியம்.
- மாயாமாளவகௌளை இராக ஆரோஹண, அவரோஹண வரைபடம்.
- மாயாமாளவகௌளை இராகத்தின் ஸ்வரஸ்தான வரைபடம்.
- மாயாமாளவகௌளை இராக இலட்சண விளக்க அட்டை.
- மேல் தலை எறியி OHP.
- செயற்பத்திரம்.

**கற்றற்பேறுகள்:**
- மாயாமாளவகௌளை இராகம் ஜனக இராகம் எனவும் அதன் மேள எண்ணையும் குறிப்பிடுவார்.
- மாயாமாளவகௌளை இராகத்தின் மேள எண், ஆரோஹண அவரோஹணம், ஸ்வரஸ்தானங்கள் என்பவற்றைக் குறிப்பிடுவார்.
- இந்த இராகத்தின் ஜீவஸ்வர, நியாசஸ்வர, கிரகஸ்வரங்களைக் குறிப்பிடுவார்.
- இவ் இராகத்தின் விஷேட அம்சங்களை விளக்குவார்.
- மாயாமாளவகௌளை இராகத்தின் பண்ணைக் குறிப்பிடுவார்.
- ஹிந்துஸ்தானி இசையில் இவ்விராகத்திற்கு ஒப்பான இராகத்தினைக் குறிப்பிடுவார்.
- மாயாமாளவகௌளை இராகத்திற்குரிய சஞ்சாரங்களை எழுதுவார்.
- இந்த இராகத்தில் அமைந்துள்ள உருப்படிகளை இனங்கண்டு கூறுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

4.3.1.1

- மாயாமாளவகௌளை இராகத்தில் மாணவர்கள் ஏற்கனவே கற்றுக்கொண்ட அப்பியாச வரிசைகள், உருப்படி வகைகளைப் பாடிக்காட்டி இராகங்களை இனங்கானச் செய்யுங்கள்.
- மாயாமாளவகௌளை இராகத்தின் ஆரோஹண, அவரோஹண வரைபடத்தைக் காட்சிப்படுத்தி அல்லது மேல் தலை எறியியைப் பயன்படுத்தி அவதானிக்கச் செய்யுங்கள்.
- மாயாமாளவகௌளை இராகத்தின் ஆரோஹண அவரோஹணத்தைப் பாடியோ அல்லது வாத்தியத்தில் வாசித்தோ, செவிமடுக்கச் செய்யுங்கள்.
- கீழ்வரும் விடயங்களை உள்ளடக்கி, மாயாமாளவகௌளை இராகம், தொடர்பான கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளுங்கள்.
  - ஜனக இராகம்
  - மாயாமாளவகௌளை இராகத்தின் மேள எண்
  - ஆரோஹண அவரோஹணம்
  - ஸ்வரஸ்தானங்கள்
  - விசேட அம்சங்கள்
  - ஜீவஸ்வரம், நியாசஸ்வரம்

படி 4.3.1.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரங்களை வழங்குங்கள்.
- மாணவர் செயற்பட அறிவுறுத்தல்களை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்படும் விதத்தை அவதானித்து செயற்பாட்டை உறுதி செய்யுங்கள்.

படி 4.3.1.3

- மாணவர் பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவரின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம், கலந்துரையாடி மீள வலியுறுத்துங்கள்.
- மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளுங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- மாயாமாளவகௌளை இராகம் ஜனக இராகம் எனவும் அதன் மேள எண் 15 எனவும் குறிப்பிடுவார்.
- மாயாமாளவகௌளை இராகத்தின் ஆரோஹண அவரோஹணம், ஸ்வரஸ்தானங்கள் என்பவற்றைக் குறிப்பிடுவார்.
- அப்பியாசவரிசைகள் மாயாமாளவகௌளை இராகத்தில் பாடுவதை விளக்குவார்.
- பண் - இந்தளம் என்பது இந்த இராகமே எனக் குறிப்பிடுவார்.
- ஹிந்துஸ்தானி இசையில் பைரவ தாட் என்பது இவ்விராகமே எனக் கூறுவார்.
- மாயாமாளவகௌளை இராகத்தின் விஷேட அம்சங்களைக் விளக்குவார்.
- மாயாமாளவகௌளை இராகத்திற்குரிய சஞ்சாரங்களை எழுதுவார்.
- இந்த இராகத்தில் அமைந்துள்ள உருப்படிகளை இனங்கண்டு கூறுவார்.

**செயற்பத்திரம்:**

- மாயாமாளவகௌளை இராகத்தின் இலட்சணத்தை விளக்கி எழுதுக.

## இராக இலட்சணம்

### மாயாமாளவகௌளை

15 வது மேளகர்த்தா இராகம். அக்னி என்றழைக்கப்படும் மூன்றாவது சக்கரத்தின் மூன்றாவது மேள இராகம். அக்னி - கோ என்பது இந்த இராகமேயாகும். இந்த இராகத்தின் பழைய பெயர் மாளவகௌளை ஆகும். கடபயாதி சங்க்யைக்காக மாயாமாளவகௌளை என்று அழைக்கப்படுகின்றது.

ஆரோகணம் - ஸ ரி க ம ப த நி ஸ்
அவரோகணம் - ஸ் நி த ப ம க ரி ஸ

இந்த இராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்கள் : ஸட்ஜம், சுத்த ரிஷபம், அந்தர காந்தாரம், சுத்த மத்திமம், பஞ்சமம், சுத்ததைவதம், காகலி நிஷாதம்.

ஸம்பூர்ண இராகம். ஸர்வஸ்வர கமக வரிக ரக்தி இராகம். க, நி ஜீவஸ்வரங்கள். க, ப நியாச ஸ்வரங்கள். ஸ, க, த, நி ஸ்வரங்களில் உருப்படிகள் ஆரம்பிக்கின்றன. புராதன இராகம் பல ஜன்ய இராகங்களையுடைய மேள இராகம். பூர்வாங்கமும் உத்தராங்கமும் ஒரே சீராய் அமைந்துள்ள இராகம். தோஷமற்ற இராகம்.

கருணா ரஸமும், பக்தி ரஸமும் பொருந்திய இராகம். எப்பொழுதும் பாடலாம். திரிஸ்தாயி இராகம். ஹிந்துஸ்தானி இசையில் இதனைப் "பைரவதாட்" என்று அழைப்பர். பண் - இந்தளம் என்பது இந்த இராகமே.

இரட்டைப் பெயர்களையுடைய ஸ்வரஸ்தானங்கள் இந்த இராகத்தில் வராததினால் , ஜண்டைஸ்வர பிரயோகங்களும், துரிதகால, சௌக்ககால சஞ்சாரங்களும், பலவித தாட்டுப்பிரயோகங்களும் இந்த இராகத்திற்குப் பொருத்தமாக வரக்கூடியதனாலும், பூர்வாங்கமும், உத்தராங்கமும் ஒரே சீராக இருப்பதனாலும் இந்த இராகத்திலேயே மாணவர்கள் முதன் முதலில் ஸ்வர வரிசைகளைப் பயில வேண்டும் என்ற சம்பிரதாயம் ஏற்பட்டது.

இதன் நேர் பிரதி மத்திம இராகம் காமவர்த்தனி (பந்துவராளி) ஆகும். மூர்ச்சனாகாரக மேள இராகம். இதன் ரி, ம ஸ்வரங்களை ஸட்ஜமாக வைத்துப்பாடினால் ரஸிகப்பிரயா (72) சிம்மேந்திர மத்திமம் (57) ஆகிய மேளங்கள் ஒலிக்கும்.

## சஞ்சாரம்

ஸரிகமபதநிஸ் - கமபதநிஸ்ரிஸ்ா - ஸ்நிதபதநிஸ்ா - ஸ்நிதநிஸ்ரிக்ரிகா - ம்க்ரிஸ்ா
ஸ்நிதபமகரீ - கமபதநிஸ்ரி - ஸ்நிதபாமகா - கமபதம - கமகரிஸா - ஸநிதநிஸரிஸா

## உருப்படிகள்

| | | | |
|---|---|---|---|
| 1. சஞ்சாரி கீதம் | - கணநாதா | - சதுஸ்ர ரூபகம் | - பொன்னையாப்பிள்ளை |
| 2. கிருதி | - துளசிதள | - ரூபகம் | - தியாகராஜர் |
| 3. கிருதி | - ஆடிக்கொண்டார் | - ஆதி | - முத்துத்தாண்டவர் |
| 4. கிருதி | - தேவ தேவ | - ரூபகம் | - சுவாதித்திருநாள் |

**தேர்ச்சி:** 4.0 இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்:** 4.3 கர்நாடக இசையிலுள்ள இராகங்களின் இலட்சணங்களை விளக்குவார்.

**செயற்பாடு :** 4.3.2 சங்கராபரண இராகத்தின் இலட்சணத்தை விளக்குவோம்.

**பாடவேளை:** 02

**தரவிருத்தி உள்ளீடு:**
- சுருதிப்பெட்டி அல்லது ஹார்மோனியம்.
- சங்கராபரண இராக ஆரோஹண, அவரோஹண வரைபடம்.
- சங்கராபரண இராகத்தின் ஸ்வரஸ்தான வரைபடம்.
- சங்கராபரண இராக இலட்சண விளக்க அட்டை.
- மேல் தலை எறியி OHP.
- செயற்பத்திரம்.

**கற்றற்பேறுகள்:**
- சங்கராபரண இராகம் ஜனக இராகம் எனவும் அதன் மேள எண்ணையும் குறிப்பிடுவார்.
- சங்கராபரண இராகத்தின் மேள எண், ஆரோஹண அவரோஹணம், ஸ்வரஸ்தானங்கள் என்பவற்றைக் குறிப்பிடுவார்.
- இந்த இராகத்தின் ஜீவஸ்வர, நியாசஸ்வர, கிரகஸ்வரங்களைக் குறிப்பிடுவார்.
- இவ் இராகத்தின் விஷேட அம்சங்களை விளக்குவார்.
- சங்கராபரண இராகத்தின் பண்ணைக் குறிப்பிடுவார்.
- ஹிந்துஸ்தானி இசையிலும் ஐரோப்பிய இசையிலும் இவ்விராகத்திற்கு ஒப்பான இராகப் பெயர்களைக் குறிப்பிடுவார்.
- சங்கராபரண இராகத்திற்குரிய சஞ்சாரங்களை எழுதுவார்.
- இந்த இராகத்தில் அமைந்துள்ள உருப்படிகளை இனங்கண்டு கூறுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

4.3.2.1

- சங்கராபரண இராகத்தில் மாணவர்கள் ஏற்கனவே கற்றுக்கொண்ட உருப்படி வகைகளைப் பாடிக்காட்டி இராகங்களை இனங்கானச் செய்யுங்கள்.
- சங்கராபரண இராகத்தின் ஆரோஹண, அவரோஹண வரைபடத்தைக் காட்சிப்படுத்தி அல்லது மேல் தலை எறியியைப் பயன்படுத்தி அவதானிக்கச் செய்யுங்கள்.
- சங்கராபரண இராகத்தின் ஆரோஹண அவரோஹணத்தைப் பாடியோ அல்லது வாத்தியத்தில் வாசித்தோ, செவிமடுக்கச் செய்யுங்கள்.
- கீழ்வரும் விடயங்களை உள்ளடக்கி, சங்கராபரண இராகம், தொடர்பான கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளுங்கள்.
    - ஜனக இராகம்.
    - சங்கராபரண இராகத்தின் மேள எண்.
    - ஆரோஹண அவரோஹணம்.
    - ஸ்வரஸ்தானங்கள்.
    - விசேட அம்சங்கள்.
    - ஜீவஸ்வரம், நியாசஸ்வரம்.

படி 4.3.2.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரங்களை வழங்குங்கள்.
- மாணவர் செயற்பட அறிவுறுத்தல்களை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்படும் விதத்தை அவதானித்து செயற்பாட்டை உறுதி செய்யுங்கள்.

படி 4.3.2.3

- மாணவர் பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவரின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம், கலந்துரையாடி மீள வலியுறுத்துங்கள்.
- மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளுங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- சங்கராபரண இராகம் ஜனக இராகம் எனவும் அதன் மேள எண் 29 எனவும் குறிப்பிடுவார்.
- சங்கராபரண இராகத்தின் ஆரோஹண அவரோஹணம், ஸ்வரஸ்தானங்கள் என்பவற்றைக் குறிப்பிடுவார்.
- பண் - பழம் பஞ்சுரம் என்பது இந்த இராகமே எனக் குறிப்பிடுவார்.
- ஹிந்துஸ்தானி இசையில் பிலாவல் எனவும் ஐரோப்பிய இசையில் மேஜர்ஸ்கேல் என்றும் அழைக்கபப்டுவது இவ்விராகமே எனக் கூறுவார்.
- சங்கராபரண இராகத்தின் விஷேட அம்சங்களைக் விளக்குவார்.
- சங்கராபரண இராகத்திற்குரிய சஞ்சாரங்களை எழுதுவார்.
- இந்த இராகத்தில் அமைந்துள்ள உருப்படிகளை இனங்கண்டு கூறுவார்.

**செயற்பத்திரம்:**

- சங்கராபரண இராகத்தின் இலட்சணத்தை விளக்கி எழுதுக.

## இராக இலட்சணம்

### சங்கராபரணம்

29 வது மேளகர்த்தா இராகம். பாண என்றழைக்கப்படும் 5வது சக்கரத்தின் 5வது மேள இராகம். பாண - மா என்பது இந்த இராகமேயாகும். கடபயாதி சங்க்யைக்காக தீரசங்கராபரணம் என்று அழைக்கப்படுகின்றது.

ஆரோகணம் - ஸ ரி க ம ப த நி ஸ்
அவரோகணம் - ஸ் நி த ப ம க ரி ஸ

இந்த இராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்கள் : ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், அந்தர காந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம், காகலி நிஷாதம்.

ஸம்பூர்ண இராகம். எல்லா ஸ்வரங்களும் இராகச்சாய ஸ்வரங்களும் ஜீவ ஸ்வரங்களுமாகும். ரி, ப நியாயஸ்வரங்கள். ஸ, ரி, ம, ப ஸ்வரங்களில் உருப்படிகள் ஆரம்பிக்கின்றன.

ஸஸரிரி ககமமபப போன்ற ஜண்டைஸ்வரப் பிரயோகங்களும், ரிநிஸ்தநிபதமபமகரிஸ போன்ற தாட்டுஸ்வர பிரயோகங்களும் இந்த இராகத்திற்கு இனிமையைக் கொடுக்கும். “ஸ்நிபா” என்பது விஷேசப் பிரயோகமாகும்.

பல ஜன்ய இராகங்களையுடைய மேள இராகம். புராதன இராகம். பூர்வாங்கமும் உத்தராங்கமும் ஒரே சீராய் அமைந்துள்ள இராகம். எப்பொழுதும் பாடலாம். விரிவான ஆலாபனைக்கு இடம் கொடுக்கும் இராகம்.

ஹந்துஸ்தானி இசையில் இதனைப் “பிலாவல்” என்றும் மேலைத்தேய இசையில் “மேஜஸ்கேல்” எனவும் அழைப்பர். பண்டைத்தமிழிசையில் பண் - பழம்பஞ்சுரம் என்பது இந்த இராகமே.

சங்கராபரணம் நரசையர் என்பவர் இந்த இராகத்தைப் பாடுவதில் தேர்ச்சி பெற்றவர். வெண்பா இந்த இராகத்திலேயே பாடப்படுகிறது.

இதன் நேர் பிரதி மத்திம இராகம் மேஷகல்யாணி (கல்யாணி) ஆகும். மூர்ச்சனாகாரக மேள இராகம். இதன் ரி, க, ம, ப, த ஸ்வரங்களை ஸட்ஜமாக வைத்துப்பாடினால் கரஹரப்பிரியா, தோடி, கல்யாணி, ஹரிகாம்போதி, நடபைரவி ஆகிய மேளங்கள் ஒலிக்கும்.

**சஞ்சாரம்**

ஸாபாபமகரி - கமபதாநிஸ்ா - ஸ்ாஸ்நிஸ்ரிரிஸ்நி - ஸ்ரிக்ா - ஸ்ரிக்ம்க்ா - ம்க்ரீஸ்ாநீ
ஸ்க்ரீஸ்ாநீ - ஸ்தாபா - மகரீ - கமபா - ஸரீகமபா- பாதநிஸரீகமபா - மகரிஸா

**உருப்படிகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. சஞ்சாரி கீதம் | - ஏழுமலைமேல் | - திஸ்ர திரிபுடை | - டைகர் வரதாச்சாரியார் |
| 2. தானவர்ணம் | - ஸாமி நின்னே | - ஆதி | - வீணை குப்பையர் |
| 3. கிருதி | - முத்துக்குமரய்யனே | - ரூபகம் | - இராமசாமி தூரன் |
| 4. கிருதி | - மகாலஷ்மி | - மிஸ்ர சாபு | - பாபநாசம் சிவன் |

**தேர்ச்சி:** 4.0 இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்:** 4.3 கர்நாடக இசையிலுள்ள இராகங்களின் இலட்சணங்களை விளக்குவார்.

**செயற்பாடு :** 4.3.3 மோஹன இராகத்தின் இலட்சணத்தை விளக்குவோம்.

**பாடவேளை:** 02

**தரவிருத்தி உள்ளீடு:**
- சுருதிப்பெட்டி அல்லது ஹார்மோனியம்.
- மோஹன இராக ஆரோஹண, அவரோஹண வரைபடம்.
- மோஹன இராகத்தின் ஸ்வரஸ்தான வரைபடம்.
- மோஹன இராக இலட்சண விளக்க அட்டை.
- மேல் தலை எறியி OHP.
- செயற்பத்திரம்.

**கற்றற்பேறுகள்:**
- மோஹன இராகம் ஜன்னிய இராகம் எனவும் அதன் தாய் இராகம், மேள எண் என்பவற்றைக் குறிப்பிடுவார்.
- மோஹன இராகத்தின் ஆரோஹண அவரோஹணம், ஸ்வரஸ்தானங்கள் என்பவற்றைக் குறிப்பிடுவார்.
- இந்த இராகத்தின் ஜீவஸ்வர, நியாசஸ்வர, கிரகஸ்வரங்களைக் குறிப்பிடுவார்.
- இவ் இராகத்தின் விஷேட அம்சங்களை விளக்குவார்.
- மோஹன இராகத்தின் பண்ணைக் குறிப்பிடுவார்.
- ஹிந்துஸ்தானி இசையில் இவ்விராகத்திற்கு ஒப்பான இராகத்தைக் குறிப்பிடுவார்.
- மோஹன இராகத்திற்குரிய சஞ்சாரங்களை எழுதுவார்.
- இந்த இராகத்தில் அமைந்துள்ள உருப்படிகளை இனங்கண்டு கூறுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

4.3.3.1

- மோஹன இராகத்தில் மாணவர்கள் ஏற்கனவே கற்றுக்கொண்ட உருப்படி வகைகளைப் பாடிக்காட்டி இராகங்களை இனங்கானச் செய்யுங்கள்.
- மோஹன இராகத்தின் ஆரோஹண, அவரோஹண வரைபடத்தைக் காட்சிப்படுத்தி அல்லது மேல் தலை எறியியைப் பயன்படுத்தி அவதானிக்கச் செய்யுங்கள்.
- மோஹன இராகத்தின் ஆரோஹண அவரோஹணத்தைப் பாடியோ அல்லது வாத்தியத்தில் வாசித்தோ, செவிமடுக்கச் செய்யுங்கள்.
- கீழ்வரும் விடயங்களை உள்ளடக்கி, மோஹன இராகம், தொடர்பான கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளுங்கள்.
  - ஜனக இராகம்.
  - மோஹன இராகத்தின் மேள எண்.
  - ஆரோஹண அவரோஹணம்.
  - ஸ்வரஸ்தானங்கள்.
  - விசேட அம்சங்கள்.
  - ஜீவஸ்வரம், நியாசஸ்வரம்.
  - பண்.

- சஞ்சாரம்.
- உருப்படிகள்.

படி 4.3.3.2

- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரங்களை வழங்குங்கள்.
- மாணவர் செயற்பட அறிவுறுத்தல்களை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்படும் விதத்தை அவதானித்துச் செயற்பாட்டை உறுதி செய்யுங்கள்.

படி 4.3.3.3

- மாணவர் பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்..
- மாணவரின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம், கலந்துரையாடி மீள வலியுறுத்துங்கள்.
- மீளவலியுறுத்தும் வகையில் கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளுங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- மோஹன இராகம் ஜன்ய இராகங்களின் ஒன்று என்பதையும் அதன் தாய் இராகம் 28 ஆவது மேளமாகிய ஹரிகாம்போஜி என்பதையும் கூறுவார்.
- மோஹன இராகத்தின் விசேட அம்சங்களை விளக்குவார்.
- இதன் ஆரோஹண, அவரோஹண, ஸ்வரஸ்தானங்களைக் கூறுவார்.
- "முல்லைப் பண்" என்பது இந்த இராகம் என்பதைக் குறிப்பிடுவார்.
- மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் இந்த இராகத்திலேயே பாடப்படுகிறது என்பதைக் கூறுவார்.
- இந்துஸ்தானிய இசையில் "பூப்" என்ற பெயர் கொண்டு அழைக்கப்படும் எனக் கூறுவார்.
- மோஹன இராகத்தில் அமைந்துள்ள உருப்படிகளை இனங்கண்டு கூறுவார்.

**செயற்பத்திரம்:**

- "முல்லைப்" பண்ணுக்குரிய இராகம் யாது?
- அப்பண்ணுக்குரிய இராகத்தின் இலட்சணத்தை விளக்கி எழுதுக.

## இராக இலட்சணம்

### மோகனம்

28 வது மேளகர்த்தாவாகிய ஹரிகாம்போதியின் ஜன்னிய இராகம்.

ஆரோகணம் - ஸ ரி க ப த ஸ்
அவரோகணம் - ஸ த ப க ரி ஸ

இந்த இராகத்தில் வரும் ஸ்வரஸ்தானங்கள் : ஸட்ஜம், சதுஸ்ருதி ரிஷபம், அந்தர காந்தாரம், சுத்தமத்திமம், பஞ்சமம், சதுஸ்ருதிதைவதம்.

ஒளடவ இராகம். வர்ஜ இராகம். ஆரோகண அவரோகணத்தில் மத்திமம், நிஷாதம் வர்ஜம். உபாங்க இராகம். ரி, க, த ஜீவ ஸ்வரங்களாகும். க, ப நியாயஸ்வரங்கள். ஸ, க, த ஸ்வரங்களில் உருப்படிகள் ஆரம்பிக்கின்றன.

ஸர்வ ஸ்வர கமக வரிக ரக்தி இராகம். ககபபததஸ்ஸ் போன்ற ஜண்டைஸ்வரப் பிரயோகங்களும், தகரிஸ்தப, தரிஸ்தப, கதபகரி, ரிபகரிஸ போன்ற தாட்டுஸ்வர பிரயோகங்களும் இந்த இராகத்திற்கு இனிமையைக் கொடுக்கும்.

திரிஸ்தாயி இராகம். புராதன இராகம். சபகரமான இராகம். எப்பொழுதும் பாடலாம். விரிவான ஆலாபனைக்கு இடம் கொடுக்கும் இராகம். பண்டைத்தமிழிசையில் பண் - முல்லை என்பது இந்த இராகமே. மாணிக்கவாசகரின் திருவாசகம் தொன்றுதொட்டு இந்த இராகத்திலேயே பாடப் படுகிறது.

எல்லா நாடுகளிலும் பழங்காலத்திலிருந்தே கையாளப்பட்டு வரும் இராகம். எல்லாவகையான உருப்படிகளையும் இந்த இராகத்தில் காணலாம். சுலோகங்கள், பத்யங்கள், விருத்தங்கள் பாடுவதற்கேற்ற இராகம். வர்ணனைக்கேற்ற இராகம். ஹிந்துஸ்தானி இசையில் “பூப்” என்று அழைக்கப்படும். இசைநாடகங்களிலும், நிருத்திய நாடகங்களிலும் காணப்படும் இராகம்..

மூர்ச்சனாகாரக மேள இராகம். இதன் ரி, க, ப, த ஆகிய ஸ்வரங்கள் கிரகபேதத்தின் மூலம் முறையே மத்தியமாவதி, ஹிந்தோளம், சுத்தசாவேரி, உதயரவிச்சந்திரிக்கா, ஆகிய இராகங்களைக் கொடுக்கும்.

**சஞ்சாரம்**

கபத ஸ்ாஸ் - ஸ்தர்ிஸ்தாப - கபதஸரிகா - கரிபகரிஸா - தஸ்ர்ிக்ஸ்ாதாஸ - பாதகாப
ரீகஸரிகபத - பகஸரிகபத - பகபதஸ்ரிக்ா - க்ர்ிஸ்தாப - கபகதாபகரி - ஸரிகபகாரி
ஸரிகரிஸா - தஸதாபகா - கபதாஸா

**உருப்படிகள்**

1. சஞ்சாரி கீதம் - வரவீணா - சதுஸ்ர ரூபகம் - இராமநாதபுரம் சீனிவாசர்
2. தானவர்ணம் - நின்னுகோரி - ஆதி - டைகர் வரதாச்சாரியார்
3. தானவர்ணம் - ஆலிலைமேல் - ஆதி - ஜி.என் பாலசுப்ரமணியன்
4. கிருதி - சதாபாலய - ஆதி - திருவாரூர் இராமசாமிப்பிள்ளை
5. கிருதி - கபாலி - ஆதி - பாபநாசம் சிவன்

**தேர்ச்சி:** 4.0 இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்:** 4.4 ஜனக இராகங்களைப் பற்றி விளக்குவார்.

**செயற்பாடு :** 4.4.1 ஜனக இராகம் பற்றி விளக்குவோம்.

**பாடவேளை:** 02

**தரவிருத்தி உள்ளீடு:**
- சுருதிப்பெட்டி அல்லது ஹார்மோனியம்.
- ஜனக அராகங்களின் விளக்க அட்டை.
- செயற்பத்திரம்.
- இணைப்பு.

**கற்றற்பேறுகள்:**
- ஜனக இராகம் பற்றிய விளக்கத்தை விபரிப்பார்.
- ஜனக இராக உதாரணங்களை விபரிப்பார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

4.4.1.1
- ஜனக இராகங்களின் விளக்க அட்டையைக் காட்சிப்படுத்துங்கள்.
- ஜனக இராகத்தின் ஆரோஹண, அவரோஹணத்தைப் பாடிக்காட்டுங்கள்.
- மாணவர்களைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- ஜனக இராகத்திற்கு இருக்க வேண்டிய நான்கு இலட்சணங்களையும் குறிப்பிடுங்கள்.
- ஜனக இராகத்திற்கு உதாரணங்களைக் குறிப்பிடுங்கள்.
- ஜனக இராகங்களின் எண்ணிக்கையைக் கூறுங்கள்.

படி 4.3.3.2
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகவோ தனியாகவோ பிரித்துச் செயற்பத்திரங்களை வழங்குங்கள்.
- மாணவர் செயற்பட அறிவுறுத்தல்களை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்படும் விதத்தை அவதானித்து செயற்பாட்டை உறுதி செய்யுங்கள்.

படி 4.3.3.3
- மாணவர் பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவரின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம், கலந்துரையாடி மீள வலியுறுத்துங்கள்.
- ஜனக இராகம் பற்றி மீள வலியுறுத்துங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
- ஜனக இராகம் என்றால் என்ன? என்பதைக் குறிப்பிடுவார்.
- ஜனக இராகத்தின் இலட்சணத்தை விளக்குவார்.
- ஜனக இராகத்திற்குரிய உதாரண இலக்கங்களைக் குறிப்பிடுவார்
- ஜனக இராகங்கள் 72 உள்ளன என்பதைக் கூறுவார்

**செயற்பத்திரம்:**

- ஜனக இராகம் என்றால் என்ன? என்பதைக் குறிப்பிடுக
- ஜனக இராகங்களின் இலட்சணங்களைத் தருக.
- ஜனக இராகங்களின் மொத்த எண்ணிக்கையைக் குறிப்பிட்டு அவற்றில் இரண்டு இராகங்களின் பெயர்களைத் குறிப்பிடுக.

## ஜனகராகம்

ஜனக இராகத்திற்கு மேள இராகம், இராகாங்க இராகம், தாய் இராகம், கர்த்தா இராகம், மேள கர்த்தா இராகம், சம்பூர்ண இராகம் என்ற பல பெயர்கள் உண்டு.

ஜனக இராகங்கள் முக்கியமான நான்கு இலட்சணங்களைக் கொண்டுள்ளன.

1. சம்பூர்ண ஆரோகண அவரோகணம்.
2. கிரம சம்பூர்ண ஆரோகண அவரோகணம்.
3. ஆரோகணத்தில் வரும் அதே ஸ்வரங்கள் அவரோகணத்திலும் வருதல்.
4. ஆரோகணமும் அவரோகணமும் அஷ்டகமாக இருத்தல்.

இந்நான்கு இலட்சணங்களையுடைய ஜனக இராகங்களின் மொத்த எண்ணிக்கை 72 ஆகும்.

**தேர்ச்சி:** 4.0 இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்:** 4.5 ஜன்னிய இராகங்களைப் பற்றி விளக்குவார்.

**செயற்பாடு :** 4.5.1 ஜன்னிய இராகம் பற்றி விளக்குவோம்.

**பாடவேளை:** 03

**தரவிருத்தி உள்ளீடு:**
- சுருதிப்பெட்டி அல்லது ஹார்மோனியம்.
- ஜன்னிய இராகப் பிரிவினை விளக்கும் அட்டவணை.
- ஜன்னிய இராக ஆரோகண, அவரோகணங்கள் பாடிய ஒலிநாடா.
- செயற்பத்திரம்.
- இணைப்பு.

**கற்றற்பேறுகள்:**
- ஜன்னிய இராகம் பற்றிய விளக்கத்தை விபரிப்பார்.
- ஜன்னிய இராக உதாரணங்களைக் குறிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

படி 4.4.1.1
- ஜன்னிய இராகப் பிரிவினை விளக்கும் அட்டவணையைக் காட்சிப்படுத்துங்கள்.
- ஜன்னிய இராகத்தின் ஆரோஹண, அவரோஹணத்தைப் பாடிக்காட்டியோ, அல்லது ஒலிநாடாவைப் போட்டுக்காட்டியோ மாணவர்களைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- ஜன்னிய இராகப்பிரிவுகளை விளக்குங்கள்.
- ஜனக இராகத்திற்கு உதாரணங்களைக் குறிப்பிடுங்கள்.
- ஜனக இராகங்களின் எண்ணிக்கையைக் கூறுங்கள்.
  - உபாங்க, பாஷாங்க, வர்ஜ, வக்ர இராகங்களினதும் நிஷாதாந்திய, தைவதாந்திய, பஞ்சமாந்திய இராகங்களினதும் விளக்குங்கள்.
- அவற்றுக்கான உதாரண இராகங்களைப் பாடிக்காட்டுங்கள்.

படி 4.4.1.2
- வகுப்பிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப மாணவர்களைக் குழுக்களாகவோ தனியாகவோ பிரித்துச் செயற்பத்திரங்களை வழங்குங்கள்.
- மாணவர் செயற்பட அறிவுறுத்தல்களை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்படும் விதத்தை அவதானித்துச் செயற்பாட்டை உறுதி செய்யுங்கள்.

படி 4.4.1.3
- மாணவர் பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவரின் பேறுகளைத் தொகுக்கும் வண்ணம், கலந்துரையாடி மீள வலியுறுத்துங்கள்.
- ஜன்னிய இராகப் பிரிவுகளைக்கூறி அவைபற்றி மீள வலியுறுத்துங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- ஜன்னிய இராகப் பிரிவுகளை வகைப்படுத்துவார்.
- ஜன்னிய இராகம் பற்றி விளக்குவார்.
- ஜன்னிய இராகத்திற்குரிய உதாரண இராகங்களைக் குறிப்பிடுவார்.
- ஜன்னிய இராகப் பிரிவுகளின் ஆரோகண, அவரோகணங்களைக் கூறுவார்.

**செயற்பத்திரம்:**

- ஜன்னிய இராகம் என்றால் என்ன? என்பதைக் குறிப்பிடுக.
- ஜன்னிய இராகப் பிரிவுகள் எத்தனை?
- அவற்றில் நான்கு பிரிவுகளின் பெயர்களைத் தருக.
- அவற்றின் விளக்கங்களையும் தருக.
- ஜன்னிய இராகங்களின் பிரிவுகளில், இரண்டிற்கு ஆரோகண, அவரோகணங்களைப் பாடிக்காட்டுக.

## ஜன்னிய இராகம்

ஜனக இராகத்திலிருந்து பிறந்த இராகம் ஜன்னிய இராகமாகும். ஜன்னிய இராகத்தை பிறந்த இராகம், சேய் இஎன்றும் கூறுவர். ஒவ்வொரு ஜனக இராகத்திற்கும் அனேக ஜன்னிய இராகங்கள் உண்டு. ஜன்னிய இராகத்தின் ஸ்வரஸ்தானங்கள் அதன் ஜனக இராகத்தின் ஸ்வரங்களை அனுசரித்தே வரும்.
உதாரணம் - மோகனம், பிலஹரி, சுத்தசாவேரி

பெரும்பாலும் ஜன்னிய இராகங்களில் ஆரோகணத்திலாவது அவரோகணத்திலாவது அல்லது இரண்டிலுமாவது ஒரு ஸ்வரம் அல்லது இரண்டு ஸ்வரங்கள் விலக்கப்பட்டிருக்கும். இவ்வாறு விலக்கப்பட்டிருக்கும் ஸ்வரங்கள் வர்ஜ ஸ்வரங்கள் என அழைக்கப்படும்.

ஜன்னிய இராகம் வர்ஜம், வக்ரம், உபாங்கம், பாஷாங்கம், பஞ்சமாந்திய, தைவதாந்திய, நிஷாதாந்திய எனப்பலவகைப்டும்.

**தேர்ச்சி:** **4.0** இசையின் அடிப்படை அம்சங்களை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்:** **4.6** இசைக்கருவியின் அமைப்பும் பயன்பாடும் பற்றி விளக்குவார்.

**செயற்பாடு :** **4.6.1** இசைக்கருவிகளுள் "தம்புரா" என்ற வாத்தியத்தின் அமைப்பு, பயன்பாடு பற்றி விளக்குவோம்.

**பாடவேளை:** 03

**தரவிருத்தி உள்ளீடு:**

- தம்புரா வாத்தியம்.
- பாகங்கள் குறிக்கப்பட்ட தம்புரா வாத்தியத்தின் படம்.
- தம்புரா பற்றிய விளக்க அட்டை.
- தம்புரா இசை அடங்கிய ஒலிப்பதிவு நாடா.
- ஒலிப்பதிவுக் கருவி.
- செயற்பத்திரம்.

**கற்றற்பேறுகள்:**

- தம்புராவின் அமைப்பை விளக்குவார்.
- தம்புராவின் சுருதி சேர்க்கும் முறைப்பற்றிக் குறிப்பிடுவார்.
- தம்புராவின் நான்கு தந்திகளின் பெயர்களைக் குறிப்பிடுவார்.
- தம்புராவின் படம் வரைந்து, பாகங்களைக் குறிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

படி 4.6.1.1

- சுருதி சேர்க்கப்பட்ட தம்புராவின் ஒலியை ஒலிப்பதிவுக் கருவியில் ஒலிக்கச் செய்தல் அல்லது சுருதி சேர்க்கப்பட்ட தம்புராவை மீட்டி தம்புரா ஒலியைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- தம்புரா வாத்தியத்தின் படத்தினைக் காட்சிப்படுத்துங்கள்.
- தம்புராவின், அமைப்பு, பாகங்கள், வாசிக்கும் முறை பற்றிக் கூறுங்கள்.
- தம்புராவின் நான்கு தந்திகளைக் குறிப்பிட்டுச் சுருதி சேர்க்கும் முறை பற்றிக் குறிப்பிடுங்கள்.
- தம்புராவின் படம் வரைந்து பாகங்களைக் குறிப்பிட்டுக்காட்ட வழிகாட்டுங்கள்.

படி 4.6.1.2

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- மாணவர்கள் செயற்படுவதை அவதானியுங்கள்.

படி 4.6.1.3

- ஒவ்வொரு குழுவும் தத்தமது பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- தம்புரா வாத்திய அமைப்பு, பாகங்கள், சுருதி சேர்க்கும் முறைப் பற்றி மீள வலியுறுத்துங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- தம்புரா வாத்தியத்தின் அமைப்பைக் கூறுவார்.
- தம்புராவின் சுருதி சேர்க்கும் முறைப்பற்றிக் குறிப்பிடுவார்.
- தம்புராவின் நான்கு தந்திகளின் பெயர்களைக் குறிப்பிடுவார்.
- தம்புராவின் படம் வரைந்து, பாகங்களைக் குறிப்பிடுவார்.

# இசைக்கருவி
# தம்புரா

சுருதி வாத்தியங்களுள் மிகவும் சிறப்புப் பெற்ற தந்தி வாத்தியம் தம்புராவாகும். தும்புரு கையாண்ட கருவி என்ற காரணத்தினாலும், சுரைக்காயைக் கொண்டு செய்யப்பட்டதனாலும் (சுரைக்காய்க்கு இன்னொரு பெயர் தும்பு) தம்புரா என்ற பெயர் வந்திருக்கலாம் எனவும் ஆய்வாளர் கருதுகின்றனர். இவ்வாத்தியத்தைத் தம்புரா, தம்பூரா, தம்பூரி, தம்பூரு, தம்பூர் என ஐந்து விதமாக அழைப்பர்.

## தம்புராவின் அமைப்பு

தம்புரா பலா மரத்தினால் செய்யப்படுகின்றது. முதலில் சதுரமாக உள்ள பலாமரத்துண்டு ஒன்றை எடுத்து மேல் பாகத்தைச் செதுக்கி அரைக்கோள வடிவமாக்கிப் பின் உட்பாகத்தை மெல்ல மெல்லக் குடைந்து எடுத்துவிட்டு "குடம்" என்ற இசையொலி பெருக்கும் பகுதியைத் தயார் செய்வர். குடத்தின் மேற்பலகை சிறிது வளைவாக இருக்க வேண்டும். பின்னர் "தண்டி" என்ற நீண்ட பகுதியைத் தயார் செய்து குடத்துடன் பிணைப்பர். தண்டியின் இடது ஓரத்தில் (கழுத்துப்பாகத்தில்) நான்கு பிரடைகள் போடுவதற்காகத் துளைகள் இடப்படும். குடத்தின் மேலுள்ள குதிரை (பாலம்) அகலமாகவும் குடத்தின் மேல் செம்மையாய்ப் பதிந்தும் இருக்கும். குடத்தின் வலது ஓரத்திலுள்ள தந்தித்தாங்கியில் நான்கு தந்திகள் பிணைக்கப்படடிருக்கும். அத்தந்திகள் உருண்டை வடிவமாகவுள்ள மணிக்காய்களின் துளைகள் வழியாகக் குதிரையின் மேல் செலுத்தப்பட்டு, பின்னர் மேருவின் பாகத்திலுள்ள மற்றொரு குதிரையின் நடுவிலுள்ள சில துளைகள் மூலமாகச் செலுத்தப்பட்டுப் பிரடைகளில் சுற்றப்பட்டிருக்கும். குடத்தின் மேற்பகுதியிலும் தண்டியிலும் அழகுக்காகப் பூவேலை செய்த தந்தத்தைப் பதிப்பர். இதற்குக் கமலவேலை என்று பெயர். தம்புராவின் பாகங்கள் குடம், தண்டி, கழுத்து, நான்கு பிரடைகள், குதிரை, மணிக்காய்கள், நான்கு தந்திகள், மேரு, ஜீவாளி என்பனவாகும். தம்புராக்கள் மைசூர், திருவனந்தபுரம், மிராஜ் ஆகிய இடங்களில் செய்யப்படுகின்றன.

## தம்புராவின் அமைப்பு

தம்புராவின் நான்கு தந்திகளும் பஸபஸ என்ற ஸ்வரங்களுக்கு சுருதி சேர்க்கப்படுகின்றன. நான்கு தந்திகளுக்கும் முறையே பஞ்சமம், ஸாரணி, அனுஸாரணி, மந்தரம் என்ற பெயர்கள் உண்டு. முதல் தந்தி மந்திர ஸ்தாயி பஞ்சமத்திற்கும், நடுத்தந்திகள் இரண்டும் மத்தியஸ்தாயி ஸட்ஜத்திற்கும், நான்காவது தந்தி மந்திரஸ்தாயி ஸட்ஜத்திற்கும் சுருதி சேர்க்கப்படுகின்றன. மந்திர ஸட்ஜத்திற்கு சுருதி சேர்க்கப்பட்ட நான்காம் தந்தியினின்று ஸ்வயம்பு ஸ்வரங்கள் உண்டாவதைக் கேட்கலாம். நன்றாகச் சுருதி சேர்ந்தள்ள தம்புராவில் அந்தரகாந்தாரமும், சதஸ்ருதி ரிஷபமும் ஒலிப்பதைக் கேட்கக் கூடியதாக இருக்கும். நன்கு சுருதி சேர்த்துள்ள தம்புராவைக் கச்சேரியின் ஆரம்பத்தில் சில நிமிடங்கள் மீட்டினால் மேளக்கட்டு ஏற்படும்.

சுருதி செம்மையாகக் கூட்டப்படுவதற்காகக் குடத்தின் மேல் உள்ள குதிரைக்கும் தந்தித் தாங்கிக்கும் நடுவில் 4 மணிக்காய்கள் உள்ளன. இவற்றைத் தந்தித்தாங்கியின் பக்கம் தள்ளினால் சுருதி அதிகரிக்கும். எதிர்ப்புறம் தள்ளினால் சுருதி குறையும். நாதம் "கணீர்" எனக் கேட்பதற்காக "ஜீவாளி" என்று சொல்லப்படும் பட்டு நூல் அல்லது கம்பளி நூல் துண்டுகள் குதிரைக்கும் தந்திக்கும் இடையில் தக்க இடத்தில் வைக்கப்படும்.

தம்புராவின் தந்திகள் ஆட்காட்டி விரலினால் மீட்டப்படும் தம்புராவைச் செங்குத்தாக வைத்துக் கொண்டும், கிடையாக வைத்துக் கொண்டும் வாசிக்கலாம்.

**தேர்ச்சி:** 5.0 இசையை அடிப்படையாகக் கொண்டு சமூக கலாசார பாரம்பரியப் பண்புகளை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்:** 5.1 ஆலயங்களும் இசையும் பற்றி விளக்குவார்.

**செயற்பாடு :** 5.1.1 ஆலயங்களும் இசையும் பற்றி அறிந்து கொள்வோம்.

**பாடவேளை:** 03

**தரவிருத்தி உள்ளீடுகள்:**
- ஆலயங்களோடு இசை தொடர்புபட்டிருப்பதை விளக்கும் படங்கள்.
- ஆலயங்களில் இசைக்கப்படும் இசைகள் அடங்கிய ஒலிப்பதிவு நாடா. (உ+ம் - மல்லாரி, நவசந்திப்பண், பஞ்சபுராணம் போன்றவை)
- இசைக்கருவிகளுடன் தொடர்புடைய இறைவனின் திருவுருவப்படங்கள். (உ+ம் - சிவன், சரஸ்வதி, கிருஷ்ணன், நந்தி போன்றவை)
- செயற்பத்திரம்.

**கற்றற்பேறுகள்:**

- ஆலயங்களும் இசையும் பற்றிய கலாசாரப் பாரம்பரியங்களை விளக்குவார்.
- தெய்வங்களையும் இசைக்கருவிகளையும் பற்றிக் குறிப்பிடுவார்.
- ஆலயங்களில் இசைக்கப்படும் இசைக்கருவிகள், பண்கள், தோத்திரப்பாடல்கள் பற்றிக் குறிப்பிடுவார்.
- இசையுடன் தொடர்புடைய ஆலயங்களைப் பற்றியும் குறிப்பிடுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

படி 5.1.1.1

- ஆலயங்களில் இசைக்கப்படும் இசைகள் தொடர்பான ஒலி/ஒளி நாடாக்களை ஒலிக்கச் செய்து மாணவர்களைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- மாணவர்களிடம் ஆலயங்களில் இசைக்கப்படும் வாத்தியங்கள், சிற்பங்கள், உருப்படிகள் சம்பந்தமான விடயங்களையும் கலந்துரையாடுங்கள்.
- மாணவர் செவிமடுத்தவற்றை அடிப்படையாகக் கொண்டும் விளக்கப்படங்களைக் காட்சிப்படுத்தியும் பின்வரும் விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடுங்கள்.
- ஆலயங்களோடு இசை தொடர்புபட்டிருப்பதற்கான சான்றுகள் பற்றிக் கூறுங்கள்.
  - இறைவனது நிருத்த வடிவம்.
  - வீணையுடன் கூடிய சரஸ்வதி, மத்தளத்துடன் கூடிய நந்தி, உடுக்கையுடன் கூடிய நடராஜர் போன்றவற்றைச் சித்தரிக்கும் ஓவியங்கள், சிற்பங்கள்.

- மீனாட்சி திருக்கல்யாணம், பார்வதி கல்யாணம், போன்ற நாட்டிய நாடகங்களைக் கோயில்களில் நடித்துக்காட்டுவதற்கான கலைஞர்கள் இருந்தமை.
- இறைவழிபாட்டின் போது சேமக்கலம், கின்னரம், டமாரம் போன்ற வாத்தியங்கள் பயன்படுத்தப்பட்டமை.

- மங்கள வாத்தியங்களான தவில், நாதஸ்வரம் என்பன வாசிக்கப்பட்டமையைக் கூறுங்கள்.
- ஆலயம் தோற்றம் பெற்ற காலத்திலிருந்தே இசைப்பணியில் ஆலயச் சூழலில் ஓதுவார்கள், வாத்தியக்காரர் போன்றோர் குடியமர்த்தப்பட்டனர் என்பதைக் கூறுங்கள்.
- ஆலயங்களில் யாழ், முரசு வாத்தியங்கள், சுத்தமேளம், கொத்துமணி, பஞ்சமுக வாத்தியம் போன்றன வாத்தியம் போன்றன ஆலயங்களில் இசைக்கப்பட்டமைப் பற்றிக் கூறுங்கள்.
- ஆலயங்களில் புராண படலம். கதாகாலஷேபம் , இசைக்கச்சேரி போன்றவை இடம் பெறுகின்றமை பற்றிக் குறிப்பிடுங்கள்.

படி 5.1.1.2

- வகுப்பிலுள்ள மாணவர் தொகைக்கேற்ப குழுக்களாகப் பிரித்து செயற் பத்திரங்களை வழங்கி செயற்பட அறிவுறுத்தல் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் செயற்பாட்டில் ஈடுபடுவதை அவதானியுங்கள்.

படி 5.1.1.3

- ஒவ்வொரு குழுவும் தமது பேறுகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏனைய குழுக்கள் கருத்துக்கூற இடமளியுங்கள்.
- கலந்துரையாடி மீளவலியுறுத்துங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- ஆலயங்களில் இசை வளர்ச்சி பற்றி விளக்குவார்.
- ஆலயங்களில் இசைக்கப்படும் வாத்தியங்கள் பற்றிக் குறிப்பிடுவார்.
- ஆலயங்களில் இசைக்கப்படும் இசைவடிவங்கள் பற்றிக் குறிப்பிடுவார்.
- ஆலய இசைக்கும் இறைவனின் திருவுருவங்களுக்கும் இடையிலான தொடர்புகளைக் கூறுவார்.
- தற்காலத்தில் ஆலயங்களில் இசைபற்றிக் கூறுவார்.

**செயற்பத்திரம்:**

குழு 01

- இறைவழிபாட்டின் போது பயன்படுத்தும் வாத்தியங்களையும் இசை வடிவங்களையும் அட்டவணைப்படுத்துக

குழு 02

- இசைக்கும் இறைவனுக்குமான தொடர்பினைக் கூறுக.

## ஆலயங்களும் இசையும்

இறைவனது நிருத்தமே இசை, நடனம், நாடகத்திற்கு முதற்கண்ணாய் உள்ளதென்பதைப் புராணங்கள் வாயிலாக அறிய முடிகின்றது. இதிலிருந்து ஆலயங்களும் இசையும் ஒன்றோடொன் தொடர்புடையன என்பது தெளிவாகின்றது.

நாகரிகம் வளர்வதற்கு முற்பட்ட காலத்தில் பல்வகை நிலங்களிலும் வாழ்ந்த மக்கள் பலவகை இசை நுட்பங்களை அறிந்திருந்தனர். கற்கோயில், மரக்கோயில் முன்னிலையில் பரந்து வாழ்ந்த மக்கள் பலவகைப்பாடல்களைப் பாடியும், வாத்தியங்களை மீட்டியும், பரவச நிலையில் ஆடியும் தங்களது பக்தியை இறைவனுக்குச் செலுத்தினர்.

தும்புரு நாரதர் வீணை யாழ் வாசிக்க
தொம் தொம் என நந்தி மத்தளம் கொட்ட

என்பதற்கமைய ஓவியங்களையும், சிற்பங்களையும் ஆலயங்களில் அமைத்தனர். இவை தவிர புராண வாயிலாக மீனாட்சி கல்யாணம், பார்வதி கல்யாணம் போன்ற நாட்டிய நாடகங்களைக் கோயில்களில் நடித்துக் காட்டுவதற்கென்றே கலைஞர்கள் இருந்தனர்.

இசை வழிபாட்டின் போதும் சங்கு, சேமக்கலம், கின்னரம், டமாரம், ஆகிய வாத்தியங்கள் ஒலிக்க அதற்கேற்ப நடன மாதர்கள் நடனம் ஆட, மங்கள வாத்தியங்களான தவில், நாதஸ்வரம் என்பன வாசிக்கப்பட மக்கள் வழிபாடு செய்தனர்.

ஆலயம் தோற்றம் பெற்ற காலத்தில் இருந்தே ஆலயங்களில் யாழ் வாசிப்போர், மங்கள வாத்தியம் வாசிப்போர், ஓதுவார்கள் போன்றவர்கள் இசையை வளர்க்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அத்தோடு யாழ், நாதஸ்வரம், தவில், முரசு வாத்தியங்கள், கொம்பு வாத்தியங்கள், சுத்தமேளம், கொத்துமணி வாத்தியங்கள், சங்கு ஆகியவை ஆலயங்களில் கையாளப்பட்ட முக்கியமான சில வாத்தியங்களாகும்.

அதிகாலையில் பாடப்படுகின்ற திருப்பள்ளியெழுச்சி, ஆலய உற்சவ காலங்களில் இசைக்கப்படுகின்ற நவசந்திப்பண் (குறிப்பிட்ட விதிகளின்படி நவசந்திகளுக்கும் உரிய பண்களும், இராகங்களும்) என்பன ஆலயங்களில் இசைக்கப்படுகின்றன. பஞ்சமுக வாத்திய ஆலயமுரசு வகைகளில் மிகவும் பிரபல்யமானது. இறைவனது ஐந்து திருமுகங்களையும் உருவகித்து இவ்வாத்தியத்தை அமைத்தனர்.

தேவார முதலிகள் காலத்தில் கூட்டுப்பிரார்த்தனை முறை இருந்தது என்பதை அறிகின்றோம். தேவாரத் திருப்பதிகங்களைக் கூட்டுப்பிரார்த்தனையாக பாடும் வழக்கம் நாயன்மார் காலங்களில் இருந்ததாக புராண வாயிலாக அறியப்படுகின்றது. ஆலய பூசைகளில் பஞ்சபுராணம் ஓதப்படுகின்றது. புராணபடலம், கதாகாலஷேபம், இசைக்கச்சேரிகள் போன்றனவும் இன்று நடைபெறுவதனைக் காணலாம். இசைமரபு தவறாத விற்பன்னர்களால் புராணங்களை ஜனரஞ்சகமாக எடுத்துக் கூறும் மரபு தமிழ் நாட்டிலும், எமது நாட்டிலும் பிரபல்யமாகி சமய அறிவையும், இசையறிவையும் மக்களுக்கு ஊட்டுவதில் ஆலயங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன்றன.

**தேர்ச்சி:** 5.0 இசையை, அடிப்படையாகக் கொண்டு சமூக கலாசாரப் பாரம்பரிய, பண்புகளை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்:** 5.2 வெவ்வேறு விழாக்களோடு தொடர்புடைய பாடல்களின் கலாசாரப் பின்னணி பற்றி ஆராய்வார்.

**செயற்பாடு :** 5.2.1 கும்மி, கோலாட்டம், பாடல்களின் கலாசார பின்னணி பற்றி ஆராய்வோம்/ விளக்குவோம்.

**பாடவேளை:** 03

**தரவிருத்தி உள்ளீடு:**

- சுருதிப்பெட்டி.
- ஒலிப்பதிவுக்கருவி/நாடா .
- கும்மி, கோலாட்டம், பாடல் எழுதிய அட்டை.

**கற்றற்பேறுகள்:**

- கும்மி, கோலாட்டம் என்பன நாட்டார் பாடல்கள் எனக் கூறுவார்.
- கும்மி, கோலாட்டம் என்பன வெவ்வேறு விழாக்களோடு தொர்புடைய பாடல்கள் எனக் கூறுவார்.
- கைகளைத்தட்டி ஆடப்படுவது கும்மி நடனம் என்றும், கோல்களைத் தட்டி ஆடப்படுவது கோலாட்ட நடனம் என்றும் கூறுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

படி 5.2.1.1

- மாணவர்களோடு நாட்டார் பாடல்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- கும்மி, கோலாட்டப் பாடல்கள் எழுதிய அட்டையைக் காட்சிப்படுத்தி கும்மி, கோலாட்டப் பாடல்ளைச் செவிமடுக்கச்செய்யுங்கள்.
- கும்மி, கோலாட்ட நிகழ்வுகளின் படங்களைக் காட்சிப்படுத்தி மாணவரை அவதானிக்கச் செய்யுங்கள்.
- வெவ்வேறு விழாக்களில் கும்மி, கோலாட்டம் என்பன ஆடப்படுவது பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- கும்மிக்கும், கோலாட்டத்திற்கும் இடையேயான வேறுபாடுகள் பற்றிக் கூறுங்கள்.
- கும்மி, கோலாட்டப் பாடல்களின் எளிய தாளநடை, கிராமிய இசை பற்றி விளக்குங்கள்.
- கும்மி, கோலாட்டப் பாடல்கள் பற்றி விளக்குங்கள்.
- கும்மி, கோலாட்ட நடனங்கள் ஆடப்படும் சந்தர்ப்பங்கள்.
- கும்மி, கோலாட்டத்திற்கு பயன்படுத்தும் உடை, ஒப்பனை என்பன பற்றிய விளக்குங்கள்.
- கும்மி, கோலாட்டம் பற்றிய விளக்கங்களை கொடுங்கள்.

படி 5.2.1.2

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தை வழங்குதல்.
- மாணவர்கள் செயற்படுவதை அவதானியுங்கள்.

படி 5.2.1.3

- மாணவர் குழு ஒவ்வொன்றும் தத்தமது பேறுகளைச் சமர்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர்கள் இடர்படும் இடங்களை இனங்கண்டு பின்னூட்டல் செய்யுங்கள்.

குழு 03

• நாயன்மார்களின் திருப்பாடல்களில் இசை பற்றிய விடயங்களைத் தொகுக்குக.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- கும்மி, கோலாட்டம் என்பன கிராமிய நடனப் பாடல்கள் எனக் கூறுவார்.
- கும்மி, கோலாட்டம் என்பன வெவ்வேறு விழாக்களோடு தொடர்புடைய பாடல்கள் எனக் கூறுவார்.
- கைகளைத்தட்டி ஆடப்படுவது கும்மி நடனம் என்றும், கோல்களைத் தட்டி ஆடப்படுவது கோலாட்ட நடனம் என்றும் கூறுவார்.

## கும்மி

கும்மியடித்தல் பெண்களுக்கே உரிய விளையாட்டு. வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தாமொலிக்க கொட்டியிசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டு என்று பாரதியார் கும்மிக்கு இலக்கணம் வகுத்துள்ளார்.

பண்டிகை நாட்களிலும், திருவிழாக் காலங்களிலும் கிராமியச் சூழலிலும் பெண்கள் கும்மியடித்து பாடுவது வழக்கம். கிராமியக் கலைகளில் முக்கியமான ஓர் இடத்தை கும்மி வகிக்கிறது. குத்து விளக்கு, கண்ணன் சிலை, பூக்கூடை போன்றவற்றில் ஒன்றை நடுவில் வைத்து அதைச் சுற்றி இளம்பெண்கள் வட்டமாகக் குனிந்தும் நிமிர்ந்தும் கையால் தாளம் கொட்டிப் பாடுவர்.

இவ்விதம் விளையாடும் விளையாட்டை ஒட்டியே மணிவாசகர் திருவாசகத்தில் இறைவனைப் புகழ்ந்து பாடி ஆடுவதாக திருவம்மானை பாடியுள்ளார். கும்மிப் பாடல்களில் ஒரு பெண் முறைவைத்துப் பாட மற்றவர் பின்பற்றிக் கூட்டாக இசைப்பார். அவை ஆடலும் பாடலும் எளிமையும் அழகும் வாய்ந்தனவாக இருக்கும்.

நாட்டார் இசை வழக்கில் இருந்து கும்மி மறைந்து போகாது அதற்குப் புத்துயிர் கொடுத்தவர்களுள் கோபால கிருஷ்ண பாரதியாரும் ஒருவராவார். அவர் இயற்றிய சிதம்பரக் கும்மி இதற்குச் சான்று. சுப்பிரமணிய பாரதியாரின் பெண்கள் விடுதலைக் கும்மியும் குறிப்பிடத்தக்கதாகும்.

### கும்மிப் பாடல்களுக்கு உதாரணம்

1. கும்மியடி பெண்கள் கும்மியடி
குனிந்து கும்மியடியுங்கடி
நம்மையாளும் கெங்கை முத்தம்மனை
நாடிக் கும்மி அடியுங்கடி - புகழ்
தேடிக்கும்மியடி

சுப்பிரமணிய பாரதியாரின் கும்மிப்பாடல்

2. கும்மியடி தமிழ் நாடு முழுவதும்
குலுங்கிட கைகொட்டி கும்மியடி
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோமென்று கும்மியடி

கோபால கிருஷ்ண பாரதியாரின் கும்மிப்பாடல்

3. சாந்துப் பொட்டு தளதளென - நல்ல
சந்தன வாடை குமுகுமென்ன
கூத்தலழகிக் காரியெல்லாங் காலைக்
குவித்துக் கும்மியடியுங்கடி

## கோலாட்டம்

கோலாட்டமும் கும்மி போன்று பெரும்பாலும் பெண்களுக்குரிய ஒரு விளையாட்டாகும். கும்மியில் கைகளினால் தாளத்தைத் தட்டிக் காட்டுவர். கோலாட்டத்தில் சிறு வர்ணக் கோல்களாலே தட்டி ஆடுவார். கிராமிய ஆடல் பாடல் வகைகளுள் கோலாட்டமும் ஒன்றாகும். கலை விழாக்களிலும் கோவில்களில் திருவிழாக்களிலும் கோலாட்டம் ஆடுவது வழக்கம்.

கோலாட்ட வகைகளில் பின்னல் கோலாட்டம் என்று மற்றொரு வகையுண்டு. பல்லக்கின் முன் கொம்பில் பல வர்ண நாடாக்களைத் தொங்கவிட்டு அவற்றின் நுனிகளைக் கோலாட்டக் கோல்களில் பொருத்திச் சுற்றி ஆடுவார்கள். அப்போது அந்த வர்ண நாடாக்கள் முதலில் பின்னலைப் போல் இணைவதும் பின்பு அவிழ்வதுமாயிருக்கும். இவ்வகைக் கோலாட்டங்களை ஆடும்போது எண்ணிக்கைக்கேற்ப நிதானமாக ஆடுதல் வேண்டும்.

கும்மி கோலாட்டங்களில் பலர் சுற்றி ஆடும்போது அமையும் கோலங்கள் பல வகைப்பட்டனவாயும் எழில் மிகுந்தவையாகவும் இருக்கும்.

கோலாட்டப் பாடலுக்கான உதாரணங்கள்.

1. கோலாடுவோம் நாமும் பண் பாடுவோம்
   மதியொளி நிலவினில் கூடியாடுவோம் - நாமே

2. பட்டுப்பாவாடைகள் கட்டிக்கொண்டு நாமும்
   சிட்டுக்கள் போலாடுவோம்
   மொட்டுக்கள் மலர்வது போல நிமிர்ந்து நாம்
   தட்டுக்கள் தட்டிடுவோம்.

**தேர்ச்சி:** **5.0** இசையை, அடிப்படையாகக் கொண்டு சமூக கலாசாரப் பாரம்பரிய, பண்புகளை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்:** **5.2** வெவ்வேறு விழாக்களோடு தொடர்புடைய பாடல்களின் கலாசாரப் பின்னணி பற்றி ஆராய்வார்.

**செயற்பாடு :** **5.2.2.** கொம்புமுறி, ஊஞ்சல் பாடல்களின் கலாசார பின்னணி பற்றி ஆராய்வோம்/விளக்குவோம்.

**பாடவேளை:** 03

**தரவிருத்தி உள்ளீடு:**
- சுருதிப்பெட்டி.
- ஒலிப்பதிவுக்கருவி/நாடா .
- கொம்புமுறி, ஊஞ்சல் பாடல்கள் எழுதிய அட்டை.
- கொம்புமுறி, ஊஞ்சல் நிகழ்வுகளின் படங்கள்.

**கற்றற்பேறுகள்:**

- பல்வேறுபட்ட விழாக்களில் ஆடப்படும் கொம்புமுறி, ஊஞ்சல் போன்ற பாடல்களின் கலாச்சார பின்னணியைக் குறிப்பிடுவார்.
- கொம்புமுறி, ஊஞ்சல் என்பன வெவ்வேறு விழாக்களொடு தொடர்புடைய பாடல்கள் எனக் கூறுவார்.
- கொம்புமுறிக்கு மரக்கொம்புகள் முக்கியத்துவம் பெறுகின்றன எனக் கூறுவார்.
- ஊஞ்சல் அதிகமாக பெண்களே ஆடுவர் எனக் கூறுவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

படி 5.2.2.1

- மாணவர்களோடு நாட்டார் பாடல்கள் பற்றி கலந்துரையாடிக் கொம்புமுறி, ஊஞ்சல் நிகழ்வுகளின் படங்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- கொம்புமுறி, ஊஞ்சல் பாடல்கள் எழுதிய அட்டையைக் காட்சிப்படுத்தி கொம்புமுறி, ஊஞ்சல் பாடல்ளைச் செவிமடுக்கச்செய்து இனங்காணச் செய்யுங்கள்.
- வெவ்வேறு விழாக்களில் கொம்புமுறி, ஊஞ்சல் என்பன ஆடப்படுவது பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- கொம்புமுறி விளையாட்டு விளையாடப்படும் முறை பற்றியும் விளையாடப்படும் பிரதேசம், விளையாட்டில் ஈடுபடும் கட்சிப்பிரிவுகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- ஊஞ்சல் ஆடப்படும் சந்தர்ப்பம், ஆடப்படும் முறை, ஊஞ்சல் பாடல்களில் வெளிப்படக் கூடிய கருத்துக்கள் பற்றியும் கலந்துரையாடுங்கள்.

படி 5.2.2.2

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்துச் செயற்பத்திரத்தை வழங்குங்கள்.
- மாணவர்கள் செயற்படுவதை அவதானியுங்கள்.

படி 5.2.2.3

- மாணவர் குழு ஒவ்வொன்றும் தத்தமது பேறுகளைச் சமர்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர்கள் இடர்படும் இடங்களை இனங்கண்டு பின்னூட்டல் செய்யுங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- கொம்புமுறி, ஊஞ்சல் பாடல்களின் கலாச்சாரப் பின்னணியைக் கூறுவார்.
- கொம்புமுறி, ஊஞ்சல் என்பன வெவ்வேறு விழாக்களோடு தொடர்புடைய பாடல்கள் எனக் கூறுவார்.
- கொம்புமுறிக்கு மரக்கொம்புகள் முக்கியத்துவம் பெறும் என்றும் ஊஞ்சல் அதிகமாகப் பெண்களே ஆடுவர் எனவும் கூறுவார்.

# கொம்பு முறி

கொம்பு என்ற சொல் விலங்குகளின் கொம்புகள் என்ற எண்ணத்தையே பொதுவாக எமக்கு ஊட்டுகின்றது. ஆயினும் இங்கு குறிப்பிடப்படும் கொம்பு என்பது மரங்களில் இயல்பாகவே காணப்படும் வளைதடி ஒன்றே என்பதை நாம் அறிந்து கொள்வோம்.

நீதியற்ற முறையில் கோவலனைக் கொலை செய்த பாண்டிய மன்னனைப் பழிவாங்கி அவன் அரசாண்ட மதுரையினை எரியூட்டிய பின்னரும் கோபந்தணியாது வந்த கண்ணகிக்கு அடையா குலத்து இளைஞர்கள் ஒரு காதல் கலந்த விளையாட்டு விழாவாக கொம்பு விளையாடலைச்செய்து அவளைக் குளிர்வித்தனர் என்றும் அதன் தொடர்பினதாக எழுந்ததே இன்றும் மட்டக்களப்பில் வழங்கும் கொம்பு விளையாட்டு என்று கூறப்படுகிறது.

மட்டக்களப்பு பகுதியில் வரட்சியால் மக்கள் அல்லற்படும் போது கண்ணகி தேவியை நினைந்து கொள்வதும் அவளது சீற்றநிலை மாற சாந்தி செய்ய நினைத்தலும் இன்னும் உள்ள வழக்கமாகும். இத்தகைய சாந்தி நிலையைக் கண்ணகிக்கு ஊட்டும் போது அதன் மூலம் ஊர் முழுவதுமே மகிழ்வூட்டுதலே கொம்பு விளையாட்டின் பண்பாகும்.

இக்கொம்புமுறி விளையாடல் நடந்தால் உடனேயே நாடு குளிர மழை பெய்து வரட்சி நீங்கப் பெறுதல் வியக்கத்தக்க ஒரு நிகழ்வாகும்.

கொம்பு விளையாட்டு தொடங்கியதும் ஊர் முழுவதும் இரண்டு கட்சிகளாகி விடும். ஒன்று கண்ணகிக்கும் மற்றையது கோவலனுக்குமான கட்சிகள் முறையே தென்சேரி, வடசேரி என்று பெயர் குறிப்பிடப்படும். குலம், குடி அனைத்தையும் மறந்து அந்தந்தச் சேரியார் ஒன்றுபட்டு நின்று விளையாட்டின் வெற்றி தோல்விகளை உணர்ச்சியுடன் அனுபவிப்பர்.

வடசேரியானது கொம்பு பெரும்பாலும் 90 பாகைக்கு மேற்பட்ட வளைவுடையதாகவும் தென்சேரியானது அதனிலும் ஒடுங்கியதாகவும் இருக்கவேண்டிய பொது விதி. இயல்பாகவே அமைந்த வளைவை யுடைய கொம்புகளை எல்லா மரங்களிலும் காணலாம். எனினும். “கரையாக்கு” என்னும் ஒரு வகை மரத்திலிருந்து மட்டுமே விளையாட்டுக்கான கொம்புகள் அடக்கப்படுவது மரபாகும்.

கொம்பு முறி விளையாட்டின் முதற்கட்டமாகப் போர்த்தேங்காய் அடித்தல் நடைபெறும். இரு சேரிகளினதும் பிரதிநிதிகளான இருவர் தம் கையிற் கொண்டுள்ள வலிமையான போர்த்தேங்காயினால் எதிர்சேரியார் உருட்டி அனுப்பும் போர்த்தேங்காய்களை ஒவ்வொன்றாக உடைப்பர்.

ஒரு பகுதியினரால் உடைக்கப்படும் தேங்காயின் கூடிய எண்ணிக்கைக் கொண்டே சேரியரின் வெற்றி தீர்மானிக்கப்படும். அது முடிந்ததும் கொம்பு விளையாட்டின் முதற் குறியாக ஒரு கொம்பினை முறித்து அவ்விழாவினை ஆரம்பித்து வைத்தல் முறையாகும். மறு நாளிலிருந்து கொம்பு முறித்தல் நடைபெறும். தம்சேரிக் கொம்புகள் வென்று விட்டால் அச்சேரியினால் காட்டும் மகிழ்ச்சியின் எல்லையைக் கூறவே முடியாது.

வென்றோரை மறுநாள் தாம் வெல்ல வேண்டும் என்று வேறு கொம்பெடுத்து அதற்கு மந்திரம் சொல்லி வலுவூட்டுதல் முதலியவற்றிலே தோற்ற கட்சியினர் சென்று விடுவர். வென்ற கட்சியினர் அன்று நாள் முழுவதும் நாட்டுக் கூத்துக்களும், வசந்தன் ஆட்டங்களும், வசைப்பாடல் போட்டிக ளுமாக பல கலை நிகழ்ச்சிகளை நடாத்துவார்கள். வேடர், குறவர், போர் வீரர், முடிமன்னர், முனிவர், ஆண்டின் முதலாக பல கோலம் புனைந்து மக்கள் ஆடல் புரிவர். அப்போது பல கொம்பு விளையாட்டுப் பாடல்கள் வேடிக்கையாகப் பாடப்படும்.

உதாரணமாக

ஆற்றோரம் போற மயில் - அது
ஆண்மயிலோ பெண்மயிலோ
பார்த்துவாடா வடசேரியான்
நாவற்பழம்போல மாலை தாறேன்.

ஆற்றோரம் சிறாம்பி கட்டி
அங்கே நின்று வடமிழுத்து
வேர்த்து வாறான் தென்சேரியான் - அவனை
வெள்ளி மடல் கொண்டு வீசுங்கடி

இத்தகைய பாடல்கள் ஒரு சேரியார் இன்னோர் சேரியாரைப் பழித்தும், தம்மைப் புகழ்ந்தும் பாடும் வசைப்பாடல்களாக அமைந்துள்ளன.

இவ்வாறாக இக்கொம்பு விளையாடல் மட்டக்களப்பின் பல கிராமங்களிலும் முன்பு நடைபெற்று வந்ததெனிலும் இன்று அந்நிலை மாறி மண்டூர், தம்பிலுவில், காரைத்தீவு, முதலைக்குடா, வந்தாறுமூலை என்ற சில ஊர்களில் மட்டுமே காணப்படுவததாக உள்ளது. நகைச்சுவையும், நல்ல கருத்துக்களும் நிறைந்த பாடல்கள் கொம்பு முறிப்பாடல்களுக்கு உண்மையான உயர்வைக்கொடுக்கின்றன.

## ஊஞ்சல் பாடல்

பொங்கல் வருடப்பிறப்பு போன்ற பண்டிகை நாட்களில் பெண்கள் ஊஞ்சலாடி மகிழ்வது வழக்கம். இது நம் நாட்டின் கிராமியப் பகுதிகளிலும், இந்தியாவில் நெல்லை, குமரி மாவட்டங்களிலும் பெருவழக்கமாக இன்னும் நடைமுறையில் உள்ளது. ஆட்டம் ஒரே முறையாக அமைவதால் அதனைக் கலை என்று கூறுவதைவிட ஒரு விளையாட்டு என்று கூறுவதே பொருந்தும். இருப்பினும் ஊஞ்சல் ஆடும் போது பாடப்படும் இனிய பாடல்கள் கலை நயம் மிக்கனவாகவே காணப்படுகின்றன. பெரும்பாலும் பெண்களே இப்பாடலில் பங்கு கொள்வார். இது மிக எளிதாக ஆடக்கூடியது. ஆயினும் சில சமயங்களில் ஆண்களும் இதனை ஆடுவர்.

வாய்ப்பான மரக்கிளைகளில் இரண்டு கயிறுகளைக் கட்டித் தொங்கவிடுவர். தொங்கும் பகுதியில் ஒரு பலகையை அல்லது உலக்கையை இணைத்து இருப்புக்கு வழி செய்வர். அதில் ஒன்று முதல் நான்கு பெண்கள் வரையில் அமர்ந்து கொண்டு கயிற்றைப் பலமாகப் பிடித்துக்கொண்டு ஆடுவர். கால் உந்தலால் ஊஞ்சலை அங்குமிங்கும் வேகங்கொள்ளுமாறு செய்வர். ஆண்கள் பலகையில் ஏறி நின்று உந்தி வேகமாக ஆடுவதும் உண்டு. ஊஞ்சலை ஊசல், குஞ்சலம் எனவும் அழைப்பர்.

பெண்கள் இனிமையாகப் பாடியவாறு ஊஞ்சாலாடுவார். அனைவரும் இணைந்ததும் ஒருவர் மாறி ஒருவரும், ஒருவர் பாடியதைப் பிறர் இணைத்துத் திரும்பப் பாடி மகிழ்வதையும் காணலாம். சமுதாய கொண்டாட்டங்களின் போது ஊஞ்சல் ஆடப்படுவதாக இருந்தாலும் கூட பெண்களின் சில உணர்வுகள் சமுதாயப்பின்னணியில் உடைத்துக் காட்டப்படுவதாக பாடப்படும் ஊஞ்சற் பாடல்கள் உள்ளன.

உதாரணம்

வண்ண வண்ணப் பட்டுடுத்தி வாழப்போறாள் பத்தினியால்
சின்னச் சின்னச் பூச்சூடி சிறக்கப்போறாள் பத்தினியாள்
வாழப்போறாள் வாழப்போறாள் பத்தினியாள் வாழப்போறாள்
வண்ணப்பெட்டியும் கூடப்போகுது
கூடப்போறான் கூடப்போறான் பத்தினியாள் கூடப்போறாள்
கொட்டப் பெட்டியும் கூடப்போகுது

என்பது போன்ற பாடல்கள் இத்தகைய ஊஞ்சற் பாடல்களுக்கு உதாரணமாகும். இது போன்ற இனிய பாடல்களைப் பாடி பெண்கள் ஊஞ்சலாட்டத்தில் மகிழ்கின்றார். ஏழைகள், செல்வந்தர்கள் நாட்டுப்புற மக்கள் என்ற பேதமின்றி யாவராலும் விரும்பி ஆடப்படும் ஊஞ்சல் எமது கலாசாரத்தில் முக்கிய இடத்தைப் பெறுகின்றது.

இளம் பெண்களால் ஆடிப் பாடப்படும் ஊஞ்சற் பாடல்களைத் தவிர சிறுவர் விளையாட்டுப் பாடல்களாக உள்ள ஊஞ்சற் பாடல்களும் உள்ளன. அத்துடன் திருவிழாக்களில் திருக்கல்யாண உற்சவ காலங்களில் இறைவனையும் இறைவியையும் ஊஞ்சலில் வைத்து ஆட்டும் போது

பாடப்படும் ஊஞ்சற் பாடல்களும் உள்ளன. இவ்வகை ஊஞ்சற் பாடல்கள் தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனைப் பற்றியும் தலத்தின் பெருமையைப் புகழ்ந்து பாடுவதாகவும் அமைந்திருக்கும். சமூகத்தில் திருமண விழாக்களில் தம்பதியரை ஊஞ்சலில் வைத்து வாழ்த்தும் வழக்கமும் உள்ளது. திருவாசகத்தில் பொன்னூஞ்சல் பாடப்பட்டிருப்பதை நாம் நோக்கும் போது அக்காலத்தில் பேணப்பட்ட கலாசாரத்தின் பின்னணியில் இவ்வகைப் பாடல்கள் இறைவன் மேல் ஏற்றிப்பாடப்பட்டிருப்பதை உணரக் கூடியதாக உள்ளது.

**தேர்ச்சி:** 5.0 இசையை அடிப்படையாகக் கொண்டு சமூக கலாசாரப் பாரம்பரிய பண்புகளை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்:** 5.3 கர்நாடக இசைக்குத் தொண்டாற்றிய வாக்கேயகாரர்களின் வாழ்க்கை வரலாற்றையும் இசைத் தொண்டையும் விளக்குவார்.

**செயற்பாடு :** 5.3.1 புரந்தரதாஸரின் வாழ்க்கை வரலாற்றையும் இசைத் தொண்டினையும் அறிந்து கொள்வோம்.

**பாடவேளை:** 02

**தரவிருத்தி உள்ளீடு:**

- புரந்தரதாஸரின் படம்.
- புரந்தரதாஸரின் வரலாறு பற்றிய விளக்க அட்டை.
- அவரது உருப்படிகள் அடங்கிய ஒலிப்பதிவு நாடா.
- ஒலிப்பதிவுக்கருவி.
- சுருதிப்பெட்டி.
- செயற்பத்திரம்.

**கற்றற்பேறுகள்:**

- 1484 ஆம் ஆண்டு புரந்தரகட எனும் ஊரில் பிறந்தார் எனக் கூறுவார்.
- நவகோடி நாராயணன் என்னும் பெயர் கொண்டு அழைக்கப்பட்டமையை விளங்கிக் கொள்வார்.
- இவரது முத்திரையைக் கூறுவார்.
- புரந்தரதாஸரின் முத்திரையைக் கூறுவார்.
- இவரின் வாழ்க்கைக் காலம், இசைப்பணி என்பதைக் கற்பதன் மூலம் வாக்கேயகாரர்களின் பங்களிப்பினை மதிப்பிடும் மனப்பாங்கை வெளிப்படுத்துவார்.

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

படி 5.3.1.1

- இசைக்குத் தொண்டாற்றிய வாக்கேயகாரர் பற்றி கலந்துரையாடுங்கள்.
- புரந்தரதாஸரின் படத்தைக் காட்சிப்படுத்துங்கள்.
- புரந்தரதாஸரின் இசை உருப்படிகள் அடங்கிய ஒலிநாடாவை ஒலிக்கச் செய்தோ, உருப்படிகளைப் பாடிக்காட்டியோ இவ்வாக்கேயகாரரை அறிமுகஞ் செய்யுங்கள்.
- புரந்தரதாஸர் தொடர்பாக பின்வரும் விடயங்களை உணர்த்தும் வகையில் கலந்துரையாடுங்கள்.
- வாழ்க்கைக் காலம்.
- பிறந்த இடம்.
- பெற்றோர் பெயர்.
- இளமைப் பெயர்.
- திருமணம்.
- முத்திரை.
- இளமைக் கல்வி.
- மூக்குத்திச் சம்பவம்.
- இசைப்பணியும் இயற்றிய உருப்படிகளும்.
- பெற்ற பட்டங்கள்.

படி 5.3.1.2

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- மாணவர் செயற்படுவதை அவதானியுங்கள்.

படி 5.3.1.3

- ஒவ்வொரு குழுவும் தத்தமது பேறுகளைச் சமர்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர் இடர்படும் இடங்களை அவதானித்துப் பின்னூட்டல் வழங்குங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**

- புரந்தரதாஸரின் வாழ்க்கைக்காலத்தைக் குறிப்பிடுவார்.
- புரந்தரதாஸரின் இசைப்பணியை மதிப்பிடுவார்.
- புரந்தரதாஸரின் முத்திரையைக் குறிப்பிடுவார்.
- வாக்கேயகாரர்களின் பங்களிப்பினை மதிக்கும் மனப்பாங்கை வெளிப்படுத்துவார்.

## வாக்கேயகாரர் சரித்திரம்
## புரந்தரதாஸர் (1484 – 1564)

இவர் 1484 ஆம் ஆண்டு கர்நாடக மாநிலத்தில் புரந்தரகட எனும் ஊரில் பிரபல செல்வந்தரான வரதப்பநாயருக்கும், கமலாம்பாளுக்கும் மகனாகப் பிறந்தார்.இவருக்கு பெற்றோர் சூட்டிய பெயர் ஸ்ரீநிவாசன் என்பதாகும். இவர் சீனப்ப எனவும் அழைக்கப்பட்டார்.

இவர் இளவயதினிலே கன்னடம், சம்ஸ்கிருதம் ஆகிய மொழிகளையும், சங்கீதத்தையும் முறையாகப் பயின்று பாண்டித்தியம் பெற்றார். பதினாறு வயதில் இவருக்கு சரஸ்வதிபாய் என்ற பெண்ணை பெற்றோர் திருமணம் செய்து வைத்தனர். தமது இருபதாவது வயதில் பெற்றோர்களை இழக்க நேரிட்டதால் தமது தந்தையாருடைய இரத்தினக்கல் வியாபாரத்தைத் தாம் ஏற்று மிகச் சிறப்புற நடாத்தி, செல்வத்தைப் பன்மடங்கு பெருக்கினார். செல்வந்தராக இருந்தமையால் இவர் நவகோடி நாராயணன் என்ற பெயர் கொண்டு அழைக்கப்பட்டார். செல்வம் அதிகரிக்க அவர் மிகவும் கருமியாகவும், தான தருமம்செய்யும் சிந்தையற்றவராகவும் மிகவும் பகட்டான வாழ்வு வாழ்பவராகவும் திகழ்ந்தார்.

ஒரு நாள் வயோதிப அந்தணர் ஒருவர் தனது மகனின் உபநயணத்திற்காக புரந்தரதாஸரை அணுகினார். புரந்தரதாஸர் அந்தணருக்கு எவ்வித உதவிகளையும் செய்யாது நாட்களை நடத்தி வந்தார். பொறுமையை இழந்த அந்தணர் புரந்தரதாஸரின் மனைவியிடம் சென்று இரந்தார். அந்தணரின் நிலையை அறிந்து அவர் தனது விலையுயர்ந்த மூக்குத்தியை புரந்தரதாஸரிடம் விற்றுப் பணம் பெறச் சென்றார். புரந்தரதாஸர் அந்த மூக்குத்தியைப் பார்த்ததும் சந்தேகம் வரவே வேலையாள் ஒருவனிடம் மனைவியின் மூக்குத்தியை வாங்கி வரும்படி கூறி அனுப்பினார். சரஸ்வதிபாய் அச்செய்தி கேட்டு மிகவும் பயந்து கடவுளைத் தியானித்தார். அப்போது அந்தணருக்குக் கொடுத்த மூக்குத்தியைப் போல இன்னுமொரு மூக்குத்தி தம் மூக்கில் இருப்பதையுணர்ந்தார். அதனைக்கழற்றி வேலையாளிடம் கொடுத்து அனுப்பினார். இரண்டு மூக்குத்திகளும் ஒரே மாதிரியாக இருப்பதையுணர்ந்த புரந்தரதாஸர் மனைவியிடம் சென்று உண்மையைக் கூறும்படி கேட்டார். மனைவியும் நடந்தவற்றைக் கூறினார். இறைவனே தன்னை யாசிக்க வந்துள்ளார் என்பதையுணர்ந்த புரந்தரதாஸருக்கு ஞானோதயம் ஏற்பட்டது. உடனே அவர் அடாணா இராகத்தில் "மோஸகோதனலோ" எனும் பதத்தைப் பாடினார்.

தனது முப்பதாவது வயதிலே ஞானோதயம் பெற்று வியாசராய சுவாமிகளின் உபதேசம் பெற்றுப் பின் சத்தியதர்ம சுவாமிகளின் அனுக்கிரகத்தைப் பெற்று "புரந்தரதாஸர்" என்னும் பெயரைப் பெற்றுக் கொண்டார். இவரது பாடல்கள் "புரந்தர விட்டல" என்ற முத்திரையைக் கொண்டு விளங்குகின்றன.

இவர் ஒவ்வொரு நாளும் பக்திரஸம் ததும்பும் பதங்களைப் பாடினார். சுலபமான மொழிநடையில் அமைந்துள்ள இவரது பதங்கள் யாவரும் அனுபவித்துப்பாடக் கூடியவையாக இருக்கின்றன.

புரந்தர தாஸர் "ஆதிகுரு" என்றும் "சங்கித பிதாமகர்" என்றும் போற்றப்படுகின்றார். ஆரம்ப இசைப் பயிற்சிக்காக ஸ்வராவளிகள், ஜண்டை வரிசைகள், அலங்காரங்கள், கீதங்கள் என்பவற்றை இயற்றியுள்ளார். ஆரம்ப பயிற்சிக்கு ஏற்ற இராகம் மாயாமாளவகௌளை எனத்தேர்ந்தெடுத்தவரும் இவரேயாவார். இவரது உருப்படிகள் கன்னடத்திலும், வடமொழியிலும் அமைந்துள்ளன.

துருவம், மட்டியம் போன்ற சப்த தாளங்களும் இவருடைய காலத்திலேயே பிரசித்தி பெற்றன. தாய்மொழியில் கீர்த்தனைகளைச் செய்த ஆதி இசைப்புலவர்களில் இவரும் ஒருவராவார். இலட்சக்கணக்கில் பாடல்களை இயற்றிய இசைஞானியும் இவரேயாவார். இவர் இயற்றிய பதங்களின் தொகை 4,75,000 என்று இவர் இயற்றிய வாசுதேவ நாமாவளி என்ற உருப்படியில் இருந்து தெரிய வருகிறது. தற்போது 8000 பதங்களே வழக்கில் காணப்படுகின்றன. மற்றையவை மறைந்து விட்டன. இவரது பதங்கள் தேவர் நாமாக்கள் என்றும் தாஸர் பதங்கள் என்றும் சிறப்பாக அழைக்கப்படுகின்றன.

**தேர்ச்சி:** 5.0 இசையை அடிப்படையாகக் கொண்டு சமூக கலாசாரப் பாரம்பரிய பண்புகளை வெளிப்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்:** 5.3 கர்நாடக இசைக்குத் தொண்டாற்றிய வாக்கேயகாரர்களின் வாழ்க்கை வரலாற்றையும் இசைத் தொண்டையும் விளக்குவார்.

**செயற்பாடு :** 5.3.2 பாபநாசம் சிவனின் வாழ்க்கை வரலாற்றையும் இசைத் தொண்டினையும் அறிந்து கொள்வோம்.

**பாடவேளை:** 02

**தரவிருத்தி உள்ளீடு:**

- பாபநாசம் சிவனின் படம்
- பாபநாசம் சிவனின் வரலாறு பற்றிய விளக்க அட்டை
- அவரது உருப்படிகள் அடங்கிய ஒலிப்பதிவு நாடா
- ஒலிப்பதிவுக்கருவி
- சுருதிப்பெட்டி
- செயற்பத்திரம்

**கற்றற்பேறுகள்:**

- 20 ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த தமிழ் வாக்கேயகாரர் எனப் போற்றப்படுகிறார்.
- பாபநாசம் சிவனின் வாழ்க்கைக்காலத்தைக் குறிப்பிடுவார்.
- இவரது முத்திரையை, பெற்ற பட்டங்களைக் கூறுவார்.
- இவரின் இசைப்பணியை மதிப்பிடுவார்

**கற்றல் கற்பித்தல் செயலொழுங்கு:**

5.3.2.1

- இசைக்குத் தொண்டாற்றிய வாக்கேயகாரர் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- பாபநாசம் சிவனின் படத்தைக் காட்சிப்படுத்துங்கள்.
- பாபநாசம் சிவனின் இசை உருப்படிகள் அடங்கிய ஒலிநாடாவை ஒலிக்கச் செய்தோ, உருப்படிகளைப் பாடிக்காட்டியோ இவ்வாக்கேயகாரரை அறிமுகஞ் செய்யுங்கள்.
- பாபநாசம் சிவன் தொடர்பாகப் பின்வரும் விடயங்களை உணர்த்தும் வகையில் கலந்துரையாடுங்கள்.
- வாழ்க்கைக் காலம்
- பிறந்த இடம்
- பெற்றோர் பெயர்
- இளமைப் பெயர்
- இசைப்பயிற்சி
- முத்திரை
- இசைப்பணியும் இயற்றிய உருப்படிகளும்
- பெற்ற பட்டங்கள்

5.3.1.2
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து செயற்பத்திரத்தினை வழங்குங்கள்.
- மாணவர் செயற்படுவதை அவதானியுங்கள்.

5.3.1.3
- ஒவ்வொரு குழுவும் தத்தமது பேறுகளைச் சமர்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர் இடர்படும் இடங்களை அவதானித்துப் பின்னூட்டல் வழங்குங்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும்:**
- பாபநாசம் சிவனின் வாழ்க்கைக் காலத்தைக் குறிப்பிடுவார்.
- பாபநாசம் சிவனின் இசைப்பணியை மதிப்பிடுவார்.
- பாபநாசம் சிவனின் முத்திரையைக் குறிப்பிடுவார்.
- வாக்கேயகாரர்களின் பங்களிப்பினை மதிக்கும் மனப்பாங்கை வெளிப்படுத்துவார்.

## வாக்கேயகாரர் சரித்திரம்
## பாபநாசம் சிவன் (1890 – 1973)

இருபதாம் நூற்றாண்டின் தலை சிறந்த வாக்கேயகாரர் என்று போற்றப்படும் பாபநாசம் சிவன் 1890 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 26 ம் திகதி தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த "போலகம்" என்னும் கிராமத்தில் இராமமிருத ஐயர், யோகாம்பாள் என்பவர்களுக்கு இரண்டாவது மகனாக பிறந்தார். பெற்றோர் இவருக்கு "ராமையா" எனப்பெயரிட்டனர்.

1895 ஆம் ஆண்டு தனது ஐந்தாவது வயதில் தந்தையை இழந்தார். வறுமை காரணமாக இவர் தமது தாயையும் அழைத்துக் கொண்டு திருவனந்தபுரத்தில் வாழ்ந்த மூத்த சகோதரர் ராஜ கோபாலனிடம் வந்து சேர்ந்தார். அங்கிருக்கையில் சம்ஸ்கிருதத்தைப் படித்து "உபாத்தியாயர்" பட்டம் பெற்றார்.

இராமையா அவர்கள் சிறந்த சாரீரத்தையும் இசை ஆர்வமும் ஞானமும் கொண்டிருந்தார். இசையின் ஆரம்பப் பயிற்சிகளை நூரணி மகாதேவ ஐயரிடமும், சாம்ப பாகவதரிடமும் பெற்றுக் கொண்டார். அக்காலத்தில் இசை மேதையாக விளங்கிய ஸ்ரீ நீலகண்ட சிவனைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டார். அவரது சீடர்களுடன் அடிக்கடி பஜனைகளில் பாடி வந்தார். ஏராளமான தேவாரங்கள், அருட்பா போன்றவற்றைப் பயின்று உள்ளம் கனியப்பாடி மக்களைக் கவர்ந்தார். பஜனை செய்வதன் மூலம் இவரது இசைப்புலமை மெருகேறியது. 7 ஆண்டுகள் கோனேரி ராஜபுரம் வைத்தியநாத ஐயரிடம் தங்கி அவருடன் பல நிகழ்ச்சிகளுக்குச் சென்று அவரது பாணியைக் கற்றுக்கொண்டார். பஜனைகளில் கலந்து கொண்டு பாடுவதுதான் இவருக்கு அதிகமாப் பிடித்தது.

1910 ஆம் ஆண்டு தாயார் காலமானார். பின்பு ஏழு ஆண்டுகளாகத் திருப்பதிக்கும், கன்னியா குமரிக்கும் இடையேயுள்ள கோயில்களைத் தரிசித்து கண்ட இடங்களில் தூங்கிக் கிடைத்ததைத் சாப்பிட்டும் பஜனை பாடித்திரிந்தார்.

1917 இல் திருமணம் புரிந்த பின்னர் தன் தமையன் வாழ்ந்த பாபநாசத்திற்கு வந்து தங்கியிருக்கையில் தஞ்சாவூர் கணபதி ஆச்சிரமத்தைச் சேர்ந்த ஜனங்கள் இவரின் பக்தியின் ஆழத்தையும் இசைத்திறமையையும் கண்டு "ராமையா" என அழைக்காமல் "சிவன்" என அழைத்தனர். அன்றிலிருந்து இவர் "பாபநாசம் சிவன்" என அழைக்கப்பட்டார். இச்சமயத்தில் இவர் செய்து வந்த பஜனைகள் புகழ்பெற்று திருவையாறு உற்சவங்களில் வருடாந்தம் இடம்பெற்று வந்தன. அக்கால கட்டத்திலேயே பாபநாசம் சிவன் உருப்படிகளை இயற்றத் தொடங்கினார். முதன் முதலில் "உன்னைத் துதிக்க அருள் தா" என்ற குந்தலவராளி இராகத்திலமைந்த கீர்த்தனையை இயற்றினார். தமது முத்திரையாக "ராமதாஸ" என்பதை வைத்துக் கொண்டு கிருதிகள், கீர்த்தனைகள், பதம் வர்ணம் ஆகியவற்றை இயற்றினார்.

1921 ஆம் ஆண்டு தொழில் செய்வதற்காகச் சென்னைக்குச் சென்றார். அங்கு மார்க்கண்டேயர் நாடகத்தில் பாடல்களை இயற்றிப் பாடி நடித்தார். சென்னையிலுள்ள கோவில்களுக்குச் சென்று உள்ளமுருகிப் பல பாடல்களை பக்தி ரஸம் ததும்ப இயற்றிப்பாடினார். பிரபல பாடகர்கள் தமது கச்சேரிகளில் பாபநாசம் சிவனின் பாடல்களை முக்கியமாகச் சேர்த்துக்கொண்டனர். எனவே இவரது பாடல்கள் மிக்க பிரபல்யம் அடைந்தன. இவருக்கு ஹரிகதை செய்யும் ஆற்றலும் உண்டு. பல ஹரிகதைகளைச் சிறப்புற நடாத்தினார்.

பாபநாசம் சிவன் வட இந்தியாவிலும் பல இடங்களுக்குச் சென்று தமிழிசையைப் பரப்பினார். 1930 ஆம் ஆண்டு இவரது இசைப்புலமையையும் ஈடுபாட்டையும் கண்ட பெரியோர்கள் சென்னை அடையாறிலுள்ள கலாசேஷத்திரத்தில் சங்கீதம் போதிக்கும் பணிக்குத் தேர்ந்தெடுத்தனர். அங்கு அவர் சிறப்பாகச் சேவைப்புரிந்தார்.

இவர் தமிழ், வடமொழி ஆகிய இருமொழிகளிலும் சுமார் 400 இற்கும் மேற்பட்ட உருப்படிகளை இயற்றியுள்ளார். இவற்றுள் 300 உருப்படிகள் "கீர்த்தனை மாலை" என்னும் பெயரில் 3 தொகுதிகளாக வெளியிடப்பட்டன. 1934 ஆம் ஆண்டு முதற் பாடற்றொகுதி ஸ்வரஸாஹித்தியமாக வெளியாகியது. இதே ஆண்டில் சீதா கல்யாணம் எனும் படத்திற்கு பாடல்கள் இயற்றி இசையமைத்தார்.

இவர் 1935 ஆம் ஆண்டு குசேலர் பாத்திரமேற்று "பக்த குசேலா" திரைப்படத்தில் நடிக்கத் தொடங்கித் தொடர்ந்து "குபேர குசேலா", "தியாகபூமி", "பக்த சேதா" ஆகிய படங்களில் பாடி நடித்தார். திரைப்படங்களுக்குப் பாடல்கள் இயற்றி இசையமைத்தப் பணியில் பல காலம் ஈடுபட்டார். இவர் இசையமைத்த பாடல்கள் கர்நாடக இசையில் அமைந்திருந்தன.

1950 ஆம் ஆண்டு காஞ்சிப்பெரியார் "சிவபுண்ணிய கலாமணி" பட்டத்தை வழங்கினார். 1960 ஆம் ஆண்டு இந்திய நுண்கலை கழகத்தினால் "சங்கீத சாஹித்திய கலாமணி" என்ற பட்டம் கிடைத்தது. 1962 ஆம் ஆண்டு "இசைப்பேரறிஞர்" என்ற பட்டத்தைத் தமிழிசைச் சங்கம் வழங்கியது. சிவனின் இரண்டாவது "கீர்த்தனைமாலை" பாடல் தொகுதி 1965 ஆம் ஆண்டு வெளியாகியது. 1971 ஆம் ஆண்டு சென்னை சங்கீத எகடமி சிவனுக்கு "சங்கீத கலாநிதி" என்ற பட்டத்தை வழங்கியது. 1972 ஆம் ஆண்டு இந்திய அரசின் "பத்மபூஷன்" விருதும் கிடைத்தது. இவர் சில இசைநாடகங்களுக்கு இசையமைத்துள்ளார். வர்ணங்கள், கீர்த்தனைகள், இராக மாலிகைகளையும் இயற்றியுள்ளார். திரையிசையில் பாடியதன் மூலம் கர்நாடக இசையைப் பாமரர்களும் அறிந்து அனுபவிக்க வழிவகுத்தார். இவர் பிரபல்யமான இராகங்களிலும் அபூர்வ இராகங்களிலும் உருப்படிகள் இயற்றியுள்ளார். இவர் 2500 ற்க்கு மேற்பட்ட பாடல்களை 95 ற்கும் மேற்பட்ட இராகங்களில் இயற்றியுள்ளார்.

இப்படியாக இவர் பாடிய "காணக் கண் கோடி வேண்டும்" - காம்போதி, "கா வா வா கந்தா வா வா" - வராளி, ஸ்ரீ வள்ளி தேவ சேனாபதி" - நடபைரவி, "தாமத மேன்", கடைக்கண் நோக்கி", "கார்த்திகேய" - தோடி, "சரவண பவ எனும்" - சண்முகப்பிரியா என்னும் கீர்த்தனைகள் பிரபல்யமானவை. எண்ணிறைந்த பாடல்களை இனிய எளிய இசையமைப்பில் ஆக்கியதுடன் ஸ்வர ஸாஹித்தியமாக யாவரும் எளிதிற் கற்றுணரும் முறையிலும் ஆக்கியுள்ளார்.

தமிழிசைக்கு மாபெரும் தொண்டாற்றிய சிவன் அவர்கள் தனது 83 வது வயதில் 1973 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி இறைவனடி எய்தினார். இவரது புகழ் என்றும் அழியாது நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.